உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை (11.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 319



14
கட்டு மீறும் கருக்கலைப்பு



23
பாட்டியானார் இளம் பெண்



25
தேசிய மட்டத் துக்கு அழைத்து செல்வோம்

# தீர்வுப் பேச்சின் நிலை குறித்து விளக்க அமெரிக்கா விரைகிறது கூட்டமைப்பு

## சம்பந்தன் தலைமையில் குழு வோஷிங்டன் பயணம்

கொழும்பு, ஒக்ரோபர்11

தமிழர்களுக்கு துரித கதியில் காத்திரமான ஓர் அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என இந்தியாவும், அமெரிக்காவும் இராஜதந்திர ரீதியில் வலியுறுத்திவரும் நிலையில் தீர்வுப் பேச்சுக்களின் தற்போதைய நிலை குறித்து அமெரிக்காவுக்கு விளக்கமளிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசரமாக வோஷிங்டனுக்கு விரையவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கொண்ட குழு அமெரிக்கா புறப்படவுள்ளது.

வோஷிங்டனில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உயர்நிலை அதிகாரிகளைச் சந்திக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் தற்போது நடத்தப்பட்டுவரும் தீர்வுப்பேச்சுகள் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கும் எனத் தெரிகிறது. அதேசமயம் கட்சித் தலைவர் என்ற ரீதியில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் ஹிலாரி கிளின்டன் சந்தித்து இலங்கையில் தமிழர் அரசியல் பற்றி கேட்டறிவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீர்வுப்பேச்சுக்களில் கூடுதல் அக்கறை செலுத்திவரும் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இந்த பேச்சுக்களின் முன்னேற்றம், தாற்பரியம் குறித்து அவ்வப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவுபடுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் இந்த அமெரிக்க விஜயமும் அமைவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னதாக கடந்தமாதம் கொழும்பு வந்திருந்த அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் றொபர்ட்-ஓ-பிளேக் தமிழ்க் கூட்டமைப்பினரைச் சந்தித்தபோது தமிழர் பிரச்சினை குறித்து அவ்வப்போது அமெரிக்காவை அறிவுறுத்துமாறு வினயமாக வேண்டியிருந்ததாகவும், அதன் ஓர் அம்சமாகவே கூட்டமைப்பு அங்கு சென்று நிலைமைகளை விளக்குவதற்கு உத்தேசித்துள்ளதாகவும்

பக் 25

## சர்வதேச புலி ஆதரவாளருக்கு தேர்தலில் சிறந்த பதில் வழங்கியுள்ளனர் மக்கள்

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11

இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கும், அமைப்புகளுக்கும் இலங்கை மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் சிறந்த பதிலை வழங்கியுள்ளனர்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து முன்

பக் 25

## மக்கள் வெள்ளத்தின் மத்தியில் மாயவன்



அலையெனத் திரண்டு வந்த அடியார்கள் மாயவா, கோவிந்தா, கோபாலா என்ற கோஷங்களுக்கு மத்தியில் நேற்றுக்காலை தேரில் எழுந்தருளி அருட்காட்சி கொடுத்தார் வல்லிபுரமாயவன்.

வல்லிபுர ஆழ்வாரைத் தரிசிக்க, வழமையைவிட இம்முறை அதிக எண்ணிக்கையில் அடியார்கள் கூடி இருந்தனர். எங்கு நோக்கினாலும் பக்தர் கூட்டம் நாலா பக்கங்களிலும் இருந்தும் தூக்குக் காவடிகள் மற்றும் காவடிகள் வந்த வண்ணம் இருந்தன. அடியார்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி மாயவனின் அருள் பெற்றனர். (ஒ-319)

## வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் மாத்தாயிடம் தமிழர்கள் முறையீடு

கொழும்பு, ஒக். 11

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமலேயே வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொண்டு வருகிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் மற்றும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகள் இந்தியாவிடம் முறையிட்டுள்ளன. மூன்று நாள் பயணமாக இலங்கை வந்த இந்திய வெளியுறவுத்துறைச் செயலரை நேற்றுச் சந்தித்த இந்தக் கட்சிகளின் தலைவர்கள் இது குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

இலங்கை வந்த மாத்தாய் நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார். இதன்போது வடக்கு - கிழக்கில் போரின் பின்னர் அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் தமிழர்களுடனான பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட பல விடயங்கள் பேசப்பட்டன என்று மாத்தாய் பின்னர் இந்திய ஊடகவியலாளர்களிடம் கொழும்பில் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய

பக் 25

## கொழும்பு பிரதி மேயர் நியமனத்தில் ஐ.தே.கவுக்கு மற்றொரு தலையிடி

### ரணிலிடம் முறையிடுவேன் என்றார் ராம்

கொழும்பு, ஒக்.11

கொழும்பு மாநகரசபையின் பிரதிமேயராக டய்ட்டஸ் பெரேராவை நியமிக்க கட்சி எடுத்திருக்கும் தீர்மானம் தவறானது. இந்த நியமனத்தை நான் முற்றுமுழுதாக நிராகரிக்கிறேன். முஸம்மிலுக்கு அடுத்ததாக கூடுதலான விருப்பு வாக்குகள் பெற்ற ஜோன் ர்ராம் பிரதி மேயராக நியமிக்கப்படுவதையே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்த கொழும்பு வாழ் தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

இவ்வாறு நேற்று உதயனுக்குக் கருத்து தெரிவித்தார் மேல் மாகாணசபை உறுப்பினர் சி.பி.வை.ராம்.

கொழும்பு மாநகரசபையின் பிரதிமேயர் பதவிக்கு டய்ட்டஸ் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட ராம் இது பற்றி மேலும் கூறியதாவது -

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏணைய உறுப்பினர்கள் கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட அதிகமான விருப்பு வாக்குகளை ஜோன் ராம் பெற்றுள்ளார். இதன் அடிப்

பக் 25

## நிபந்தனையுடன் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்க மனோ தயார்

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தை சீராக முன்னெடுப்பதற்கு கட்சியின் ஆதரவை நிபந்தனையுடன் வழங்குவதற்குத் தயார் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து வருடங்களாக கொழும்பு மாநகர சபையிலும், மேல்மாகாண சபையிலும், நாடாளுமன்றத்திலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாம் வழங்கியதைப் போன்ற நிபந்தனை

பக் 27



புதிதாகப் பதவியேற்ற இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய், முதல் தடவையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னல் நிலவுவதற்கான சாத்தியம்.

# இந்திய மீனவர்களைத் தாக்குவதற்கு ஒருபோதும் வட பகுதி மீனவர் முனையார்

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஒக்.11

இந்திய மீனவர்களைத் தாக்குவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் வட பகுதி மீனவர்கள் முனைய மாட்டார்கள்.

அவ்வாறு தாக்கப்பட்ட சம்பவம் எதுவும் இதுவரை இடம் பெறவும் இல்லை.

வடமாகாண கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய மீனவர் சங்கப் பிரதிநிதியான அருளா னந்தம் என்பவர் தென்னிந்திய மீனவர்கள் வடபகுதி மீனவர்களால் தாக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டை முன் வைத்தார்.

வட பகுதி மீனவர்கள் பயன்படுத்தியதாக கூறப்படும் படகின் இலக்கத்தையும் அருளானந்தம் எஸ். தவரட்ணத்துக்கு வழங்கியுள்ளார்.

இது தொடர்பான செய்திகள் இணையத்தளங்களில் வெளியாகி இருந்தன.

இந்த விடயம் தொடர்பாக வட மாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் எஸ். தவரட்ணம் கருத்துக் கூறும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட பகுதி மீனவர்கள் தமது தொழிலைக் கண்ணும் கருத்துமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி கடற்றொழில் செய்வதன் காரணமாக எமது பகுதி மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது உண்மை. எனினும் இந்திய மீனவர்களை எமது மீனவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாக்க முனைய மாட்டார்கள்.

வட பகுதி மீனவர்கள் அவர்களைத் தாக்கிய சம்பவம் எது வும் இதுவரை இடம்பெறவில்லை.

பிரதேச மட்ட சங்கங்களின் ஊடாக ஆராய்ந்து பார்த்தேன். அவ்வாறு எதுவும் இடம் பெற்றதாக அறியவரவில்லை.

தென்னிந்திய மீனவர் சங்கப் பிரதிநிதி அருளானந்தம் எம்மிடம் வழங்கிய படகின் இலக்கம் எமது பகுதி மீனவர்கள் பயன்படுத்தும் இலக்கம் இல்லை.

வடபகுதி மீனவர்கள் பயன்படுத்தும் படகின் இலக்கங்களில் அவர்களது துறையின் பெயர் முன் எழுத்தாக முன்னிறுத்தி குறிப்பிடப்பட்டிருக்கும்.

பருத்தித்துறை பயன் படுத்தப்படும் படகுகளில் பி என்ற ஆங்கில எழுத்தைத் தொடர்ந்தே இலக்கம் காணப் படும் இதே நிலைமை தான் இலங்கை முழுவதும் நடை முறையில் உள்ளது.

ஆனால் அருளானந்தம் வழங்கிய படகு இலக்கம் 3302 ஆகும் .அத்துடன் படகில் லதா என ஆங்கிலத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது எமது பகுதியில் பயன்படுத்தப்படும் படகின் இலக்கம் இல்லை என்பது தெளிவு.

இதனைத் தென்னிந்திய மீனவர் அமைப்புக்கு தெரியப் படுத்தியுள்ளோம் - என்றார். (ம-14)

# அஞ்சல் தினத்தை முன்னிட்டு தபால்பெட்டி வாரம் பிரகடனம்

யாழ்ப்பாணம், ஒக். 11

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடமாகாண அஞ்சல் திணைக்களம் இந்த வாரத்தை தபால்பெட்டி வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தத் தபால்பெட்டி வாரம் கடந்த 9ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும் என்று வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் என்.இரட்ண சிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த தபால்பெட்டி வாரத்தில் தபால்பெட்டிகளை சுத்தம் செய்தல், வர்ணம் தீட்டுதல், அழகுபடுத்தல், தபால்பெட்டி உடைந்திருந்தால் அவற்றைச் சீர்செய்தல், தபால்பெட்டிச் சுற்றாடலைத் துப்புரவு செய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



ஒரு வார காலத்துக்கு வடக்கில் உள்ள அனைத்து தபால் சேர்க்கும் பெட்டிகள் இவ்வாறு தபாலக பணியாளர்களால் அழகு படுத்தப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-26)

# வேலை பெற்றுத் தருவதாக மோசடி சந்தேகநபர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஒக்.11

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறிப் பண மோசடி செய்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் நல்லூர் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது கொழும்பில் வசித்து வரும் சிறிதரன் தம்பித்துரை என்பவரே யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

நல்லூரில் உள்ள பிரபல விடுதி ஒன்றிலிருந்து வெளியே வந்த போதே சந்தேக நபர் வகையாக மாட்டிக் கொண்டார்.

சந்தேக நபருக்கு எதிராக ஏற்கனவே ஐந்து வழக்குகள் கல்கிசை நீதிமன்றில் உள்ளதாக யாழ்ப்பாண குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான சிறிதரன் தம்பித்துரை, தான் தங்கியிருக்கும் இடத்தை அடிக்கடி மாற்றி வந்துள்ளார் எனவும் பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் சந்தேகநபரைத் தேடி அலைந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சந்தேக நபர், தங்கியிருந்த விடுதியிலிருந்து வெளியே வந்த போது பாதிக்கப்பட்ட பொது மகன் ஒருவரால் மடக்கிப்பிடிக்கப் பட்டார்.

அவர் வழங்கிய தகவலின் பேரில் சம்பவ இடதுத்துக்கு வந்த யாழ்ப்பாணப் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர். (ம-14)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தம் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 11

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வல்லிபுர ஆழ்வார் கோயில் சமுத்திரத் தீர்த்தம் இன்று இடம் பெறவுள்ளது. இதனை முன்னிட்டுத் திருட்டுக்களைத் தவிர்க்கும் முகமாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது:

சமுத்திரத் தீர்த்தம் இன்று இடம்பெறவுள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு ஆலயத்தில் சனநெருக்கடி அதிகமாக ஏற்படும் பகுதிகள், ஆலய வீதிகளில் வீடியோக் கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பொது மக்கள் தங்கள் உடைமைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். திருடர்கள் வெளியிடங்களில் இருந்து வந்திருப்பது குறித்து தகவல் கிடைத்துள்ளது. வழமையை விடப் பொலிஸார் இம்முறை ஆலய வீதிகளில் அதிகமாகப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றனர்.

சிவில் உடைகளிலும் பொலிஸார் கடமையில் உள்ளனர். யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் அதுகுறித்து அருகில் நிற்கும் பொலிஸாருக்கு அல்லது பருத்தித்துறை குற்றப் பிரிவுக்கு அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ம-319)

# நிகழ்வுகள்

### நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

நவாலி மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் இரா. வசந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் கலந்துகொள்வார். (ம-302)

***

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி யரங்கில் கல்லூரி அதிபர் வ.சிறிகாந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண் கலைப்பீடத்தைச்சேர்ந்த திருமதி என். கிருஷ்ணவேணி கலந்துகொள்வார். (ம-28)

### விளையாட்டு விழா

இலங்கை மின்சார சபை ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் டி.கே.பி.யூ. குணதிலக கலந்துகொள்வார். (ம-313)

### அரங்கேற்றம்

நுண்கலைமாணி க.கண்ணதாசனின் மிருதங்க மாணவன் சத்தியதாஸ் ரவிவர்மனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவ சக்தி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (ம-313)

### குருபூசை

மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 32 ஆவது குருபூசைத் தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு மறுவன்புலோ சமாதி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் விசேட பூசை வழிபாடுகளும், பஜனைகளும் இடம்பெறவுள் ளன. (ம-313)

### அந்தர் யோகம்

யாழ்ப்பாணம், ஒக்.11

மானிப்பாய் வீதி தாவடியில் அமைந்துள்ள ஸ்ரீ இராம கிருஷ்ண சமாதியில் அந்தர் யோகம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு மிசன் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் [illegible] னை, தியானம், மங்களாரத்தி, சிறப்பு ஆன்மிக உரை என்பன இடம் பெறும். கொழும்பு இராமகிருஷ்ணமிசனின் துறவி ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரின் ''அமுத மொழிகள்'' எனும் நூலின் வாசிப்பும் இடம் பெறும். (ம-313)

### வாணி விழா

மல்லாகம் சாளம்பை விழுதுகள் சமூக அபிவிருத் திக் கழகத்தின் வருடாந்த வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய ஆசிரியை செல்வி சி.கோசலா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் க.தேவராஜா கலந்துகொள்வார். (ம-313)

### கலந்துரையாடல்

வட பிராந்திய இலங்கை பொறியியலாளர் சங்கமும், யாழ்.முகாமையாளர் சம்மேளமும் இணைந்து நடத்தும் 'வடமாகாணத்தின் கல்வித் தரத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்'' தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்க ''சைராகுயூஸ்'' பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அலெக்ஸ் தேவரஞ்சன் கருத்துக்களை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் தற்போதைய போக்குக் காரணமாக தமிழருக்கு இந்தியா மீதும் அவநம்பிக்கை ஏற்படலாம்

## மாத்தாயிடம் கூட்டமைப்பினர் கருத்துரைப்பு

கொழும்பு, ஒக்.11

மக்களுக்கு நாங்கள் பதில் சொல்ல முடியாத நிலைக்கு அரசு எங்களைத் தள்ளிக் கொண்டு செல்கின்றது.

அரசு பேச்சுவார்த்தை என்று ஒருபுறம் கூறிக்கொண்டாலும் மறுபுறம் செய்கின்ற வேலைகள் தமிழ் மக்களுக்கு அச்சத்தையே ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமன்றி கூட்டமைப்பு மீதும் ஏன் இந்தியாவின் மீதும் கூட நம்பிக்கையீனம் ஏற்படும்.

இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலர் ரஞ்சன் மாத்தாயிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எடுத்துக் கூறப்பட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய்க்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

இலங்கை அரசு பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு பிழையான செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றது. அரசு பேச்சுக்களில் எவ்வகை விருப்புடன் செயற்படுகின்றது என்ற கேள்வியும் எழுகின்றது.

பேச்சு மேசைக்கு வெளியில், அரசு தமிழர் பகுதிகளில் அவசர அவசரமாக காணிகளை மீள் பதிவு செய்கின்றது. இது இப்போதைக்கு தேவையற்றவிடயம்.

இந்தச்செயற்பாடுமக்களை குழப்புகின்றது. யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் நமது இடங்களில் மீளக் குடியமரவில்லை. இந்தியாவில் 2 லட்சம் பேர் வரையில் இருக்கின்றனர். அத்துடன் யுத்தத்தால் மக்களின் உறுதிகளும் பறிபோய்விட்டன. இவ்வாறானதொரு நிலையில் காணி மீள்பதிவு என்பது தேவையற்ற விடயம்.

இதற்கு மேலதிகமாக தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்களை பறிக்கும் முயற்சியிலும் அரசு ஈடுபட்டு வருகின்றது. முல்லைத்தீவில் தமிழர்களின் காணிகளை அரசு பறித்து சிங்கள கிராமங்களுடன் இணைத்து சிங்கள பிரதேச செயலர் பிரிவையும் உருவாக்கியுள்ளது.

இவற்றைவிட பல இடங்களில் மக்களை இன்னும் மீள் குடியமர்த்தவில்லை. சம்பூர் மற்றும் முள்ளிவாய்க்காலின் சில பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

அரசு செயற்படும் முறையைப் பார்த்தால் அது இனவாதத்தோடு செயற்படுவது போன்றே எண்ணத் தோன்றுகின்றது. அரசு உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட்டால் மாத்திரமே பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இதன் மூலம் மக்களுக்கு நாங்கள் பதில் சொல்ல முடியாத நிலைக்கு அரசு எம்மை தள்ளிக் கொண்டு செல்கின்றது.

இதுதொடருமானால் மக்களுக்கு பேச்சு மீது நம்பிக்கையீனம் ஏற்படும். அத்துடன் இந்தியாமீதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்படும்.

எனவே பிரச்சினையை தீர்ப்பதுடன் அதற்கான உரிய முறையில் கௌரவமான தீர்வும் எட்டப்பட வேண்டும் என்றும் எம்மால் தெரிவிக்கப்பட்டது.

இவையனைத்தையும் செவிமடுத்த ரஞ்சன் மாத்தாய் தான் அரச தரப்பினருடன் இது தொடர்பாக எடுத்துரைப்பதாக தெரிவித்ததாக அவர் கூறினர். (ஓ-15)

## வயோதிபப் பெண் படுகொலை

### மூவருக்கு விளக்க மறியல்

கிளிநொச்சி, ஒக்.11

வட்டக்கச்சிப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரை படுகொலை செய்து அப்பெண் அணிந்திருந்த நகைகளை களவாடியதாக குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபரையும் அவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் கிளிநொச்சி பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளை அடுத்து நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனை அடுத்து குறித்த மூவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-06)

# வடக்கின் சுகாதார மேம்பாட்டுக்கு அனைவரது பங்களிப்பும் அவசியம்

## சுகாதார வார நிகழ்வில் அமைச்சின் செயலர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.11

வடபகுதியின் சுகாதார மேம்பாட்டுக்காக சுகாதாரத் துறை மட்டுமன்றி அனைவரும் பங்களிப்பது மிக அவசியம் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதாரத் துறையின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய சுகாதார வார நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்தும் போதே ஆர். ரவீந்திரன் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி எஸ்.ஆர்.யூட் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது சுகாதார சேவையில் பணியாற்றிய சுமார் 150 பேர் கௌரவிக்கப்பட்டனர். 30 வருடங்கள் தொடர்ச்சியாக சுகாதாரத் துறையில் சேவை ஆற்றியவர்கள், சுகாதார வார நிகழ்வின் போது சிறப்பாக ஒத்துழைத்த சுகாதாரப் பகுதியினரும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 150 பேர் இவ்வாறு கௌரவம் பெற்றனர்.

இந்த நிகழ்வின் போது ஐந்து மாவட்டங்களிலுமுள்ள சுகாதார சேவைகள் பணிமனைகளின் நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சிங்கள மொழியிலான நாடகமும் இடம்பெற்றது. நிகழ்வில் சுகாதார துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள விருந்த வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி நிகழ்வில் பங்கேற்கவில்லை. (ஓ-14)

## இணைய வழி மூலம் புற்றுநோய் தொடர்பில்

# வெளிநாட்டு நிபுணர்களுடன் நேரடியாக தொடர்புகொண்டு ஆலோசனை பெற வசதி

## புதிய பிரிவு யாழ்.ஆஸ்பத்திரியில் ஆரம்பம்



இணைய வழி மூலமான புற்றுநோய் உளவள கல்வி மேம்பாட்டு நிலையமும் உலவள ஆலோசனை வழங்கும் பகுதியும் 8 இலட்சம் ரூபா செலவில் யாழ்.போதனா வைத்திய சாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன் மூலமாக அமெரிக்கா உள்ளிட்ட மருத்துவத்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள வைத்திய நிபுணர்களுடன் தொடர்புகொண்டு புற்றுநோய் கல்வி, உலவள ஆலோசனை என்பவற்றைப் பெறமுடியும். இதனால் புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வைத்தியசாலை மட்டத்தில் இதுபற்றி விளக்கத்தைப்பெறுவதும் இலகுவாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வு புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக இந்தத்திட்டத்துக்கு நிதி உதவி வழங்கிய ஹற்றன் நஷனல் வங்கியின் நிர்வாக பணிப்பாளர் ஆர்.தியாகராஜாவும், சிறப்பு விருந்தினராக இந்த வங்கியின் மனிதவள முகாமைத்துவ பணிப்பாளர் ஜே.ஆர்.பி.எம்.பைவாவும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணமும் கலந்து கொண்டனர்.

சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தநிகழ்வில் சின்மயாமிஷனைச் சேர்ந்த துறவி ஸ்ரீசைத்தன்ய சம்பிரதாயபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். விருந்தினர்களும் உரையாற்றினார்கள்.

புற்றுநோய்பிரிவு வைத்தியர்கள் இதற்கான ஏற்பாடுகளை முன்னின்று ஒழுங்கமைத்திருந்தனர். நிகழ்வில் வைத்திய சாலைப்பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், நலன்விரும்பிகள், எனப்பலர் கலந்துகொண்டனர். (ஓ-4)

# கொல்களத்தில் சமூகச் சீர்கேடு; விசாரணைக்கு நீதிவான் பணிப்பு

தென்மராட்சி, ஒக்.11

சாவகச்சேரி நகர சபையின் கொல்களக் கட்டடம் சமூகச்சீர்கேடுகளுக்குப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிபதி மா.கணேசராசா சாவகச்சேரிப் பொலிஸாரைப் பணித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் கொல்களக் கட்டடம் சமூக சீர்கேட்டுக்குப் பயன்படுத்தப்படுவதாக கடந்த மாதம் கொழும்புப் பத்திரிகையொன்றில் வெளியான கட்டுரை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர் இதனையடுத்தேஇதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான்பணித்துள்ளார்

அத்துடன் அப்பகுதி மக்களை விழிப்புடன் செயற்பட்டு பகிரங்கமாக மேற்கொள்ளப்படும் தவறுகள் சுட்டிக்காட்டப்பட வேண்டுமெனவும் தவறின் சமுதாயப் போக்கை மாற்றிவிடக்கூடிய அபாய நிலை ஏற்படும் என்பதால் இது தொடர்பான தகவல்களை உரிய அதிகாரிகளுக்கு உரிய நேரத்தில் தெரியப்படுத்தும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் நீதிவான் மா.கணேசராசா அறிவித்துள்ளார். (ம-207)

# புகுமுக மாணவர்களுக்காக 'அறிவாயில்' கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.11

ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகும். இதனை முன்னிட்டும் யாழ்.பல்கலைக்கழக புகுமுக மாணவர்களை வரவேற்கும் முகமாகவும் யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் 'அறிவாயில்' கண்காட்சி கடந்த முதலாம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இதனை எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நூலகர் தெரிவித்தார்.

பொருள்கள், புத்தகங்கள், குறுந்தகவல்கள் என சிறு முப்பரிமாணத் தோற்றம் கொண்ட அமைப்பும் ஒவ்வொரு தினம் பற்றியும் அதனது விரிவாக்கம் பற்றிய நூல்தொகுதியும், புத்தகங்கள் பாதிப்படையும் விதம், உலகப் பிரசித்தி பெற்ற நூல்களின் புகைப்படங்கள், விவரங்கள், உள்நாட்டில் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களின் இணைய முகவரிகள், கட்டமைப்புகள், பொதுவகைப்பாடு சார் தகவல் வளங்கள், ஆவணங்கள், கோவைகள் உள்ளடங்கிய புள்ளிவிவரத்தரவுகள் என்பன இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தவிர முன்னர் புத்தகங்கள் அமைந்திருந்த விதம், கல்வெட்டுக்கள், ஓலைச் சுவடிகள் என்பனவும் தனித்தனியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தகவல்களைப் பெறுவதற்கு இலகுவழியாக இந்த அறிவாயில் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பாடசாலை மாணவர்களும் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 ஒக்ரோபர் 2011 செவ்வாய்க்கிழமை



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி கல்வி வலயத்தில் நல்லாசிரியராக உலக ஆசிரியர் தினத்தன்று அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் இலங்கை சோஷலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஜனாதிபதிச் சாரணனும் எமது பாடசாலை ஆசிரியருமான மகாலிங்கம் ஜெகதீஸ்வரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன் மேலும் சிறப்புகள் பெற இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்,
கிளி / இராமநாதபுரம் கிழக்கு,
அ.த.க. பாடசாலை.

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரனும் மாணவர் முதல்வருமான அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையே வருடாந்தம் நடத்தும் மின்னல் வேகக் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.

இன்று காலை ஆரம்பமாகும் போட்டி மாலை வரைஇடம்பெறும். 4மணிக்கு 3 ஆம் இடத்துக்கான ஆட்டமும், 5 மணிக்கு இறுதியாட்டமும் இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (கு-23)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு புகழ் சேர்த்த மாணவன் செல்வன் இராசேந்திரம் ஆர்த்திகன் அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 19 மாணவர்களையும் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களான திரு.சு. அருட்செல்வம், திருமதி யோ.சின்னராசா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

01.இ.நிதுசனா-147
02.கு.அர்ச்சனா-144
03.அ.அபிரா-140
04.இ.ஆரூரன்-134
05.சு.திசாலினி-129
06.த.றொபின்சன்-128
07.ச.சிந்துஜன்-127
08.இ.சினேகா-126
09.லி.கானிலா-122
10.த.செந்தமிழ்ச்செல்வி-114
11.செ.நிவேதா-111
12.இ.இந்துசன்-111
13.நே.வைஷ்ணவி-109
14.த.மதுராகினி-108
15.வி.விதுர்சாயினி-108
16.யோ.யோன்சன்-108
17.கு.சாகித்தியா-107
18.பூ.ஆதிகன்-106
19.அ.அனுரா-100

யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை
வல்வெட்டித்துறை.

பாடசாலை சமூகம்.

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகிறது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 12.10.2011 தொடக்கம் 24.10.2011 பி.ப. 4.00 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 25.10.2011 மு.ப. 10.00 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 25.10.2011 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட்-(ICTAD) பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர் / செயலாளர்', நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்துக்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01. | பலாலி 6ஆம் குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் (ஆனை விழுந்தான்) | 2800.00 | 500.00 | M10/C10 |
| 02. | வெள்ளக்கடவை ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 5500.00 | 500.00 | M09/C10 |
| 03. | முக்குறுணி பிள்ளையார் வீதி கல்லிட்டுத் தாரிடல் | 4100.00 | 500.00 | M10/C10 |
| 04. | டிப்போ முன் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 6600.00 | 500.00 | M09/C10 |
| 05. | தபால்பெட்டி முன் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 2600.00 | 500.00 | M10/C10 |
| 06. | நாராயணா வீதி 2ஆம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 2800.00 | 500.00 | M10/C10 |
| 07. | ஆடியபாதம் வீதி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3700.00 | 500.00 | M10/C10 |
| 08. | இராமகிருஸ்ணா ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3000.00 | 500.00 | M10/C10 |
| 09. | பாற்பண்ணை 5ஆம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3700.00 | 500.00 | M10/C10 |
| 10. | கலாசாலை 2ஆம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் தொடர்வேலை | 2100.00 | 500.00 | M10/C10 |
| 11. | காளிகோயில் வீதி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3150.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

[illegible],
தவிசாளர், நல்லூர் பிரதேசசபை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக் கழகத்தின் 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A பட்டத்தைப் பெற்ற

**ஸ்ரீகாந்தன் சஞ்சிகா**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சிறுப்பிட்டி -வடக்கு,
நீர்வேலி.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, அன்ரி,
தங்கைமார் (ஜனா, கீர்த்தி).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த (06.10.2011) வியாழக்கிழமை இடம்பெற்ற 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணி (BFA) பட்டம்பெற்ற பண்ணிசைக் கலாவித்தகர்

**திருமதி ஹிமாலினி சுகந்தன்**


அவர்களைப் பாராட்டுவதோடு இவர் மேலும் பல்கலை கற்று பல பட்டங்கள் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கணேஸ் குடும்பத்தினர்.

மானிப்பாய்.

## மென்பொருள் வடிவமைப்பு — Cey Labs

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிக நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது வணிக நடைமுறைகளை வினைத்திறனாக முகாமை செய்வதற்கான மென்பொருட்கள் மிகக் குறைந்த செலவில் ஒரு சில வாரங்களில் உருவாக்கித் தரப்படும்.




WE SUPPORT YOU ACHIEVE

குறிப்பு: ரூபா 15,000 தொடக்கம் ரூபா 30,000 வரை

**CeyLabs Solutions (Pvt)Ltd.**
204,Brown Road, Jaffna.
Hot Line: 021 222 1807 General: 077 251 7223
Web:www.ceylabs.com Email:contact@ceylabs.com

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 10 |
| 02 | 10 |
| 1999 | 2008 |

செல்வி
**ரவிச்சந்திரன் வைதேகி**
(4ஆம் ஆண்டு மாணவி),
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

ஓர் ஆண்டு அல்ல
நூறு ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு மாறாது அம்மா
மீள் துயில் நிரந்தர உறக்கத்தை
தேடி நீ சென்றாயே
நீ எங்களை விட்டுச் சென்றாலும்
எம் கண்ணில்தான் அம்மா நிற்கின்றாய்:

உன் நினைவில் துடிக்கும்:
மாமா, அத்தை, அப்பம்மா,
அப்பா, அம்மா, தங்கை, தம்பி,
மச்சான்மார், மச்சான்.

பருத்தியடைப்பு,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழகத்தின் மீதான உராய்ஞ்சல் காலப் போக்கில் என்னவாகும்...?

தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி நடத்தும் தாக்குதல்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ராஜீக உறவில் பாதகமான உணர்வலைகளை உண்டாக்கும் ஆபத்தான கட்டம் ஒன்று தோன்றி வருகிறது.

மூன்று நாள் விஜயமாக இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய், அதற்கு முன்னதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்த போது, அவர் இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதல்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அழுத்தம் திருத்தமாக இடித்துரைத்திருக்கின்றார்.

இலங்கைக் கடற்படையால், தமிழக மீனவர்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்களைத் தமிழக மீனவர்கள் மீதானவை என்று மட்டும் கருதக் கூடாது. ஒட்டு மொத்தமாக, இந்தியக் குடிமக்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் என்றே அவற்றைக் கொள்ளவேண்டும். அத்தோடு, அந்தத் தாக்குதல்கள், இந்தியாவுக்கு எதிராக அதனைக் கோபமூட்டுவதற்கான செயல் என்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகக் கருதவேண்டும் -என்றும் தமிழக முதல்வர், தமது நாட்டின் வெளியுறவுச் செயலரிடம் வலியுறுத்தி உள்ளார்.

அது மட்டுமன்றி, மற்றும் இரு அயல் நாடுகளான பாகிஸ்தான், சீனா என்பவற்றால் இந்தியாவில் எல்லைப் புறங்களில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு ஒப்பானவை என்றும் தமிழக முதல்வர் ரஞ்சன் மாத்தாயிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் தமிழகத்துக்கு, தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான கடல் எல்லையில், குறிப்பாக நாகபட்டினம் மாவட்டத்தின் கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் மிகப் பல தடவைகள் துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்றும் -

இலங்கை மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்றும், இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் - இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடிப்பதில் ஈடுபடும் இலங்கை மீனவர்களுக்கு, அந்த நாட்டின் கடற்படை காவல் கண்காணிப்பு நடத்துவதாகவும் - ஜெயலலிதா தொட்டுக் காட்டியுள்ளார்.

ஆறு கோடி தமிழக மக்களின் தலைவர், அந்த மாநிலத்தின் முதலமைச்சர் ஆதாரங்களுடன் தெரிவிக்கும் தகவல்கள் பொய்யானவை, சோடிக்கப்பட்டவை என்று ஏனைய குற்றச்சாட்டுக்களைப் போன்று இலங்கை அரசு தட்டிக் கழித்துவிட முடியாது. இந்திய மத்திய அரசும் ஜெயலலிதாவின் விவரங்களை, தகவல்களைக் கனதியாகவே கருதும் என்பதில் சந்தேகம் இல்லை.

இலங்கையும் இந்தியாவும் அயல் நாடுகள். இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்களின் சந்ததியினரே இலங்கையர்கள். இது இப்போது இங்கு வாழும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் நூற்றுக்கு நூறு வீதம் பொருந்தும்.

இந்திய - தமிழக - மீனவர்கள் அத்துமீறி இலங்கையின் கடல் எல்லைக்குள் வந்து இந்த நாட்டின் கடல் வளத்தைச் சுரண்டுவதாகக் கூறி, இலங்கைக் கடற்படை அவர்களைத் தாக்குவதும் கைது செய்வதும் ஒருபுறத்திலும் -

இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில், குறிப்பாக தமிழகக் கடற்பரப்பில் அத்துமீறித் தொழில் செய்வது மறுபுறத்திலும் - தொடர்ந்து பல காலமாக நடைபெற்று வருகின்றன.

அதனை அடிப்படையாகக் கொண்டு தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் அடிக்கடி வெளிவரும் செய்திகளாகும். இந்தத் தாக்குதல்களும், கைதுகளும் இரண்டு சாராருக்கும் பொருந்தும். எனினும் இலங்கைத் தரப்பில் இருந்தே அதிகம் என்பது மறைக்க முடியாத உண்மை.

இதேவேளை, வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்று தொழில் செய்வது மிகமிகக் குறைவென்பது இங்கு பதிவுசெய்யப்பட வேண்டியதாகும். இதற்கிடையில் ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாவதற்கு முன்னர், அந்தக் கடற்பரப்பில் தொழில் செய்த தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்பரப்பில் தொழில் புரிகிறார்கள் என்பதும் மறைக்கக் கூடிய ஒன்றல்ல.

எவ்வாறெனினும், தென்னிலங்கை மீனவர்கள் தமிழகக் கடற்பரப்பில் இந்த நாட்டுக் கடற்படையினரின் பாதுகாப்புடன் தொழில்புரிவது மிகவும் பாரதூரமானதாகும்.

இன்னொரு நாட்டின் - அயல் நாட்டின் - தனது நட்பு நாட்டின் கடற்பரப்பில் தொழில் செய்வோருக்கு இலங்கை அரசாங்கமே - அதன் கடற்படையே - பாதுகாப்பு அளிப்பது, முற்றிலும் அடுத்தவர் சொத்தின் மீதான அத்துமீறலே. அதனாலேயே இந்த விவகாரத்தை இந்தியாவின் தேசியப் பிரச்சினையாக நோக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, வெளியுறவுச் செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் வலியுறுத்தி உள்ளார்.

அவர் கூறியிருப்பது போன்று, இந்தியாவைப் பொறுத்தவரை, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளின் எல்லைப் புறத்தாக்குதல் போன்றதே, இலங்கை மீனவர்களின் எல்லை தாண்டுதலும் கடற்படையினரின் அனுசரணையுடனான தொழில் ஆற்றுகையும்.

தமிழகக் கடற்பரப்புக்குள் அத்து மீறுதல் செய்து அரச தரப்பு அனுசரணையுடன் தொழில் புரிவது ஒரு வகை ஆக்கிரமிப்பு என்று கூறுவதை இலங்கை ஏற்றுக்கொள்கிறதோ இல்லையோ -

அதற்கான உள்நோக்கம் ஒன்று உண்டு என்பது மிக வெளிச்சமானதே.

ஒட்டுமொத்தத் தமிழக மக்களும் அரசும், இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதிலும், அவர்கள் அங்கு இரண்டாந்தரப் பிரசைகளாக நடத்தப்படக் கூடாது என்பதிலும் ஒத்த கருத்தியலில் உள்ளார்கள் என்பதும்-

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சியில், இந்திய மத்திய அரசு மீதான தமிழகத்தின் அழுத்தம், அனைத்து இந்திய மாநிலங்களில் மட்டுமன்றி புதுடில்லிக்கும் விரவிவிட்டது என்ற ஏக்கம் உள்ளூர வலுத்து வருவதன் விளைவே, இலங்கை தமிழ் நாட்டுடன் (இந்தியாவுடன்) மறைமுகமாக உராய்ஞ்சும் புதிய போக்கும், நோக்கும். இதன் விளைவு சாதகமானதாக எதிர்பார்க்கக் கூடியதாக அமையாது எனலாம்.

# வடக்கு மாகாண சிறுவர் வைத்தியசாலை பணிகளைத் துரிதப்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.11

வடக்கு மாகாண நவீன சிறுவர் வைத்தியசாலை நிர்மாணச் செயற்பாடு களைத் துரிதப்படுத்துமாறு வடமாகாண சுகாதார சேவைகள் திட்டப்பணிப்பார் டாக்டர் திருமதி எஸ்.ஆர்.ஜூட் கோரியுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கான சிறுவர் வைத்தியசாலை நிர்மாணம் எனும் தலைப்பில் கொழும்பு சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதத்தில்இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சங்கானைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கான சிறுவர் வைத்தியசாலைநிர்மாணிக்கப்பட வேண்டும் என்றும் அதன் அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

சிறுவர் வைத்தியசாலை விடயம் விசேட ஆஸ்பத்திரி என்ற தேவைப்பாட்டின் கீழ் முன்னிலை அமைச்சுக்களின் வரிசையில் சுகாதார அமைச்சுக்கே உரியது ஆகும்.

இதற்கான தீர்மானத்தை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் எடுக்க முடியாது. எனினும் இந்த விடயத்துக்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றும் அவர் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தைக் கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான பிரதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சங்கானைப் பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை, வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் கருத்து தெரிவிக்கையில், எதற்காக 2009 இல் சமர்ப்பித்த நவீன சிறுவர் வைத்தியசாலை விடயம் மூன்று வருடங்கள் காலதாமதமானது.

இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலும் வலுசேர்த்து இந்த திட்டம் முன்னகர உழைக்க வேண்டும்- என்றார்.

(ம-302)

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு புதிய தலைவர், செயலாளர் தெரிவாகினர்

காரைதீவு, ஒக்.11

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைவராக வி.ரி.சகாதேவராஜாவும், புதிய செயலாளராக சரா.புவனேஸ்வரனும், நிதிச் செயலாளராக எஸ்.தேவகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய ஆட்சிக்குழுப் பேரவைக் கூட்டம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் தற்காலிக தலைவர் மு.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், மேல்மாகாணம், மன்னார், வன்னி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலுமிருந்து தாய்ச் சங்க நிர்வாகிகளும், மாவட்ட, வலய கிளைச் செயலாளர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு கல்விச் சேவையிலிருந்து இறுதியாகத் தலைவராகவிருந்த நா.இராஜநாதனும், பொதுச் செயலாளராகவிருந்த த.மகாசிவமும் ஒய்வு பெற்றுள்ளதைத் தொடர்ந்து அந்தப் பதவிகள் வெற்றிடமாக இருந்தன.

அந்த வெற்றிடங்களுக்குத் தேசிய பேரவை புதிய நிர்வாகிகளை ஏகோபித்த ரீதியில் தெரிவு செய்தது.

இதேவேளை, அடுத்தமாதம் இடம் பெறவுள்ள பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் யாப்பின் படி புதியதொரு பதவிக்கு முன்னாள் செயலாளர் த.மகாலிங்கசிவம் உள்வாங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

1920 இல் தோற்றம் பெற்ற இந்தச் சங்கம் 1974.01.19 இல் தான் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. டி.எஸ்.கே.வணசிங்க, தொடர்ந்து கே.சோமசுந்தரம், வி.குமாரசாமி, த.குமர குருதாஸன், நா.இராஜநாதன் ஆகியோர் தலைவராகச் சேவையாற்றியிருந்தனர்.

தற்போது எட்டாவது தலைவராக சங்கத்தின் பிரசார செயலாளராகவிருந்த உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகா தேவ ராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் அன்றைய தினமே பதவியைப் பொறுப்பேற்று பேரவைக் கூட்டத்தையும் நடத்தினார்.

(ம-25)

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகளுக்கு அரசோ, கல்வியமைச்சோ செவிசாய்க்காது இருக்க முடியாது

## முன்னாள் பொதுச் செயலர் த.மகாசிவம்

காரைதீவு, ஒக்.11

உலகில் 195 நாடுகளில் 3 கோடி ஆசிரியர்களை உறுப்பினர்களாக கொண்டது சர்வதேச கல்வியகம். அந்த மாபெரும் அமைப்பில் இலங்கையிலிருந்து அங்கத்துவம் பெற்றுள்ள 5 ஆசிரியர் தொழிற்சங்கங்களில் ஒரேயொரு சிறுபான்மையின சங்கம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகும்.

எனவே அரசோ, கல்வியமைச்சோ எளிதில் எமது கோரிக்கைகளைச் செவிசாய்க்காமல் விட முடியாது.

சங்கத்தை வலுவான நிலைக்குக் கொண்டு வந்திருப்பதால் புதிதாக வரும் நிர்வாகிகள் இலகுவாக வழிநடத்த முடியும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து ஓய்வுபெற்றுள்ள த.மகாசிவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சங்க ஆட்சிக்குழு பேரவையில் உரையாற்றுகையில் உணர்வு பூர்வமாகக் கூறினார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் தனது ஓய்வை உத்தியோகபூர்வமாக அறிவித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இளம் தலைமுறையினரை உள்வாங்கி சங்கம் மேலும் சீரும் சிறப்போடும் கொடி கட்டிப் பறக்க வேண்டும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக 19 ஜூலை 1979 இல் தேர்தல் மூலம் தெரிவாகி 32 ஆண்டுகள் என்னால் முடிந்த சேவையாற்றியுள்ளேன்.

ஆசிரியர் சமூகத்துக்காகப் பல சாதனைகளை, கோரிக்கைகளை வென்றெடுத்தமையை இந்த தமிழ் கூறு நல்லுலகம் உணரும். அதற்காக நாம் பட்ட சோதனைகள், வேதனைகள் ஆயிரம்.

போர்ச் சூழலிலும் நாம் மௌனமாயிருக்கவில்லை. கட்டுப்பாட்டுப் பிரதேச மாணவர்களுக்காக, ஆசிரியர்களுக்காக அரசிடம் துணிந்து நின்று குரல் கொடுத்து பலவற்றைச் சாதித்திருக்கிறோம்.

இவையெல்லாம் நாம் ஒரு குழு வேலையாக ஒருமித்த நோக்குடன் ஒருங்கிணைந்து செயற்பட்டதனால் கிடைக்கப் பெற்றவையாகும்.

எனது காலத்தில் ஒத்துழைத்த சகலருக்கும் குறிப்பாக ஊடகத்துறையினருக்கும் மனமார்ந்த நன்றிகள். இது போல் புதிய சபையினருக்கும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்-என்றார்.

(ம-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் உடைந்து மூழ்கியது படகு 33 பயணிகள் மயிரிழையில் தப்பினர்

## காரைநகர் கடற்படையினர் விரைந்து காப்பாற்றினர்

யாழ்ப்பாணம், ஒக்.11

காரைநகரில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 33 பயணிகளுடன் அனலை தீவுக்குச் சென்றுகொண்டிருந்த படகு நடுக்கடலில் உடைந்து கடலில் மூழ்கியது. எனினும் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு உடனடியாக விரைந்த காரைநகர் கடற்படையினர் படகில் இருந்த 33 பயணிகளையும் பாதுகாப்பாகக் காப்பாற்றி கரை சேர்த்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

காரைநகரில் கடற்படையினர் நடத்திய இலவச மருத்துவ முகாமில் கலந்து கொள்ள அனலைதீவில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர். தமது மருத்துவப் பரிசோதனைகளை முடித்துக் கொண்டு அவர்கள் மீண்டும் படகில் அனலைதீவுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர். இதன்போது அந்தப் படகு ஊர்காவற்றுறை கடற்கோட்டைக்குச் சமீபமாகச் சென்றுகொண்டிருந்த போது பாறையில் மோதிப் படகு உடைந்தமையால் அதனுள் கடல் நீர் உட்புகத் தொடங்கியது. இதனால் பயணிகள் பீதியடைந்தனர். படகு மீண்டும் காரைநகருக்குத் திருப்பப்பட்டது. அத்துடன் நடுக்கடலில் மூழ்கிக் கொண்டும் இருந்தது. பட கோட்டி காரைநகர் கடற்படைக்கு வழங்கிய தகவலை அடுத்து கடற்படையினர் உடனடியாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வேகப் படகுகளில் விரைந்து சென்று படகில் இருந்த பயணிகளைக் காப்பாற்றி அனலை தீவுக்குப் பாதுகாப்பாகக் கொண்டு சென்றனர்.(த-7-250)



கடலில் மூழ்கும் படகையும், பயணிகளைக் கடற்படையினர் காப்பாற்றிச் செல்வதையும் படங்களில் காணலாம்.

# பவுஸர் மூலம் குடிதண்ணீர்

யாழ். மாநகரசபைப் பகுதியில் யாழ். மாநகரசபைக்குச் சொந்மான பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்.மாநகரசபையின் பிரதான நீர்த்தாங்கிக்குத் திருநெல்வேலியிலுள்ள பிரதான நீர்ப் பம்பிகளில் இரண்டு பழுதடைந்ததைத் தொடர்ந்து நீர் விநியோகம் கடந்த ஒரு மாதமாக சீரற்றுக் காணப்படுகின்றது.

இதனையடுத்து மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் பவுசர்கள்மூலம் நீர் எடுத்துச் செல்லப்பட்டு பொது நீர்க்கம்பங்கள் உள்ள இடங்களில் வைத்து விநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக மாநகர சபை நீர் வேலைப்பகுதி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மக்கள் நெருக்கமாக வாழும் நன்னீர் நிலைகள் அற்ற நாவாந்துறை, கொட்டடி, குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளில் பவுசர் மூலமான நீர்விநியோகச் சேவை நடைபெற்று வருகின்றது.

பழுதடைந்த இருநீர்ப் பம்பிகளுக்குப் பதிலாக புதிய பம்பிகளைத் தருவிக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், டிசெம்பர் மாதமளவில் நீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-135)

# வலி. வடக்கு மீளக்குடியமர்ந்த பகுதிகளில் தொடரும் திருட்டுக்களால் மக்கள் கவலை

வலி. வடக்கு,ஒக்.11

வலி. வடக்கு பகுதியில் மீளக்குடியேறிய இடங்களில் இடம்பெறும் களவுகளினால் அந்தப் பகுதி பொதுமக்கள் மிகவும் மனமுடைந்து காணப்படுகின்றார்கள்.

கடந்த இருபது வருட கால இடைவெளியின் பின்னர் மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியேறித் தமது வீடுகளைத் திருத்தி வரும் நிலையில் ஆள்கள் அற்ற நேரம் வீடுகளுக்குள் புகும் திருடர்கள் வீடுகளில் உள்ள யன்னல் கம்பிகள், மலசல கூடங்களை உடைத்து அதில் உள்ள கம்பிகள் எனப் பல்வேறு பொருள்களையும் திருடிச் செல்வதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இது சம்பந்தமாக அண்மையில் தெல்லிப்பழை பொலிஸாரினால் நடத்தப்பட்ட சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் மக்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

கடந்த வாரமும் இவ்வாறு திருட்டில் ஈடுபட்டவர்கள் கிராம அலுவலர்கள் மூலம் பிடிக்கப்பட்டுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அந்த நபர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தாது பொலிஸார் வெளியே விட்டுள்ளமையால் தொடர்ந்தும் அவர்கள் இத்தகைய திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கிராம அலுவர்கள் தெரிவிக்கின்றனர்.

தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்த விடயம் தொடர்பாக கருத்துக்கூறுகையில், தாம் மீளக்குடியேற்றப்பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நேரத்தில் கடந்த ஐந்து மாதத்தில் பலரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியதாகவும், இவர்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க போதிய ஆதாரம் இல்லாமையால் அவர்களை எச்சரித்து விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.(த-86)

# இரும்பு பாலங்களின் சறுக்கலை தடுக்க மண் கலந்த வர்ணம்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ். குடாநாட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரும்புப் பாலங்களில் ஏற்படும் சறுக்கலைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழை காலங்களில் வாகனங்களின் ஓயில்கள் பாலத்தில் விழுவதால் சறுக்கல் ஏற்படுகின்றது.

இந்தச் சறுக்கலால் பாலங்களில் திடீர்விபத்துக்கள் ஏற்பட்டு பயணிகள் காயமடைவதுடன் வாகனங்களும் சேதமடைகின்றன.

அண்மையில் மழை பெய்த பின்னர் கைதடி இரும்புப் பாலத்தில் ஏற்பட்ட சறுக்கலில் மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்தி வந்த இளைஞர் ஒருவர் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இதனைத் தடுப்பதற்கு ஏற்ற வகையில் மணல் கலந்த வர்ணம் தீட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கெனத் தென்பகுதியில் இருந்து வர்ணக்கலவைகள் எடுத்து வரப்பட்டுள்ளன. அனைத்து இரும்புப் பாலங்களிலும் இதனைப் பூசும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய இரும்புப் பாலங்களில் அண்மைக் காலமாக அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்பட்டதை அடுத்தே இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் (த-26)

# கோப்பாய் முதல் கட்டைப்பிராய் வரை வீதி அகலிப்புப் பணி துரித கதியில்

வடமராட்சி, ஒக்.11

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கோப்பாய் தொடக்கம் கட்டைப்பிராய் வரையான சுமார் மூன்று மைல் நீளமான வீதி அகலிக்கும் பணி மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றது.

இந்த வீதி அகலிக்கும் பணியுடன் வீதியில் இடையிடையே இருந்து வந்த மதகுகள், பாலங்களும் பகுதி பகுதியாக உடைக்கப்பட்டு அகலமாக நிர்மாணிக்கப்படுகின்றன. இலங்கை மின்சார சபையும் வீதியின் கரையோரத்தில் நாட்டியிருந்த உயர் அழுத்தமின் இணைப்புக்கள், நுகர்வோருக்கான மின் இணைப்புக்கள் செல்லும் மின் தூண்களைப் பின் நோக்கி நகர்த்தி வருகின்றது. தொலை பேசிக் கம்பங்கள், செல்லும் தந்திக்கம்பங்கள் இன்னமும் பின் நோக்கி நகர்த்தப்படவில்லை.

இதேவேளை கோப்பாய்க்கும் கட்டைப்பிராய்க்கும் இடையில் வீதி அகலிக்கப்படுவதால் வீதியின் இருமருங்கிலும் உள்ள வீடுகள், கட்டடங்களுக்கு அமைக்கப்பட்டிருந்த மதில்சுவர்கள் இடிக்கப்பட்டு மதில்களும், வேலிகளும் அப்புறப்படுத்தப்பட்டு அதற்குப்பதிலாக முட்கம்பி வேலிகளும் பின் நோக்கி அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

அகலிப்புப் பணியினால் பகல் வேளையில் இந்த வீதியில் போக்குவரத்து நெருக்கடி இருந்து வருகின்றது. (238)

# ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்ய பனை ஓலையில் நகைப் பெட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.11

பனை அபிவிருத்திச் சபை பல்வேறு விதமான பனம் பொருள்களை நவீன முறையில் உற்பத்தி செய்து சந்தைப் படுத்தி வருகின்றது. மிகவும் நேர்த்தியான முறையில் நுணுக்கமான வேலைப்பாடுகளைக் கொண்டவையாக உற்பத்திகள் வெளிவருகின்றன.

அந்த வரிசையில் முதல் முறையாக நகை ஆபரணங்களை வைப்பதற்கான பெட்டி ஒன்றைப் பனை அபிவிருத்திச் சபை வடிவமைத்துள்ளது. ஆஸ்திரேலியா நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காக முதல் கட்டமாக 500 நகைப்பெட்டிகளைப் பனை அபிவிருத்திச் சபை வடிவமைத்துள்ளது. பனை ஓலையினால் பின்னப்பட்டவையாக இந்த நகைப் பெட்டி வட்ட வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலைப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

6 அங்குல விட்டமும் 8 அங்குல உயரமும் உடையதாக இந்த நகைப்பெட்டி தயாரிக்கப் பட்டுள்ளது. பனை அபிவிருத்திச்சபை உருவாக்கியுள்ள ''சிறு சுவடுகள்'' என்ற அமைப்பினால் மிக நேர்த்தியாக இந்தப் பெட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபை உருவாக்கியுள்ள 'சிறு சுவடுகள்' அமைப்பிலுள்ள ஒருவரினால் எட்டு மணித்தியாலத்தில் இரண்டு நகைப் பெட்டிகளை உற்பத்தி செய்ய முடிகிறது.

சிறுசுவடுகளினால் உற்பத்தி செய்யப்படும் நகைப்பெட்டி ஒன்றைப் பனை அபிவிருத்திச் சபை 500 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கின்றது. அவையே ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப் படவுள்ளன.



வடிவமைப்புக்கான கல்விக் கழகம் என்ற அமைப்பின் ஏற்பாட்டிலேயே இந்த நகைப் பெட்டிகள் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

பனம் பொருள் உற்பத்திகள் லண்டன், கனடா,ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு தற்போது ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 காணிப் பதிவுப் படிவங்கள் ஒரு மணி நேரத்தில் விநியோகம்

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

தென்மராட்சி, ஒக்.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரு மணித்தியாலத்தில் 10 ஆயிரம் காணிப் பதிவுப் படிவங்கள் அந்தந்தக் கிராம அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

காணிப் பதிவுகள் மேற்கொள்ளுமாறு காணி ஆணையாளரினால் அறிவித்தல் விடுக்கப்பட்டதை அடுத்து தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் படிவங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இந்த நிலையில் பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளிலும் காணிப் பதிவுப் படிவங்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து மக்கள் கிராம அலுவலர் அலுவலகத்தில் திரண்டிருந்தனர்.

கிராம அலுவலர்களால் பதிவுகள் மேற்கொண்டு படிவங்கள் விநியோகிக்கத் தொடங்கி ஒரு மணி நேரத்தில் கிராம அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்ட அனைத்து படிவங்களும் தீர்ந்துபோயின. முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு படிவங்கள் பெறச்சென்றோரை நாளை மறுதினம் வியாழக்கிழமை வருமாறு திருப்பி அனுப்பப்பட்டனர்.

பிரதேசத்தில் அரச காணித் துண்டங்கள் ஆயிரத்து 600 உட்பட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படிவங்கள் தேவையான போதும் முதல் கட்டமாக காணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 10 ஆயிரம் படிவங்களே நேற்று விநியோகித்துத் தீர்க்கப்பட்டன.

கையிருப்புத் தீர்ந்தவுடன் கிராம அலுவர்கள் புதிய படிவங்கள் பெற பிரதேச செயலகத்துக்கு வந்து நேற்று படிவங்கள் வராததால் பொதுமக்களைச் சமாளிக்க அலுவலகங்களுக்கு மீண்டதைக் காண முடிந்தது. (த-207)

# வடமராட்சி வடக்குக் கடலில் வான் தோண்டும் பணி நிறுத்தம்

## மீனவர்கள் பெரும் சிரமம்

வடமராட்சி, ஒக்.11

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் பொலி கண்டி தொடக்கம் முனைவரையான பகுதியில் வான் தோண்டும் பணி இடைநிறுத்தப்பட்டதால் தோண்டப்பட்ட வான்கள் கற்கள், மணல்களால் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மீனவர்கள் இயந்திரப்படகுகள், கட்டுமரங்களை கடலுக்குள் கொண்டுசெல்லவும், அங்கிருந்து கரைக்கு மீனைக் கொண்டு வருவதற்கும் பயன்படுத்தப்படும் வான்களை ஆழமாகத் தோண்டும் பணி வடமராட்சி கடற்பிரதேசத்தில் தொண்டமானாறு தொடக்கம் பொலிகண்டி வரை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

பொலிகண்டி தொடக்கம் முனைவரையான 9 இடங்கள் வான் தோண்டப்படாமல் இருந்தன. இவற்றைத் தோண்டித்தருமாறு மீனவர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல் காலத்தின்போது அவைதோண்டப்பட்டன. எனினும் வான்கள் தோண்டும் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

அரை குறையாக வான்கள் தோண்டப்பட்டதனால் தோண்டும்போது அள்ளப்பட்ட கடல் மண், முருகைக்கற்கள் அவற்றுக்கு அருகில் குவிக்கப்பட்டுள்ளன.

கடலில் வந்து செல்லும் அலைகள் மற்றும் மழையினால் கடல் மண்ணும், முருகைக்கற்களும் அள் ளுண்டு தோண்டப்பட்ட வான்களுக்குள்ளேயே மீண்டும் சேர்வதனால் அரை குறையாகத் தோண்டப்பட்ட வான்களும் மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் மழைக்கு முன்னர் பொலிகண்டி முதல் முனை வரையுள்ள 9 வான்களை மீளவும் தோண்டி கடல் மண், முருகைக்கற்களையும் அப்புறப்படுத்தினால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இயந்திரப்படகுகள் கட்டுமரங்களை கடலுக்குள் கொண்டு சென்று மீளவும் கரைக்குக் கொண்டுவந்து சேர்ப்பது இலகுவாக இருக்கும் என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(த-236)

# யாழ். ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிக்கு நேற்று 300 பைந்து இரத்தம்!

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று முன்தினம் குருதிக் கொடையாளிகள் பலர் மனமுவந்து இரத்த தானம் செய்திருந்தனர். அன்றையதினம் மட்டும் 300 பைந்து இரத்தம் சேமிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் தற்போது போதியளவு இரத்தம் வங்கி யில் கையிருப்பில் இருப்பதால், குருதிக் கொடையாளிகள் உடனடியாக இரத்தத்தை வழங்காமல் சற்றுத் தாமதித்து கொடுத்தால் நல்லது என்று இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் தாரணி குருபரன் நேற்றுத் தெரிவித்தார். (ஒ)

கலை ஆர்வம்...



கண்கவர் நிகழ்வு: வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம் நடத்திய கலை இலக்கிய விழாவில் மாணவர்கள் நிகழ்த்திய நாட்டிய நிகழ்வு. (த-236)

# அச்சுவேலி, நெல்லியடிப் பொலிஸ் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.11

அச்சுவேலி, நெல்லியடிப் பொலிஸ் நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டடங்களை நிறுவுவதற்குப் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தற்பொழுது தனியார் கட்டடங்களிலும் வீடுகளிலும் செயற்பட்டுவரும் அச்சுவேலி, நெல்லியடிப் பொலிஸ் நிலையங்களின் செயற்பாட்டுக்குப் பொருத்தமான நிரந்தரக் கட்டடங்கள் நிறுவப்படவுள்ளன.

நிரந்த கட்டடங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான அரச காணித் துண்டுகளை கண்டறிவதில் பொலிஸ் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இந்த வகையில் வலி.கிழக்கு மற்றும் கரவெட்டிப் பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொண்டு பொலிஸ் நிலையத்துக்கான கட்டடத்தை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான அரச காணிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. பிரதேச செயலர்கள் காணி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு காணிகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணித்துள்ளனர்.

"பொலிஸ் நிலையங்களுக்கான கட்டட நிர்மாணத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் கட்டடத்துக்குப் பொருத்தமான காணி கண்டறியப்படாமல் இருப்பதால் பணிகள் தாமதப்படுவதாகவும், காணிகள் தெரிவு செய்யப்பட்டதும் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகலாம் எனப் பொலிஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-11)

# சித்த மருந்து உற்பத்தி நிலையத்துக்கு அடிக்கல்

## அமைச்சர் சாலித்த வருகிறார்

கைதடி அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலையில் இரண்டு மாடிகளைக்கொண்ட நவீன சித்த மருந்து உற்பத்திக்கான நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. சித்த மருத்துவத் துறையை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. சுதேச வைத்திய அமைச்சர் சாலித்த திஸநாயக்க இதற்கான அடிக்கல்லை நடவுள்ளார்.

இந்த நிகழ்வில் சுதேச வைத்திய பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க, சுதேச அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும், யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறையினருடனான கலந்துரையாடலும், பரம்பரை வைத்தியர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெறும் என ஆயுள்வேத ஆணையாளர் பீ.எஸ்.ஆர். கே.வீரக்கோன் அறிவித்துள்ளார். (த-288)

# யாழ். பாடசாலைகளில் விரைவில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டி

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

அச்சுவேலி, ஒக்.11

மாணவர்களின் பிரச்சினைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக விரைவில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டிகள் பாடசாலைகளில் பொருத்தப்படவுள்ளன. பொலிஸார் நாளாந்தம் முறைப்பாடுகளை சேகரித்து நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

இவ்வாறு கூறினார் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நில் தளுவத்த.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள 7 பொலிஸ் நிலையங்களினாலும் பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டி, பேச்சுப் போட்டி என்பவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

பரிசளிப்பில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தொடர்ந்து உரையாற்றும் போது:

கடந்த முப்பது வருடங்களாக வடபகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலை மறைந்து கடந்த மூன்று வருடங்களாக அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. இந்த சூழ்நிலையில் சிறுவர்கள், மகளிர் தொடர்பான பிரச்சினை பெரும் பிரச்சினையாக நிலவுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சகல தரப்பினரும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

சிறுவர், மகளிர் துன்புறுத்தப்படுகின்ற சூழ்நிலை அகற்றப்பட வேண்டும். இந்த வகையில் தான் சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், மகளிர் பிரிவு விசேட பிரிவாக அமைக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மகளிர், சிறுவர்கள் மட்டத்தில் ஏற்படுகின்ற துன்புறுத்தல்கள் மற்றும் நடைமுறைக்கு ஒவ்வாத செயல்கள் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும். பொலிஸார் உரிய முறையில் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள்.

சிறுவர் தங்களுக்கு ஏற் படுகின்ற பிரச்சினைகளை பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். இந்த வகையில் பாடசாலைகளில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டிகள் இணைப்புச் செய்யப்படவுள்ளன. நாளாந்தம் பொலிஸார் முறைப்பாடுகளைச் சேகரித்து அதற்குரிய தீர்வினைக் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

மாணவர்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவது ஆத்மீக வாழ்வுக்கு வழிப்படுத்தும் குரோத சிந்தனைகளை இல்லாமல் செய்யும் எனக் கூறினார். (த-11)

# உதைத்து விழுத்தி சங்கிலி அறுத்த திருடன்

யாழ்ப்பாணம், ஒக். 11

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபரை காலால் உதைத்துவிட்டு 3 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றார் ஒருவர்.

இந்தச் சம்பவமானது அண்மையில் சாவகச்சேரி புத்தூர் வீதியில் கனகன்புளியடிச் சந்திக்கு அருகாமையில் நடை பெற்றது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஒருவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு பறிபோயுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாடசாலை அதிபர் முறையிட்ட போது பொலிஸ்மா அதிபர் நேரடியாகச் சென்று பொதுமக்களை விசாரணை செய்துள்ளார். (த-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பதிவு தொடர்பான கூட்டமைப்பின் நடவடிக்கைக்கு நாம் முழுமையானஆதரவு

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக். 11

காணிகள் பதிவு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் அமைப்பும் முழு மையான ஆதரவு வழங்கும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த செய்திக் குறிப்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

காணிப் பதிவு விவகாரம் இன்று மிகப் பெரிய பிரச்சினையாக அமைந்துள்ளது. வடபகுதி மக்கள் இது பற்றி மிகவும் கவலையுற்றுள்ளனர். இடம்பெயர்ந்த வடபகுதி மக்களிடமிருந்து தொலைபேசி அழைப்புக்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. என்னால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதம் பெரிதாக எதையும் சாதிக்கப்போவதில்லை. ஓர் உறுதியான நடவடிக்கையே இன்றைய தேவையாகும்.

காணி சம்பந்தமான விவரங்களை வழங்காது பகிஷ்கரிக்க வேண்டும் என்ற பிரசாரத்தை ஆரம்பிப்பதாக பரிசீலித்துக் கொண்டிருந்த வேளையில், ஒரு சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கக் கூடும் என அஞ்சி எனது ஆலோசனையை நிறுத்தி வைத்துள்ளேன். நீங்கள் இந்த விடயம் சம்பந்தமாக அரசுடன் நடத்துகின்ற பேச்சில் ஏற்கனவே முடிவுஎடுத்திருக்கக் கூடுமென கருதி உங்களுடைய நிலைப்பாட்டை அறியாது எந்தவித நடவடிக்கையையும் எடுக்க நான் தயங்குகின்றேன்.

இதைப் பகிஷ்கரிக்கின்ற எண்ணம் அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதாக இருப்பின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் அமைப்பும் எமது முழு ஆதரவையும் தரத் தயாராக உள்ளோம். அத்தகைய திட்டம் எதுவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இல்லையெனில் இது சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை எமக்களிக்குமாறு வேண்டுகின்றேன். எமக்கு ஏற்பட்டிருக்கும் அச்சத்துக்குக் காரணம் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற எமது கட்சியின் மாநாட்டில் தமிழரசுக் கட்சி மட்டும் கலந்துகொள்ளாமையே ஆகும்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் அமைப்பும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு பூரணமான ஆதரவைத் கொடுத்திருந்தது. இந்த அமைப்புக்களின் வேட்பாளர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ளடங்கியிருந்தனர். ஆனால் துரதிருஷ்ட வசமாக இது வரை தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய அமைப்புக்களின் ஆதரவாளர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஆதரவை நீங்கள் ஏற்றுக் கொண்டதாகவோ, அல்லது அந்தச்செயலை மெச்சியதாகவோ இன்று வரை தெரிவிக்கவில்லை.

நீங்கள் அரசுடன் பேசுகின்ற விடயங்களை உங்களுடைய குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மறைக்க வேண்டுமா என மிக ஆர்வத்துடன் கேட்க விரும்புகின்றேன். என்னை இணைத்துக் கொள்ளவில்லையென்று நான் முறைப்பட வரவில்லை. ஆனால் நான் அறிய விரும்புவது அரசுடனான உங்களுடைய பேச்சுக்கு இடையூறு ஏற்படுத்தாது எவ்வாறான விடயங்களில் என்னைப் போன்றவர்கள் தலையிடலாம் என்று அறிய விரும்புகின்றேன் - இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)




சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தின் பெயர் வளைவை வடமாகாண அஞ்சல் நாயகம் என்.ரட்ணசிங்கத்தால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. பெயர்வளைவுக்கு அருகில் கலந்துகொண்ட விருந்தினர்கள் நிற்கின்றனர். (311-23)

# மாநகர சபை உறுப்பினர் விந்தனால் முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களுக்கான இந்த ஆண்டுக்குரிய நிதியில் இருந்து மாநகரசபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிக்கு மூன்று மின் விசிறிகள், பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலய முன் பள்ளிக்கு 25 கதிரைகள் ஐந்து வட்ட மேசைகள், ஒரு மின்விசிறி என்பவற்றை மேற்படி சனசமூக நிலையப் பிரதிநிதிகளிடமும் முன்பள்ளி ஆசிரியர்களிடமும் வழங்கியுள்ளார்.

யாழ்.மாநகர சபை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் தமக்குரிய நிதியில் புங்கன்குளம் வீதி, நவநீதன் ஒழுங்கை புனரமைப்புக்கு ரூபா இலட்சத்து 50 ஆயிரமும் அரியாலை பொதுச்சந்தை, அரியாலை சனசமூக நிலையத்தின் 2 பொதுக் கிணறுகள் என்பவற்றை மூடி அமைப்பதற்கு ரூபா 5 லட்சத்து 25 ஆயிரமும் நிதி ஒதுக்கியுள்ளார். குறிப்பிட்ட இரண்டு வேலைத் திட்டங்களும் தற்போது இடம் பெறுகின்றன. யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் முன்பள்ளிக்கு முன்னதாக ரூபா 40 ஆயிரம் பெறுமதியான தளபாடங்களும் மின் விசிறியும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-7)

முதல் வருட நினைவுகள்

மண்ணகம்
19.04.1948

விண்ணகம்
23.09.2010



அமரர்

சின்னப்பொடியன் இரத்தினம்

(S.R. Building Contractor)

திதி: பூரணை (11.10.2011)

வருடம் ஒன்று ஓடி விட்டது
வருடும் நினைவுகளோ
கணம் தோறும் மீட்டிப் பார்க்கிறது
உருவம் தான் மறைந்தது
உள்ளத்து உணர்வுகள்,
நினைவுகள், கனவுகள் யாவும்
நீங்களாகவே நீக்கமற நிற்கிறீர்கள்,
அன்புத் தெய்வமே! ஆண்டொன்றில்
அஞ்சலிப் பாக்களால் அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி வடக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

காலத்தால் காவியமாகிவிட்ட கண்ணியப் புதல்வி
கட்டப்பிராய் ஊர்தந்த கலைமகள்

செல்வி
பாலசுப்பிரமணியம்
அர்ச்சனா

திதி: பௌர்ணமி (11.10.2011)

அன்னை மடியில்:
10.04.1986

ஆண்டவன் அடியில்:
17.10.2005



ஆடிப் பாடி எங்கள் அருகிலே இருந்து - நல்ல
கோடி கோடி கற்பனைகள் தந்துவிட்டு
பாடிப்பறந்த எங்கள் அர்ச்சனா அம்மா- உன்னை
தேடி நாம் ஆறாம் ஆண்டில் கும்பிட்டே
நினைவு கூருவோம்.

எங்கள் பாசத்தின் குலவிளக்கை
நேசத்தோடு நினைவுகூரும்
குடும்பத்தினர்.

விளையாட்டரங்க வீதி,
கட்டப்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சை எடுப்பவர்கள் திட்டமிட்டுக் கொல்லப்படுகின்றனர்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு


கொழும்பு, ஒக்.11

இலங்கையில் திட்டமிட்ட வகையில் பிச்சை எடுப்போர் கொலை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குரல் எழுப்பியுள்ளது.

கடந்த சில மாதங்களாக இலங்கையில் இந்தக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இறுதியாக கடந்த நான்காம் திகதி களனியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒரு பிச்சைக்காரர் கொல்லப்பட்டிருந்தார்.

இவருடன் சேர்த்து கடந்த 3 மாதங்களில் 8 பிச்சைக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. நகரை அழகுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டிலும் கொழும்பு நகரில் பிச்சை எடுப்போர் கொல்லப்பட்டமையை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஆணைக்குழு கோரியுள்ளது.



இலங்கைக்கு வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மாத்தாய், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் நேற்று திங்கட்கிழமை பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

# ஜனாதிபதி மீதான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது தேர்தல்

## உயர்கல்வி அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு,ஒக்.11

சகல இன மக்களும் ஜனாதிபதி மீது கொண்டுள்ள நம்பிக்கை இந்தத் தேர்தலில் புலனாகியுள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக அரசு முன்வைத்த யோசனைத் திட்டத்தை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் சுமத்தி வந்த குற்றச்சாட்டுக்களுக்கு மக்கள் பதிலளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் கட்சி ஈட்டியுள்ள அமோக வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச)

# பிரிட்டனில் கல்லூரிக்கு மூடுவிழா இலங்கை மாணவர் 400 பேர் பாதிப்பு

கொழும்பு,ஒக்.11

பிரிட்டனில் திடீரென ஏழு கல்லூரிகள் மூடப்பட்டதனால் இலங்கை மாணவர்கள் 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் பிரிட்டன் பிரதமரின் வாசஸ்தளத்துக்கு எதிரில் கடந்தவாரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கல்வியைத் தொடர்வதற்குத் தேவையான விசா ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு பிரதமரிடம் மாணவர்கள் கோரியுள்ளனர். இது தொடர்பில் பிரதமரின் பெயருக்கு எழுதப்பட்ட மனுவொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகள் மூடப்பட்ட நிலையில் இந்த மாணவர்களின் விசாக்கள் தன்னிச்சையாகவே ரத்தாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு மாணவர்கள் வாரமொன்றில் பத்து மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்ய முடியும் என்ற புதிய நிபந்தனை மாணவர்களை பெரிதும் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர் விசாவில் பிரிட்டன் சென்ற பலர் 1.5 மில்லியன் ரூபாவிற்கு மேல் கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், மூடப்பட்ட கல்லூரிகளிலிருந்து கட்டணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பாரத லக்ஷ்மனும் துமிந்தவும் ஆயுதங்கள் பயன்படுத்த அனுமதி வழங்கியது யார் ?

## அரசிடம் கேட்கிறார் திஸ்ஸ



ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பாளர் துமிந்த சில்வாவும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். ஆயுதங்களைப் பயன்படுத்த அவர்களுக்கு மட்டும் அரசு அனுமதி வழங்கியுள்ளதா - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவர்களுடன் துப்பாக்கி சகிதம் பாதாள உலக குண்டர்கள் இருந்துள்ளனர் என்று மக்கள் கூறுகிறார்கள். அவ்வாறெனின் ஆயுதங்களைப் பயன்படுத்த அவர்களுக்கு மட்டும் அரசு அனுமதிப்பது ஏன்? சம்பவம் குறித்து தீவிர விசாரணை அவசியமாகும்.

முல்லேரியாவ சம்பவத் தில் உயிரிழந்தவர்களுக்காக நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இருவருக்கு இடையிலான பிரச்சினையில் அவர்களைச் சார்ந்தோர் கொல்லப்படுவது வருத்தத்துக்குரியது. இந்தச் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை அவசியமாகும்.

கொலன்னாவை, முல்லேரியா பகுதியில் வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று பவ்ரல் அமைப்புப் பலமுறை சுட்டிக்காட்டியது. எனினும், அரசு அதனைக் கருத்திற்கொள்ளவில்லை.

அதனால் என்ன நடந்தது? அரச துப்பாக்கிகளைப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது பாரதூரமான விடயமாகும்.

அரசு இதுதொடர்பில் பக்கச்சார்பற்ற முறையிலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ச-சி)

# தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கிறது தொழில் அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஒக் 11

அரச சேவையாளர்கள் தொழில் அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

இந்தத் தகவலை அந்தச் சங்கத்தின் உப தலைவர் ஐ.பி. கமகே வெளியிட்டுள்ளார். குறித்த சங்க தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினைக்கு தீர்வுக் காணப்படாமை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சம்பள உயர்வு தொடர்பான பிரச்சினை அரச சேவையாளர்கள் தொழில் அதி காரிகள் சங்கத்துக்கு மட்டும் உள்ளதாகக் கருத முடியாது என்று தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், அனைத்து சேவையாளர்களதும் சம்பளப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகக் கலந்துரையாடப்படும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

# பொலிஸ் நிலையத் தாக்குதல்; 25 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு,ஒக்.11

தொம்பே பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இந்த சந்தேகநபர்கள் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான மெக்ஸி புரொக்டர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பொலிஸார் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் உயிரிழந்த சம்பவத்தை மையப்படுத்தி பிரதேச மக்களால் தொம்பே பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்டது.

பொலிஸ் தடுப்பிலிருந்த இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தொம்பே பொலிஸ் நிலையத்தின் 5 உத்தியோகத்தர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# புலி ஆதரவு அமைப்புகள் குறித்து தீவிரமாக கண்காணிக்கிறது அரசு

## பாலித கொஹன்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

யுத்தம் வெற்றிக்கொள்ளப்பட்ட போதிலும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு பிரசாரங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரசாரங்களினால் இலங்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது - என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் இயங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் குறித்து அரசு விழிப்புடன் கண்காணித்து வருகிறது.

விடுதலைப்புலி ஆதரவாளர்கள் அதிகளவு பொருள் செலவில் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். சில சர்வதேச நாடுகளின் அனுதாபத்தையும் அவர்கள் திரட்டியுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிரான போலிப் பிரசாரங்களால் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் இடம்பெற்ற இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், உலக தீவிரவாதத்திற்கு எதிராக சர்வதேச நாடுகள் அணி திரள வேண்டியது அவசியமாகும்.

தீவிரவாத அமைப்புகளுக்கு இடையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு உள்ளது. இதனால் சர்வதேச ரீதியில் கூட்டாக இணைந்து பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வேண்டும் - என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 ஒக்ரோபர் 2011 செவ்வாய்க்கிழமை

# கிளிநொச்சி பாடசாலையில் மாணவர்களிடம் ஆசிரியர்தின நிகழ்வுக்குப் பணம் சேகரிப்பு

கிளிநொச்சி, ஒக்.11

கிளிநொச்சி அம்பாள்குளத்தில் இயங்கி வரும் பாடசாலையொன்றில் ஆசிரியர் தின நிகழ்வுக்காக மாணவர்களிடம் மாணவத் தலைவர்கள் 250 ரூபா பணம் சேகரித்ததாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பணத்தைச் செலுத்த முடியாத சில மாணவர்கள் பணத்தைக் கொண்டு வருமாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பணத்தைச் செலுத்த முடியாத மாணவர்கள் கடந்த 8 ஆம் திகதி இந்தப் பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர்தின நிகழ்வுகளில் பங்குபற்றவில்லையெனவும் சில பெற்றோர்கள் கூறிக் கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாள்குளம், கிருஷ்ணபுரம் போன்ற பகுதிகளில் இருந்து மேற்படி பாடசாலைக்கு மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றார்கள். இங்கு வசிக்கும் மக்களில் பெரும்பாலானோர் மிகவும் கஷ்டப்பட்டவர்கள். இவர்களது பிள்ளைகளிடம் திடீரெனப் பணம் கேட்டால் அவர்கள் எங்கே போவார்கள் எனக் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட பணத்தைக் கட்ட முடியாததால் தமக்குக் கல்வி கற்பித்து வரும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுக்குச் சென்று ஒரு மலர் மாலை கூட அணிவிக்க முடியவில்லையே எனக் கூறிப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கவலைப்படுகின்றனர். (க-426)

# மன்னார் பொது வைத்தியசாலையில் நூற்றுக்கணக்கானோர் குருதிக்கொடை

மன்னார், ஒக்.11

மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குருதிக் கொடை நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது.

தேசிய சுகாதார வாரத்தின் இறுதிநாள் நிகழ்வாகவே இந்த குருதிக்கொடை நிகழ்வு இடம் பெற்றது. மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர். மேலும் மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம். எச். எம். ஆசாத் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். பரீட், பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள், வைத்தியசாலை ஊழியர்கள் என நூற்றுக் கணக்கானோர் இரத்ததானம் செய்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் இரத்தத்தின் தேவையும் அதிகரித்துள்ளது. (க-601)

# வவுனிக்குளம் பிரிவுகளில் நீர்ப்பாசனக் கூட்டங்கள்


அக்கராயன்,ஒக்.11

வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பிரிவில் காலபோக வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் தொடர்பான கூட்டங்கள் நாளைய தினம் முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் தலைமையில் பல்வேறு இடங்களிலும் நடை பெற விருக்கின்றன.

இதன் பிரகாரம் தேறாங்கண்டல் குளப் பிரிவுக்கான கூட்டம் அன்றைய தினம் பி.ப. ஒரு மணிக்கு தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலையில் நடைபெறும்.

மருதங்குளம், பழைய முறிகண்டிக் குளம், ஐயன்கன்குளம் ஆகிய பிரிவுகளுக்கான கூட்டம் ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலையில் பிற்பகல் 2.30 மணிக்கும், கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம், தென்னியன் குளம் ஆகிய பிரிவுகளுக்கு பிற்பகல் 3.30மணிக்கு கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலையிலும், பிற்பகல் 4.30 மணியளவில் கல்விளாங்குளம் அ.த.க.பாடசாலையில் கல்விளான் குளம் பிரிவுக்கான கூட்டமும், மல்லாவி பொதுநோக்கு மண்டபத்தில் மாலை 5 மணிக்கு மல்லாவிக்குளம் பிரிவுக்கான கூட்டமும், பனங்காமம் குளப்பிரிவுக்கான கூட்டம் பி.ப.5.30 மணியளவில் பனம்காமம் அ.த. க.பாடசாலையிலும் நடைபெற விருப்பதாக வவுனிக்குளம் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் செ.சுபாகரன் அறிவித்துள்ளார். (க-410)

நுளம்புகளுக்கு சமாதி.....




அவசியமான விழிப்புணர்வு- தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு நுளம்புக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு ஊர்வலமொன்று மன்னாரில் இடம்பெற்றபோது டெங்கு நுளம்புத் தடை இயக்கப் பணியாளர்கள் ஊர்வலமாகச் செல்கின்றனர். (க-601)

# வாய்ப்பாடு மனனப் போட்டி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளைக் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனப் போட்டியின் முடிவுகள் வருமாறு:

முதலாமிடம்: கெனிகலிஸ்ரஸ் கனிஸ்ரலா- பளை மத்திய கல்லூரி, ரகுநாதன் சுதர்னா- கிளி/ தர்மக்கேணி அ.த.க.பா, குமார் கணதீபன் அனற்மரீனா- கிளி/ இயக்கச்சி அ.த.க.பாடசாலை.

இரண்டாமிடம் - சிவானந்தராஜா தர்சிகா - தர்மக்கேணி அ.த.க. பாடசாலை, மகேசன் தியாகேஸ்வரன் - இயக்கச்சி அ.த.க.பா, கணேசலிங்கம் வினோஜன்- மாசார் அ.த.க.பா.

மூன்றாமிடம்: நாகநாதன் நதியா- முகாவில் அ.த.க.பா., சுந்தரமூர்த்தி ரேஜனன்- பளை மத்திய கல்லூரி, பாக்கியநாதன் மேனன்- பளை மத்திய கல்லூரி. (க-405)

# 'பிரதீபா பிரபா' விருது பெற்ற கிளிநொச்சி அதிபர்கள், ஆசிரியர்கள்

கிளிநொச்சி, ஒக்.11

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சால் ' ஆசிரியர் பிரதீபா பிரபா' எனும் விருது வழங்கும் விழாவில் விருது பெறுவதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து நான்கு அதிபர்களும் 11 ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளனர்.

அதிபர்கள்-

மாணவர் தொகை -1-200- திருமதி த.கனகசபை - (ஞானிமடம் அ.த.ப. பா).

201- 300 - திரு. வ. ஜீவரட்ணம்- (பளை றோ.க.த.க. பாடசாலை).

301-1000- தி.வரதன் (முருகானந்த ம.வி).

1001- 2000- ச.பூலோகராசா (தருமபுரம் ம.வித்தி).

ஆசிரியர்கள்

மாணவர் தொகை- 1-200 - திருமதி சி.கணேசநாதன்- (கேவில் வயல் சி.சி. த.க.பாடசாலை), மு.கண்ணகுமார்- (மாசார் அ.த.க.பாடசாலை).

201- 300 - செல்வி அ.மிக்கேல்- (பளை றோ.க.த.க.பாடசாலை), திருமதி இ.அருணாசலம்- (உருத்திரபுரம் ம.வித்தி), திருமதி வி.குலஞானசுந்தரம் உருத்திரபுரம் ம.வி.).

301- 1000 - திருமதி வி. சந்திரன்- (பிரமந்தனாறு ம.வித்தி), ம.ஜெகதீஸ்வரன்- (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை), ம.மரியராசா (வேரவில் இந்து ம.வித்தி).

1001 - 2000 - திருமதி வி.ஞானசிறீ- (பளை மத்திய கல்லூரி), திருமதி வ.சந்திரசேகரம்- (பளை மத்திய கல்லூரி), திருமதி செ. இராசரத்தினம் (தருமபுரம் ம.வித்தி). (க-405)

# காப்பெற் வீதியாக உருமாறப் போகும் மாங்குளம்- வெள்ளாங்குளம் வீதி

மாங்குளத்திலிருந்து மல்லாவி, துணுக்காய் ஊடாக வெள்ளாங்குளம் செல்லும் வீதி காப்பெற் வீதியாக மாற்றமடையும் வாய்ப்புத் தோன்றியுள்ளது.

இந்த வீதி தற்போது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் இதில் பயணிப்போர் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இந்த வீதியின் அவலநிலை தொடர்பாக ஏற்கனவே பலமுறை பத்திரிகைகளில் செய்திகளும் வெளிவந்துள்ளன.

இந்த நிலையில் இந்த வீதியைப் புனரமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. இந்திய நிறுவனமொன்று வீதி வேலைகளைச் செய்து முடிப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தம் கடந்த 3 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. மேலும் 38 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியில் எட்டுக் கிலோ மீற்றர் நீளமான பகுதியை மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் மீதியை முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் நிறைவேற்றியுள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வாக மாங்குளத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மூன்று முறிப்புச் சந்தியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் கிரவல் எடுப்பதற்கென கனியவளத் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேலும் இந்த வீதியில் ஆங்காங்கு அமைந்துள்ள பெரிய, நடுத்தர, சிறிய பாலங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

மேலும் வீதியின் அகலமும் ஒன்பது மீற்றராக விரிவுபடுத்தப்படவுள்ளது. இரண்டு வருட காலப்பகுதிக்குள் வீதியின் வேலைகள் முடிவுறுத்தப்படல் வேண்டும். தற்போது இந்த வீதியில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பிரயாணம் செய்வோர் வீதி புனரமைக்கப்படுவது தொடர்பான செய்தியால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (க-425)

# மன்னார் புதுக்குடியிருப்பு கடற்கரையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு

மன்னார், ஒக்.11

மன்னார் கடற்கரையோரத்தில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள புதுக் குடியிருப்பு தென்கடற்கரை யோரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை காலை ஒருவர் இறந்து கிடப்பதாகத் தலைமன்னார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டனர். இதைத் தொடர்ந்து அவ்விடத்துக்குச் சென்ற மன்னார் நீதிவான் திருமதி கே. ஜீவராணி சடலத்தைப் பார்வையிட்டார்.



இறந்தவர் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த 63 வயதான எ.முகமது சுல்தான் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் வழமையாக இந்தக் கடற்கரைப் பகுதிக்கு மீன் வியாபார நோக்கமாக வந்து செல்வதாகவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழமைபோன்று காலை 6 மணிக்கு வந்த போது சுகயீனமுற்று இறந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று விசாரணையை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும் படியும், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படியும் பொலிஸாருக்கு உத்தர விட்டார். பின்னர் இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க- 601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி கடலிலும் இந்தியர் ஊடுருவல்; கடும் கொதிப்பில் உள்ளூர் மீனவர்கள்

பூநகரிப் பிரதேசத்தில் இரணைதீவு, வலைப்பாடு, பள்ளிக்குடா கடற்பகுதிகளில் இந்திய மீனவர்களின் ஊடுருவல் அதிகரித்துள்ளதால் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வரும் மீனவர்களின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பெறுமதி வாய்ந்த மீன்பிடி வலைகளும் சேதத்துக்குள்ளாகின்றன.

இந்த அத்துமீறல் செயல் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்தும் இது வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்காது குறித்துக் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ள மீனவர்கள் இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு றோலர் தொழிலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் இரணைதீவு, வலைப்பாடு, பள்ளிக்குடா, கௌதாரி முனை ஆகிய கடற்பரப்புகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்தக் கடற்பிரதேசங்களில் இந்திய மீனவர்கள் றோலர் தொழிலில் அத்துமீறி ஈடுபடுவதால் கடல்வளம் அழிந்து கொண்டு வருவதுடன் மீனவர்களின் வலைகளும் சேதத்துக்குள்ளாகின்றன. இதனால் இந்தத் தொழிலையே நம்பி வாழும் மீனவர்களின் வருமானத்திலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள்நடவடிக்கைஎடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரியுள்ளனர். (115)

# வவுனியா வைத்தியசாலையில் 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சை

வவுனியா, ஒக்.11

வவுனியா பொது வைத்திய சாலைகளில் வெளிநாட்டிலிருந்து வந்த வைத்திய நிபுணர்களால் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 8 ஆம் திகதி ஆரம்பித்த இந்தச் சத்திர சிகிச்சைகள் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

உடலின் பல பாகங்களிலும் காணப்படுகின்ற காயங்கள், தழும்புகள் ஆகியன பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் மூலம் சீர் செய்யப்படுகின்றன.

இத்தகைய சிகிச்சையைப் பெற விரும்புவோர் வவுனியா பொது வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்தியசாலையின் அத்தியட்சகரான வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

கடந்த யுத்தத்தின் போது காயங்கள் ஏற்பட்டு மாறாத தழும்புகளுடன் வாழ்ந்து வரும் மக்களுக்கு இத்தகைய பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை பேருதவியாக அமையுமெனப் பலரும் கருத்துக் கூறியுள்ளனர். (க-421)

# முல்லை. மாவட்டச் செயலகத்தில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம்

மன்னார், ஒக்.11

முல்லைத்தீவு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் கடந்த ஆறாம் திகதி நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் முல்லைத்தீவு செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இதில் விவசாயிகளின் காப்புறுதித் திட்டங்கள், வங்கிகள் மூலம் விவசாயக் கடன் பெறுதல், காலபோகப் பயிர்ச் செய்கைக் கான முன்னேற்பாடுகள், மேட்டுப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், நீர்ப்பாசனக் குழாய்களைப் புனரமைத்தல், கால்நடை அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ப்பட்டது. இவை தொடர்பாகத் துறைசார் அதிகாரிகளுக்கு அரச அதிபரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும் சிறுபோக, பெரும் போக காலங்களில் நெல் கொள்வனவுக்கென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நிதி மாவட்டச் செயலகத்துக்கு முழுமையாக மீளச் செலுத்தப்படாமை தொடர்பாக அரச அதிபரால் விளக்கம் கோரப்பட்டது.

மேலும் காலபோகத்தின் போது அறுவடை மூலம் நல்ல பயன்களை விவசாயிகள் பெற்றுக் கொள்ளுமுகமாகச் சகல வழிமுறைகளையும் உதவிகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டுமென அரச அதிபர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் உட்பட உயர் அதிகாரிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-601)

## மண்மேடு....




நீருக்கு வழியேது?- வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தினுள் மண் நிரப்பப்பட்டு வருவதனால் அந்தப் பகுதி மேடாகக் காட்சியளிக்கின்றது.

# வட்டக்கச்சி ம.வியில் சிறுவர் தின நிகழ்வு

வட்டக்கச்சிமகா வித்தியாலயத்தில் சிறுவர் தினம் மிகவும் கோலாகலமாக நடந்தேறியுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தில் சர்வதேச சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் முகமாகவும் சிறுவர்களின் மேம்பாடு தொடர்பான முதன்மைப்படுத்தி அவர்களைக் கௌரவிக்கும் நோக்குடனும் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை பாடசாலையின் பிரதி அதிபர் அகிலநாயகம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறுவர்கள் பாடசாலையின் பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பின்னர் சிறுவர்களின் பல கலை நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளதோடு ஆசிரியர்களின் சிறுவர் மேம்பாடு தொடர்பான கருத்துரைகளும் இடம் பெற்றன. (க-426)

# யோகபுரத்தில் குழாய்க்கிணறுகள் செயலிழந்ததால் குடிதண்ணீருக்காக அவலப்படும் பொதுமக்கள்

துணுக்காய், ஒக்.11

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேசத்தின் யோகபுரம் 3 ஆம் யூனிட் பகுதியில் மூன்று குழாய்க் கிணறுகள் செயழிந்துள்ளமையால் குடிதண்ணீருக்காக அந்தப் பகுதி மக்கள் பல இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

மேற்படி யோகபுரம் 3 ஆம் யுனிற் பகுதியில் 1995 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூரிய கதிர் யுத்தத்தின் போது இடம் பெயர்ந்த மக்கள் தங்கி வாழ்ந்தனர்.

அந்தக் காலப்பகுதியில் புலம்பெயர்ந்த குடும்பங்கள் குடிதண்ணீருக்காக அயல் கிராமங்களை நாடி வந்தனர்.

இவர்களுக்குஉதவும்பொருட்டு சில நிறுவனங்களின் உதவியுடன் சர்வதேச செஞ்சி லுவைச் சங்கத்தினரால் மூன்று குழாய் கிணறுகள் குமுதன் குடியிருப்பு, யோகபுரம் பாடசாலைக்கு அருகாமை, பூபாலினி முன்பள்ளி ஆகிய இடங்களில் மக்கள் பாவனைக்கு அமைத்துக் கொடுத்தனர்.

இதனால் மக்கள் பெரும் நன்மை பெற்றனர்.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் மக்கள் அயல் கிராமங்களை நாடி வருகின்றனர்.

செயலிழந்த 3 குழாய்க் கிணறு களில் ஒன்று யோகபுரம் பாட சாலை மாணவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டதாகும். அதுவும் செயலிழந்து பல மாதங்களாகியும் திருத்தப்படாத நிலையில் இருந்து வருகின்றது. அத்துடன் யோகபுரம் மகா வித்தியாலய வளாகத்தில் உள்ள கிணற்றில் நீர் பற்றாக்குறையாகவுள்ளது. மாணவர்கள் நீருக்காக அலைந்து வருகின்றனர்.

ஆகவே மக்களின் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கு முகமாக செயலிழந்து போன மூன்று குழாய் கிணறுகளையும் திருத்தியமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-415)

# காற்றுடன் கூடிய பெருமழையால் வவுனியாவில் மின்சாரம் பாதிப்பு

வவுனியா, ஒக்.11

வவுனியாவில் காற்றுடன் கடும் மழை பெய்ததன் காரணமாகச் சில இடங்களில் மின் சார விநியோகம் தடைப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் காற்றுடன் பெரு மழை பெய்தது. இதனால் ஆசிகுளம், தரணிக்குளம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

ஆசிகுளம் பகுதியில் மின் தூண்கள் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் ஐந்து மின்கம்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதைப் போன்றே தரணிக் குளத்திலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஆனால் இந்தப் பகுதிகளில் மின்விநியோகம் இதுவரை வழமைக்குத் திரும்பவில்லை. புதிய மின் தூண்கள் நடப்பட்டதன் பின்னரே மின்விநியோகம் வழங்கப்படுமெனக் கூறப்படுகின்றது.

மின்சாரம் இல்லாத நிலையில் இந்தக் கிராமங்கள் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இரவு வேளைகளில் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் அச்சத்துடன் இருப்பதைக் காண முடிகின்றது. (க-421)

# புதிய கணக்காளரின் நியமனத்தால் உத்வேகம் பெற்றுள்ள கல்வி வலயம்

முள்ளியவளை, ஒக்.11

இதுவரை காலமும் கணக்காளர் ஒருவர் இல்லாது இயங்கி வந்த முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குப் புதிய கணக்காளர் ஒருவரை மாகாணத் திணைக்களம் நியமித்துள்ளது.

இவர் வந்த கையோடு வழங்கப்படாத நிலுவையாக இருந்த சம்பளம், கொடுப்பனவுகள் என்பவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அத்துடன் 90 வீதமான ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் சீர்செய்யப்பட்டு ஆசிரியர்களின் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களுக்குரிய நிலுவைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

கல்விப் பணிப்பாளரின் சீரிய செயற்பாட்டினூடாகவும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் நிர்வாக உத்தியோகத்தரின் செயற்றிறனாலும் நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையாலும் இந்த சுயவிவரக்கோவைகள் சீர் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

போரின் போது தொலைந்த முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களின் கோவைகளுக்குப் பதிலாக ஆசிரியர்களிடம் இருந்து ஆவணங்களின் நிழற்பிரதிகளைப் பெற்று இதற்கென அமைக்கப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய குழு உறுப்பினர்கள் இந்தப் பிரதிகளில் கையெழுத்திடுவதினூடாக ஆசிரியர்களின் புதிய கோவை உருவாக்கத்துக்கு வலுச் சேர்த்துள்ளனர்.

மேற்படி நடவடிக்கைக்காக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சின் அனுமதியையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இதுரை வழங்கப்படாத இழுத்தடிக்கப்பட்டு வந்த ஆசிரியர்களின் நிலுவைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட விருப்பதால் அவர்கள் புது உத்வேகத்துடன் தமது கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவரென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைக்ரோசொப்ட் பங்காளர் மாநாட்டில் பத்து செயற்பாட்டாளர்களுக்கு விருதுகள்

இலங்கையிலும், மாலைதீவுகளிலும் உள்ள மைக்ரோசொப்ட் பங்காளர்களின் மிகச் சிறந்த பெறுபேறுகளைக் கொண்டாடும் வகையில் அண்மையில் கலதாரி ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வருடாந்த பங்காளர் மாநாடு மற்றும் விருது கள் நிகழ்வில் தகவல் தொழில்நுட்பத் தொழில் துறையைப் பிரதிநிதித்துவப்ப டுத்துகிறது பத்து சிறந்த நாமங்கள் ''தரமான பங்காளர்கள் தரமான தீர்வுகள் விருதுகள் 2011'' (Quality Partners Quality Solutions Awards 2011) என்ற விருதைப் பெற்று வெற்றி வாகை சூடியுள்ளன. தாம் வெளிப்படுத்தியுள்ள மிகச் சிறந்த பெறுபேறுகளுக்காக நிகழ்வில் கௌரவிக்கப்பட்டுள்ள உச்சத்தில் திகழும் பங்காளர் நிறுவனங்களின் விவரம் வருமாறு: Tech One Global (Pvt) Ltd. நிறுவனம் ''மிகச் சிறந்த விநியோகத்தர்'' என்ற பட்டத்தை வென்றதுடன், DMS, Electronics (Pvt) Ltd. ''மிகச் சிறந்த முகாமைத்துவப் பங்காளர்'' என்ற இனங்காணல் அங்கீகாரத்தையும், அதே பிரிவில் H-One (Pvt) Ltd. இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தன. ''மிகச் சிறந்த 'Attached at Source' COEM விநியோகத்தர் மற்றும் பெயரிடப்பட்ட பங்காளர் விருதை சிங்கர் (ஸ்ரீலங்கா) PLC நிறுவனம் வென்றிருந்தது. தனது இரண்டாவது விருதாக ''மிகச் சிறந்த பங்காளர் வழிநடத்தல் போட்டித்திறன் மீள்வெற்றி'' என்ற விருதையும் H-One (Pvt) Ltd. நிறுவனம் தனதாக்கியிருந்தது. மாலைதீவுகளைத் தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமான Rose Ware Corporation ''மிகச் சிறந்த பங்காளர் - மாலைதீவுகள்'' மற்றும் ''அரச துறையில் மிகச் சிறந்த பங்காளர்'' ஆகிய இரு விருதுகளை அந்த இரவில் தனதாக்கியிருந்தது. ''மிகச் சிறந்த மைக்ரோசொப்ட் கற்றல் பங்காளர்'' என்ற பட்டத்தை Ceylinco Net Assist PLC நிறுவனம் வென்றிருந்தது.



''மிகச் சிறந்த விநியோகத்தர்'' என்ற விருதை ஜேமி ஹாப்ரிடமிருந்து (மைக்ரோசொப்டின் தென் கிழக்கு ஆசியாவிற்கான பொது முகாமையாளர்) Tech One Global (Pvt) Ltd. நிறுவனத்தின் இலங்கைக்கான பொது முகாமையாளர் ஸியா காதர் பெற்றுக்கொள்கிறார். மத்தியில் காணப்படுபவர்கள் (இடமிருந்து - வலமாக), ஹிஷாம் சாலி (பங்காளர் கணக்கு முகாமையாளர் - மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா) மற்றும் புபுது பஸ்நாயக்க (குறுகிய மற்றும் நடுத்தர காலப்பகுதி விற்பனைகள் மூலோபாய மற்றும் திட்டமிடல் மேலாளர் ஸ்ரீ மைக்ரோசொப்ட் (ஸ்ரீலங்கா)

தத்தமது தொழில்நுட்பத்துறைகளில் முன்னிலை வகிக்கும் தொழிற்பாடுகளையிட்டும், அதிவிசேட பணிகளுக்காகவும் இனங்காணல் அங்கீகார விருதுகளைப் பெற்றுக்கொண்ட ஏனைய முன்னணி வகிக்கும் நிறுவனங்களின் பெயர்கள் வருமாறு: ஒருங்கிணைக்கப்பட்ட தொடர் பாடல்களுக்காக Greenwich Lankd (Pvt) Ltd. நிறுவனம். ஒருங்கிணைக்கப்பட்ட தொடர் பாடல்கள் மற்றும் கற்பனை கணினி வடிவமைப்புக்காக DMS Electr onics (Pvt) Ltd. நிறுவனம். அரசதுறையில் முன்னெடுத்த பணிகளுக்கான இனங் காணல் அங்கீகாரத்துக்காக E-W Informa tion Systems Ltd. நிறுவனம். 'Attached at-source' COEM . பங்காளராக Metro politan Computers (Pvt) Ltd. நிறுவனம். வலிமைமிக்க தொழிற்றுறை வளத்திட் டமிடல் வியாபாரத்துக்காக H-One (Pvt) Ltd. நிறுவனம் ஆகிய இனங் காணல் அங்கீகார விருதுகளைப் பெற்றுக் கொண்டன. அந்த இரவுப் பொழுதின் வெற்றியாளர்களுக்கு நிகழ்வில் அதியுன்னத இனங் காணல் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற துடன், மைக்ரோசொப்ட் உற்பத்திகள் மற்றும் தொழில்நுட்பங்களை வெற்றிபெறச்செய்த அவர்களது ஒன்றுசேர்ந்த அணி முயற்சிகளும் பாராட்டப்பட்டன.



இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையால் தரம்-5 மாண வர்களைக் கௌர விக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ. பி.சுமணசிறி மாணவன் ஒருவனுக்குப் பரிசில் வழங்குகிறார். வங்கி முகாமையாளர் ந.புவனேந்திரன் அருகில் உள்ளார். (த-11)



'பன் ஏசியா' வங்கியின் 56 ஆவது கிளையை யாழ்ப்பாணம் வீதி, நெல்லியடியில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைக்கிறார். அரு கில் வங்கியின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கிளட் பீரிஸ், கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.வியாகேசு, பருத்தித்துறை நகரசபை உப தலைவர் சி.பத்மநாதன் ஆகியோர் உள்ளனர். (த-236)

# அழகுத் தோற்றத்துக்கு அசைக்க முடியாத நம்பிக்கை பியூட்டின்

*பெண்கள் எப்போதுமே அழகு, நேர்த்தி கவர்ச்சி ஆகியவற்றின் இலக்கணங்கள்.*

அழகு என்பது நிரந்தரமான அல்லது சீரான ஒன்றல்ல. அது பராமரிக்கப்பட வேண்டிய, சலுகைக் காட்டவேண்டிய பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே, பெண்கள் நாளாந்தம் முகம்கொடுக்கும் பருக்கள், சுருக்கங்கள், தளர்ச்சியுற்ற சருமம், சூரிய ஒளித் தழும்புகள், சருமத்தின் நிறமாற்றம் போன்றவற்றுக்கு நிரந்தர பிரியாவிடை கொடுக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. வயது வித்தியாசமின்றி எல்லாப் பெண்களும் அழகாகத் தோற்றமளிக்கவே விரும்புவார்கள்.

அவர்கள் மனித இனத்தின் உருவக வெளிப்பாடுகள். ஒரு பெண் தன் உடலை அழகாக வைத்துக்கொள்வதில் பெரும் அக்கறை காட்டுகிறாள். எனவே, அழகான, நேர்த்தியான, கவர்ச்சி மிக்க மேனியைப் பேணிப் பாதுகாப்பது என்பது எல்லாப் பெண்களினதும் கனவாகும். அவ்வாறு பாதுகாத்துக்கொள்வது ஒவ்வொரு பெண்ணும் எட்டக்கூடிய பெரு வெற்றி. எனவே, இந்த மகத்தான வெற்றியை அடைய முதற் காலடியை எடுத்து வைக்க வேண்டிய அற்புதமான தருணம் இதுவே!

சருமம் மனித உடலின் மிகப் பிரதானமான அங்கங்களில் ஒன்று. ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொள்ளல், சருமத்துக்கு அவசியமான சரியான பராமரிப்புப் பொருள்களைப் பயன்படுத்தாமை போன்றவற்றால் சருமத்தில் தளர்ச்சி, சுருக்கம், புள்ளிகள், தழும்புகள் போன்றவை ஏற்பட்டு அதன் அழகைக் கெடுத்துவிடுகின்றன. அத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக பல்வேறு சவர்க்காரங்கள், தைலங்கள், கிறீம்கள், பவுடர்கள் போன்றவற்றைப் பெண்கள் பாவிக்கின்றார்கள். எனினும், விலை கூடிய இத்தகைய அழகு சாதனங்களைப் பயன்படுத்துவது நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தாது.

அடிப்படைக் குறைபாடு என்னவென்பதை அறிந்துகொள்ளாமல் நினைவில் வரும் எல்லா அழகு சாதனங்களையும் பாவிப்பது தவறு. சருமத்தின் குறைபாடுகளுக்கு ஆரோக் கியமற்ற உணவும் சரியான பராமரிப்பும் இல்லாததுமே அடிப்படைக் காரணம். அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் உள்ளெடுக்கப்படும் உணவில் அடங்கியுள்ள உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்கள் போன்றவை மனித சருமத்தில் நேரடியான தாக்கங்களையும், மாற்றங்களையும் உருவாக்குமெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இளமையான, பளபளப்பான சருமத்தையும் தலைமயிரையும், நகங்களையும் எப்போதும் பேணமுடியும். பியூட்டின் (BEAUTINE) எவ்வாறு செயற்படுகிறது?

பியூட்டினில் சருமத்தின் பராமரிப்புக்குத் தேவையான மூலப் பொருள்களே அடங்கியுள்ள அதிநவீன விஞ்ஞான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த மூலப்பொருள்கள் தீவிரமாக பரிசோதிக்கப்பட்டுத் தரப்படுத்தப்பட்டுள்ளன. எமது வார்த்தைகளில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால் இலகுவான இணையத்தள தேடலின் மூலம் இந்த மூலப்பொருள்களைப் பற்றிய தெளிவான விளக்கங்களை நீங்கள் பெற்றுக்கொள்வதுடன் பியூட்டினின் மகத்துவததைத் தீர்க்கமாகப் புரிந்துகொள்ளலாம். பியூட்டின் சருமத்தில் இரத்தக் குழாய்கள் வரை ஆழமாக ஊடுருவி சருமத்துக்கும், தலைமயிருக்கும், நகங்களுக்கும் அவசியமான முழுப் போஷாக்கையும் வழங்குகின்றது. இது கலங்களின் உருவாக்கத்துக்கும் சூரிய ஒளியால் ஏற்படக் கூடிய புள்ளிகள், தழும்புகள் போன்றவற்றுக்கான எதிர்ப்புச் சக்தியையும் வழங்குகின்றது. அத்துடன், ஆரோக் கியமான சருமத்தின் நிறத்தைப் பேணுவதற்கான CoQ 10 போன்ற இயற்கை மூலகங்களையும் வழங்குகிறது.

சாதாரண அழகு சாதனங்கள் பியூட்டினைப் போல சருமத்தை ஆழமாக ஊடுருவுவது இல்லை. எனவே, அத்தகைய சாதனங்கள் தற்காலிக தீர்வை அளிக்க முடியுமே தவிர நிரந்தர தீர்வுகள் ஏற்படாது. ஒரு மனிதன் உடலில் வெளியுலகத்துக்கும், உள்ளக உறுப்புக்களுக்கும் இடையில் ஒரு பாதுகாப்பு அரணாக விளங்குவது சருமமே. வெளியுலக உஷ்ணம், குளிர், அழுக்கு, சூரியத் தாக்கம், ஒவ்வாமை, நோய்க்கிருமிகள் போன்றவை சருமத்தின் மூலமாகவே உடலுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, உடலின் முக்கியமான அங்கமான சருமத்தைப் பேணிப் பாராமரிப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, தினமும் அழகாகவும் ஆரோக்கியமாகவும் தோற்றமளிக்க சருமத்தின் பராமரிப்பு அத்தியாவசியம். சரியான பராமரிப்பு இல்லாவிடில் சருமமும், தலைமயிரும், நகங்களும் விரைவில் உருக்குலைந்து போகும். கட்டுப்பாடானதும் ஆரோக்கியமானதுமான உணவுப் பழக்கமும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். பெண்கள் அசாதாரணமான வேகத்துடன் ஓய்வின்றி உழைக்கும் யுகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே, தங்கள் உடலைக் கவனிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பது குறைவு. அவர்களுக்கு பியூட்டின் நேசக்கரம் நீட்டுகிறது. பக்கவிளைவுகளற்ற வைத்தியர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பக்கஉணவானபியூட்டின் உங்க ளது நேரத்தை மிச்சப்படுத்தி நீங்கள் அறியாமலேயே உங்க ளது உடலை இளமைத் தோற்றத்துடன் பேணிப் பாதுகாக்கும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகர சபையில் 4 ஆசனங்களே இம்முறை கிடைத்தது தமிழரசுக் கட்சிக்கு

காரைதீவு,ஒக்.11

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 9,911 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களைக் கைப் பற்றியுள்ளது.

கல்முனைப்பிரதேசங்களில் 2,0840 வாக்குகளே வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தன. அதன்படி சுமார் 50 வீதம் வாக்குகளை தமிழரசுக்கட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2006 ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 14,996 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களைப் பெற்றிருந் தது. அதனுடன் ஒப்பிடுகை யில் இந்த முறை 5,085 வாக்கு கள் குறைவாக இந்தக் கட்சி பெற்றுள்ளதுடன் 2 ஆசனங் களையும் இழந்துள்ளது.

கடந்த தேர்தலில் வலுவான எதிர்க்கட்சியாகவிருந்த தமிழ ரசுக் கட்சி இந்தமுறை அதன் பலத்தை இழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் மத்தியில் அதிசெல் வாக்குப் பெற்றுள்ள தமிழரசுக் கட்சி கல்முனை மாநகர சபை யில் இந்தப் பின்னடைவைச் சந்தித்துள்ளமை தொடர்பில் தலைமைப்பீடங்கள் ஆய்வு செய்யவேண்டுமென தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுக் கின்றனர்.

இந்தமுறை கடந்த 2006 ஆம் ஆண்டுதேர்தலைவிட வாக் காளர்களின் எண்ணிக்கை 4,944 ஆல் அதிகரித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச-25)

# முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியது

காரைதீவு,ஒக்.11

கல்முனை மாநகரசபையின் ஆட்சியதிகாரத்தை மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றிக்கொண்டது.

இந்தக் கட்சி இந்தத் தேர் தலில் 22,356 வாக்குகளைப் பெற்று 11 ஆசனங்களைப் பெற் றுள்ளது. ஐ.தே.கட்சி தேர்தல் தவிர்ப்பு போக்கைக் கடைப் பிடித்த வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 22,361 வாக்குகளைப் பெற்றுள்ளது.

இம்முறை ஸ்ரீல.மு.கா தனித் துத் தேர்தலில் நின்று போட்டி யிட்டது. கடந்த தடவையை விட 25 வாக்குகள் குறைவாகப் பெற்ற மு.கா. ஓர் ஆசனத்தைக் கூடுதலாகப் பெற்றுள்ளது.

ஸ்ரீல.மு.காவைப் பொறுத்த வரை தனித்து நின்று இத் தகைய வாக்குகளைப்பெற்றிருப் பது மக்கள் ஆதரவு கூடியிருப் பதை எடுத்துக் காட்டுகின்றது. அதேவேளை ஒரு சில வேட் பாளர்களது தனிப்பட்ட வாக்கு கள் காரணமாகவும் கட்சிக்கு வாக்குக்கூடியிருந்தமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ச-25)

# தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவேன்

## அமிர்தலிங்கம் தெரிவிப்பு

அம்பாறை,ஒக்.11

கல்முனை மாநகர சபைப் பிரிவிலுள்ள சகல தமிழ்க் கிரா மங்களையும் ஒரே கண்கொண்டு நோக்கியே எனது சேவைகள் அமையும். அதேவேளை தமிழ்- முஸ்லிம் ஒற்றுமையை இந்த மாநகரில் வலுப்படுத்தும் செயற் பாடுகளிலும் முன்னின்று உழைக்கவும் தயங்கமாட்டேன்.

இவ்வாறு கல்முனை மாநகர சபைத்தேர்தலின் தமிழரசுக் கட்சி சார்பில்போட்டியிட்டு முதன்மை விருப்பு வாக்குகளு டன் உறுப்பினராகத் தெரிவு செய் யப்பட்டுள்ள அ.அமிர்தலிங் கம் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:


கடந்த 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்முனை மாநகர சபைத்தேர்தலும் தமிழரசுக் கட்சிசார்பில் போட்டியிட்டுஉறுப் பினராகத்தெரிவு செய்யப் பட்ட நான் மாநகர சபை மூல மும், எனது முயற்சிகளின் பேரிலும் கடந்த ஐந்து வரு டங்கள் ஆற்றிவந்த சேவைகளை எமது தமிழ்மக்கள் நன்கறிவர்.

இந்த எனது சேவைகளில் திருப்தி,நேர்மை கண்ட மக்களும், கட்சியும் இந்த முறையும் தேர் தலில் போட்டியிட வேண்டு மெனவிடுத்த அழைப்பின் பேரில் போட்டியில் குதித்தேன்.

இந்தவகையில் கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்கள் எனக்குக்கூடிய விருப்பு வாக்கை அளித்து மீண்டும் உறுப்பினராகத் தெரிவு செய் துள்ளமை அகமகிழ்வைத் தரு கின்றது.

இதற்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி பகிரக்கடமைப்பட்டுள்ளேன்.

கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களின் இருப்புக்கும், அவர்களது உரித்தான மண் ணின் பாதுகாப்புக்காகவும் எத் தகைய விட்டுக்கொடுப்பு மின்றி உறுதிபடச்செயற்படு வதுடன் அதற்காக உரத்துக் குரல் கொடுப்பவனாகவும் நான் திகழ்வேன் - என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-30)



சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதிய மைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இலங் கைக்கான ஈராக் தூதுவர் கஹ்தான் தாஹா காலாப் புக்கும் இடையில் சந்திப்பு அண்மையில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது, இரு நாடு களுக்குமிடையிலான உறவைக் கட்டியெழுப்புதல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈராக் அரசினால் மீண்டும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# கல்முனை இராமகிருஷ்ணாவில் பவளவிழா

காரைதீவு,ஒக்.11

கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு பவளவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி அ.பேரின்பராஜா தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாகக் கிழக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் ஏ.எம்.ஈ.போல், ஓய்வுநிலை பேராசிரியர் கோ.கோணேச பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (ச-25)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கல்முனையில் இம்முறை 3 ஆசனங்கள்

காரைதீவு,ஒக்.11

கல்முனை மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 8524 வாக்குகளைப் பெற்று 3ஆசனங்களைப்பெற்றுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்தக் கட்சி 6420 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங் களை மட்டுமே பெற்றிருந்தது.

அதன்படி இந்தமுறை 2,104 வாக்குகள் கூடுதலாக அளிக்கப் பட்டு ஒரு ஆசனமும் கூடுதலா கப் பெறப்பட்டுள்ளது.

ஐ.ம.சு.முன்னணியின் செல் வாக்கு கல்முனை மாநகரத்தில் காணிசமாக அதிகரித்து வரு வதை இந்த முடிவு எடுத்துக் காட்டுகிறது.

மாநகரசபையில் தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சியாக 4 ஆசனங் களுடன் இருக்க அடுத்தபடி யாக இந்தக் கட்சி 3 ஆசனங் களுடன் இருக்கிறது.

முஸ்லிம்,தமிழ், சிங்கள வேட்பாளர்களைக்கொண்டிருந்த ஐ.ம.சு.முன்னணிக்கு மூவின மக்களும் வாக்களித்திருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படு கின்றது. (ச-25)

# மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகம்

தியத்தலாவை, ஒக். 10

தெங்கு உற்பத்தியை அதி கரித்து தேங்காய் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற் கான பல்வேறு திட்டங்களை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுவருகின்றது.

இதனடிப்படையில், பதுளை மாவட்டத்தில் 193 பாடசாலை கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பாடசாலைகளில் கல்வி பயிலும் 4ஆம் தர மாணவர் களுக்கு ஒரு தென்னங்கன்று வீதம் பகிர்ந்தளிக்கவுள்ளது என்று தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.


# புதல்வர்களால் தாக்கப்பட்ட தந்தை

தந்தையைத் தாக்கி காயப் படுத்தினர் என்ற சந்தேகத்தின் பேரில் அவரது இரு மகன்கள் உட்பட மூவர் ஹபரணை பொலி ஸாரினால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் இன்னு மொருவரும் இணைந்து குறித்த நபரை மூர்க்கத்தனமாகத் தாக் கியுள்ளனர் என ஹபரண பொலி ஸார் தெரிவித்தனர். மகன்மாரின் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் ஹபரண வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தம் புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தாம் விசாரணை களை மேற்கொண்டு வருவதா கப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனை மாநகரசபைத் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைந்துள்ளது

## செல்வராசா எம்.பி.கூறுகிறார்



அம்பாறை, ஒக்.11

''கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக் களிப்பு வீதம் குறைந்தமை யால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ள போதிலும், வேறு எந்த தேசியக் கட்சிகளிலோ, சுயேச்சைக் குழுக்களிலோ தமிழர் எவருமே உறுப்பினரா கத் தெரிவு செய்யப்படவில்லை''

இவ்வாறு, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் பொன்.செல்வராசா தெரி வித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2006 ஆம் ஆண்டில் இடம் பெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு சார்பில் ஆறு பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு எதிர்க்கட்சியின ராக இருந்து வந்தனர்.

ஆனால் இந்த முறை நடை பெற்ற தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு சார்பில் நான்கு பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

''இந்த முறை நடைபெற்ற கல்முனை மாநகரசபைத் தேர் தலில் முஸ்லிம் மக்களின் வாக் களிப்பு வீதம் அதிகரித்திருந்த அதேவேளை தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் வெகுவாகக் குறைந்தே காணப்பட்டுள் ளது.

இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நான்கு பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு சற்று பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட, தேசியக் கட்சி களிலிருந்தோ, சுயேச்சைக் குழுக்களிலிருந்தோ எந்தவொரு தமிழரும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லையென் பதையும், தமிழ்மக்கள் அவர் களுக்கு வாக்களிக்கவில்லை யென்பதும் முக்கிய அம்சமாகும்.

பெரிய அச்சுறுத்தல்கள் இல்லாத நிலையிலும் தமிழ் மக்கள் வாக்களிப்பதில் ஏன் அசமந்தப் போக்கைக் கடைப் பிடித்தனரென்பது கண்டறியப் பட வேண்டும்.

கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் இந்த முறை குறைந்த துக்கான காரணம் அறியப்பட்டு அதற்கான மாற்று நடவடிக் கைகளை எதிர்காலத்தில் கட்சி எடுக்க வேண்டும்.

எது எப்படியிருப்பினும் மாற் றுக் கட்சியினருக்கோ, சுயேச் சைக் குழுக்களுக்கோ சோரம் போகாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நான்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட வாக்களித்த அனைத்து தமிழ் மக்களுக்கும் இந்த சந்தர்ப் பத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த முறை தெரிவு செய் யப்பட்டுள்ள கூட்டமைப்பின் உறுப்பினர் அணி எதிர்க்கட்சி யாகத் திகழ்ந்தாலும் கல்முனை மாநகரம் வாழ் சகல தமிழ் மக்களுக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் -என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
அயலார் மத்தியில், உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். வெளியூர் பயணங்கள் மூலம், நினைத்த காரியங்களை முடித்துக் கொள்வீர்கள். வியாபாரிகள், பண விடயங்களில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. குறைந்த விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை, அதிக விலைக்கு வாங்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

**இடபம்:**
ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதி ஒன்று, திடீரென வந்து சேரலாம். தாய் வழி உறவுகள், உங்களிடம் அதிக பாசத்துடன் நடந்து கொள்வர். உறவினர்களுக்குத் தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். நண்பர்களுக்காக, மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள்.

**மிதுனம்:**
தொழில் போட்டிகளை முறியடித்து, வெற்றி காணும் நாள். உறவினர்கள் விடயத்தில் பரிவோடு நடந்து கொள்வீர்கள். அரசியல்வாதிகள் தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உடன் பிறப்புகள், உங்களின் யோசனையைக் கேட்காமல் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படலாம். கனிவான பேச்சுக்களால் வேலைகளைச் சுலபமாக முடிப்பீர்கள்.

**கடகம்:**
நேற்று நடக்காமல் போன காரியம் ஒன்று, இன்று நடக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். பெண்கள், பெற்றோர் வழியில் உதவிகளைப் பெறலாம். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போலத் தோன்றினாலும், இறுதியில் சாதகமாக முடியும்..

**சிங்கம்:**
குறைந்த விலையில் வாங்க நினைத்த பொருள் ஒன்றை, அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் விமர்சிக்கலாம். உறவினர்கள், நண்பர்களிடம் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. திட்டமிட்ட வேலைகளில் ஏற்படும் எதிர்பாராத தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம்..

**கன்னி:**
பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். நண்பர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். கூட்டுத் தொழிலில் அனுகூலமான திருப்பங்களைக் காணலாம். பெண்கள் நினைத்தது நடப்பதால் மகிழ்ச்சி, உற்சாகம் அடைவர். சக ஊழியர்கள் சிலர், உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**துலாம்:**
எதிர்காலத்திற்காக, புதிய திட்டங்கள் போடும் நாள். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். உங்களின் யோசனைக்கு உறவினர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:**
கோபதாபங்களைக் குறைத்து, பொறுமையோடு செயற்பட வேண்டிய நாள். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்ளலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேசாமல் தவிர்க்கலாம்.

**தனுசு:**
மற்றவர்களின் உதவியை நாடாமல், எந்த வேலையையும் நீங்களே செய்து முடிக்க முற்படுவீர்கள். பணிபுரிவோர் புதிய பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர், உங்களின் மூலம் காரியம் சாதிக்கலாம். மலைபோல வந்த பிரச்சினை ஒன்று, பனிபோல் விலகி விடும். தடை, தாமதங்கள் விலகும் நாள்.

**மகரம்:**
கணவன் - மனைவி இடையே, அன்யோன்யம் அதிகரிக்கும். வேண்டியவர், வேண்டாதவர் என பாரபட்சம் பார்க்காமல், எதிலும் நேர்மையாகச் செயற்படுவீர்கள். வியாபாரிகள் கடன் மிகுதிகளை வசூலிப்பில் அக்கறை காட்டுவர். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்:**
மற்றவர்கள் செலவில், உங்களின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பண விடயங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்கலாம். சொத்து வாங்கல் - கொடுக்கல் விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. உடன் பணிபுரிவோரால் அன்புத் தொல்லை நேரும். நண்பர்கள் சிலருக்கு அவசர உதவிகள் செய்ய நேரிடலாம். நீண்ட நேரம் தூங்கலாம்..

**மீனம்:**
பண வரவுகளைப் பெற்றாலும், அதற்கேற்ற செலவுகளைச் சந்திக்கும் நாள். உங்களின் நலனில் அக்கறை கொண்ட ஒருவரிடம் ஆலோசனை பெறுவீர்கள். சில விடயங்களில், மற்றவர்களை முந்திக் கொண்டு செயற்பட்டு அவதிப்படுவீர்கள். தம்பதியரிடையே ஈகோ பிரச்சினைகள் ஏற்பட்டு, சண்டை போட்டுக் கொள்ளலாம். செவ்வாய் வழிபாடு சிறப்பு தரும்.

# கட்டுமீ... கருக்கை... எழுப்பும் கே...

நாளொன்றில் 800 வரையான சட்ட விரோதக் கருக்கலைப்புக்கள் இடம் பெறும் நாடு எது? இதற்கு விடை- நாம் வாழும் இந்த இலங்கைதான். இங்குதான் நாளொன்றில் 800 வரையான கருக்கள் கலைக்கப் படுகின்றன. இதை நாம் ஏற்றே ஆக வேண்டியுள்ளது.

**ஆய்வுகளின் உண்மை நிலை**

குடும்ப சுகாதாரச் சேவைகள் பிரிவு மேற்கொண்டுள்ள ஆய்வொன்றே இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த விதம் கருக்கலைப்புச் செய்து கொள்ளும் பெண்களுக்கிடையில் 80 வீதமானோர் 35 வயதைத் தாண்டியவர்களே எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

இலங்கையில் ஆண்டொன்றில் நிகழும் நேரடிக் குழந்தைப் பிரசவங்கள் 3 லட்சத்து 80 ஆயிரம் எனவும், அந்த எண்ணிக்கைக்குக் கிட்டத் தட்ட ஆண்டொன்றில் 2லட்சத்து 90 ஆயிரம் வரையிலான கருக்கலைப்புக்கள் நிகழ்வதாகவும் அந்தப் பிரிவின் சமூகச் சுகாதாரம் தொடர்பான மருத்துவ நிபுணர் கபில ஜயரத்ன தகவல் தெரிவித்துள்ளார்.

அபாயகரமான இந்தக் கருக்கலைப்பு அல்லது ''அபோர்ஷன்'' செய்து கொள்ளக் கட்டாயப் படுத்தும் கர்ப்பம் தரித்தலால் மரணமடையும் பெண்கள் சம்பந்தமாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றிலேயே இந்தத் தகவல்களும் வெளிப்பட்டுள்ளன.

அண்மையில் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு ஒன்றின் போது சட்டவிரோதக் கருக்கலைப்பு நிலையமொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அங்கு வைத்து மருத்துவ நிபுணர் ஒருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த மருத்துவ நிபுணரிடம் இருந்த ஆவணங்களில் தம்மை அபோர்ஷனுக்கு உட்படுத்திக் கொண்டுள்ள பெண்கள் இரண்டாயிரம் பேரின் பெயர்கள் அடங்கிய ஆவணம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது பொலிஸார் சுற்றி வளைத்த வேளையில் அபோர்ஷன் செய்து கொள்வதற்காக அங்கு வந்திருந்த பெண்கள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் வீடுகளுக்கே சென்று அபோர்ஷன் செய்யும் மருத்துவர் ஒருவரும் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்ட தகவல்களும் வெளியாகியிருந்தன.

**இலங்கையில் மட்டுமல்ல...**

இலங்கையில் மட்டுமல்ல உலகின் அனைத்து நாடுகளிலும் அபோர்ஷன் தனியிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

சட்ட விரோத கருக்கலைப்புப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் உலகெங்கிலும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.


அதேவேளை, இந்தக் கருக்கலைப்பை சட்ட ரீதியாக அனுமதித்தால் என்ன? ஏன் அப்படி சட்ட ரீதியாக்கி விட வேண்டியுள்ளது என்ற வாதங்களும் இன்று சமுதாயத்தில் ஒலிக்க ஆரம்பித்துள்ளன. இது பற்றிச் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவையும் உள்ளது.

உண்மையில் பாலியல் உணர்வு என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்க இயலாததொரு மிகுந்த முக்கியத்துவம் பெறும் அம்சமேயாகும். அந்த உணர்வின் பெறுபேறாகவே மனித சந்ததிகள் உருவாகின்றன. ஆனால் அவசியமற்று உருவாகி விடும் கருவை அழித்துவிடும் நிர்ப்பந்தங்களும் சமூகத்தில் கட்டாயமாகிவிடுவதும் தவிர்க்க இயலாது போய்விடுகிறது. அதுவே இந்தச் சட்ட விரோத கருக்கலைப்புக் கலாசாரமாக வியாபித்துள்ளது.

**பெண்ணுக்குரிய உரிமை**

பெண்ணுக்கும் ஆணுக்குமிடையில் ஏற்படும்

> **ஒரு பெண் தனது கருவை அழித்து விடுவதற்கு சட்டத்தில் இடமுள்ளதா? அவ்வாறெனில் அதற்கான விதி நியமங்கள் உள்ளனவா? மனித சந்ததியை உருவாக்கும்– பிறக்கப் போகும் மனுக்குல கருவொன்று சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளதல்லவா? என்பன போன்ற பல கோணங்களிலான தர்க்க வாதங்களும் காலத்துக்குக் காலம் சமுதாயத்தில் தலைதூக்கியுள்ளன.**



பால் உணர்வின் காரணமான உறவால் உருவாகும் கருவொன்று சம்பந்தமான பொறுப்பைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கும் உரிமை ஒரு பெண்ணுக்கு உரியது என்ற தர்க்க வாதங்கள் உலகளாவிய ரீதியில் இன்று வலுப்பெற்று வருகின்றன.

அந்த உரிமைக்குச் சாதகமான பெருமளவிலான தர்க்க வாதங்களும் கூட சில பெண்ணியல்வாத அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு பெண் தனது கருவை அழித்து விடுவதற்கு சட்டத்தில் இடமுள்ளதா? அவ்வாறெனில் அதற்கான விதி நியமங்கள் உள்ளனவா? மனித சந்ததியை உருவாக்கும் - பிறக்கப் போகும் மனுக்குல கருவொன்று சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளதல்லவா? என்பன போன்ற பல கோணங்களிலான தர்க்கவாதங்களும் காலத்துக்குக் காலம் சமுதாயத்தில் தலைதூக்கியுள்ளன.

**பாவ புண்ணியம் கூறும் மதவாதக் கருத்துக்கள்**

சில மதவாதக் கருத்தாளர்கள் பாவ புண்ணியம் என்ற கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டு கருக்கலைப்பு என்பதைக் கசப்பான- கண்டிக்கத்தக்கதொரு கலாசாரமாகக் காண்கின்றனர்.

கருவொன்று உருவான சந்தர்ப்பத்திலிருந்து அது ஓர் உயிராகவே கருதப்படுவதால் அதை அழித்து விடுவது ஓர் உயிர்க் கொலையே என்பதாக மதவாதிகள் வாதிக்கின்றனர்.

இந்தக் கடும் போக்கு வாதம் உண்மையில் எந்தளவு தூரத்துக்குப் பொருத்தமானது எனக் ''கருக்கலைப்பு'' தொடர்பாக எழுந்துள்ள வாதம் சிந்திக்க வைக்கிறது.

**சமூகத்தில் பாதிக்கப்படுவது பெண்களே**

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவின்

போது அ...
பான பெ...
கூட உரி...
ஆன...
பெரும்ப...
பெண்ணே...
சுமத்துகி...
ஒரு வ...
சுயரூபம்...
பிணைப்...
இடையி...
தின் சின்...
யால் ஒரு...
பதா? இ...
கட்டாயம...
முக்கி...
இரையா...
தன்மை...
நட்ட ஈடு...
ணுக்கேய...

பிறக்...
என்ற மு...
உரிமை...
காரணமா...
...மரித்...
...தமான...
அபவாதத்...
விடுகிறது...
ஸ்ரீ ஜ...
ஆய்வுப்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..மீறும் ..லைப்பு ..கள்விகள்

**கருக்கலைப்பு சட்ட ரீதியாக்கப்படாதுவிட்டாலும் சமூகத்தின் மூலை, முடுக்குகள் எங்கும் இவ்வாறான முறையற்ற, பாதுகாப்பற்ற முறைகள் கையாளப்படும். இதன் காரணமாக இவற்றால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் கருக்கலைப்பைச் சட்டரீதியாக்கிடு விடுவதன் அவசியம் உணரப்படுகிறது.**



..பாது அதன் பெறுபேறாக உருவாகும் கரு தொடர் ..ான பொறுப்பு பெண்ணுக்குப் போன்றே ஆணுக்கும் ..ட உரித்தாகிறது.

ஆனாலும் இத்தகைய நிலைப்பாடு ஒன்றில் ..பெரும்பாலும் சமூகத்தின் கோபத்துக்கு ஆளாவது ..பெண்ணேயாவாள். சட்டமும் கூடப் பெண்மீதே பழி ..மத்துகிறது.

ஒரு விதத்தில் நோக்கும் போது, பாலியல் உறவின் ..யரூபம் எதுவானாலும் அதாவது அது, காதலின் ..ிணைப்பால், திருமணமான கணவன் மனைவிக்கு ..டையில், ஒரு பெண் கெடுக்கப்படுவதால், குற்றத் ..ின் சின்னமாக அல்லது ஒழுக்கக் கேடான நடத்தை ..ால் ஒரு பெண், குழந்தையொன்றைப் பெற்றெடுப் ..தா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ..ட்டாயமாகப் பெண்ணுக்குக் கிட்ட வேண்டியுள்ளது.

முக்கியமாக பாலியல் குற்றமொன்றின் போது ..ரையாகிப் போவது, அந்தக் குற்றச் செயலின் ..ன்மை போன்றே, தனது வாழ்நாள் முழுவதிலும் ..ட்ட ஈடுசெலுத்த வேண்டி நேர்வதும் கூடப் பெண் ..ுக்கேயாகும்.

**பிறக்கும் குழந்தையின் நிலை**

பிறக்கும் குழந்தைக்கு " அசிங்கத்தின் பிறப்பு" ..ன்ற முத்திரை குத்தப்படுவதற்கும் தந்தையின் ..ரிமையை உறிதிப்படுத்த இயலாது போவதே ..ாரணமாகிறது. அது மாத்திரமல்ல குழந்தையைப் ..மரித்.. வளர்ப்பது தொடர்பாகப் பல்வேறு ..மான சிக்கல்கள் போன்றே சமூகத்தின் ..பவாதத்துக்கு உள்ளாவதும் தவிர்க்க இயலாததாகி ..டுகிறது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூக ..ய்வுப் பிரிவின் குற்றவியல் விஞ்ஞானம் சம் பந்தமான சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நிரஞ்ஜி விஜேவர்தன கருக் கலைப்பைச் சட்ட ரீதியாக்கி விடுவதன் மூலம் ஏற்படும் நிலைப் பாடு தொடர்பாக இந்தக் காரணி களை முன்வைத்தார்.

**சட்டரீதியாக்கலின் அவசியம்**

கருக்கலைப்பு அல்லது அபோர் ஷனைச் சட்ட ரீதியாக்கி விடுவதன் மூலம் ஒரு பெண்ணின் வாழ்க்கை பாதுகாக்கப்படுகின்றது.

அவளது உடல் ரீதியான, மனோ ரீதியான தாக்கத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தவிர்த்துக் கொள்ள முடிகிறது. நெருங்கிய உறவினர்களுக் கிடையில் ஏற்படும் பாலியல் ரீதியான செயற்பாடுகள் அல்லது வன்புணர்வு களால் உருவாகும் கர்ப்பங்களைக் கலைத்து விடுவதற்கு ஆற்றல் கிட்டு கிறது.

முழுமை பெறாத கருக்களுடனான கர்ப்பங்களை அழித்துவிடுதல், பொரு ளாதார மற்றும் சமூக ஏதுகளால் வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டி நேரும் சவால்களை முறியடிப்பதற்கும் கூட ஆற்றல் கிட்டக்கூடும்.

கருக்கலைப்புத் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் முறையற்ற, பாதுகாப்பற்ற முறைமைகளின் ஊடாக ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளல் போன்ற வரவேற்பான நிலைப்பாடுகளையும் கருக்கலைப்பைச் சட்ட ரீதியாக மாற்றி விடுவதன் மூலமாக எதிர்பார்க்க முடியும்.

முறையற்ற, பாதுகாப்பற்ற மட்டத்திலான முறை மைகள் கருக்கலைப்பத் தொடர்பாக பெருமளவில் பயன்படுத்தப்படுவதாக ஆய்வுகள் வெளிப்படுத் தியுள்ளன.

குறிப்பாக 25 வயதுக்குட்பட்டோர் 50 வீதமானோர் (18, 19 வயதுக்கிலைப்பட்டோர்) முறையற்ற, பாதுகாப்பற்ற, கருக்கலைப்பு முறை களைக் கையாள்வதாகவும் ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன.

இங்கு சிக்கலுக்குரிய விடயம் என்னவென்றால், கருக்கலைப்பு சட்ட ரீதியாக்கப்படாது விட்டாலும் சமூகத்தின் மூலை முடுக்குகள் எங்கும் இவ்வாறான முறையற்ற, பாதுகாப்பற்ற முறைகள் கையாளப் படும்.

இதன் காரணமாக இவற்றால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக கருக்கலைப்பைச் சட்டரீதியாக்கி விடுவதன் அவசியம் உணரப்படுகிறது.

■ தொகுப்பு: சரா

முக்கியமாக ஒரு தாயின் உயிருக்கு, வாழ்க் கைக்கு ஏற்படும் பாதிப்பை யோசிக்காது கருக்கலைப்பு நிலையங்கள் என்ற போர்வையில் பணம் சம்பாதிக்கும் கைங்கரியங்களை மேற் கொண்டு செல்வோரை முடக்கி- செயலற்றுப் போகச் செய்ய வேண்டும். இதனைக் கருத்தில் எடுத் தாவது கரு[illegible] பொருத்தமானதே.

## அவரல்லவா துறவி!



வாடகைக் காரில் பயணம் செய்கிறபோது சாரதியுடன் பேசிக்கொண்டே போவது என் வழக்கம். அவர் மீதுள்ள அன்பு காரணம் என்பதைவிட அவர் தூங்கிவிட்டால் என் கதி என்னாகும் என்கிற சுயநலமே முக்கிய காரணம்.

இப்படி ஒருமுறை பேசிக்கொண்டே ஒரு சாரதிக்கு நான் சாப்பிடுகிற பழத்தில் ஒன்றை நீட்டியதும் தமது அனுபவம் ஒன் றைச் சொன்னார். நானும் சிரித்துக் கொண்டேன்.

சிலருக்கு இந்தப்பண்பே இருப்பதில்லை. எவ்வளவு கிடைத் தாலும்தானே அனுபவிப்பார்களே ஒழிய பிறருடன் பங்கிட மாட்டார் கள். ஒரு முறை ரயிலில் முதல் வகுப்பில் என்னுடன் பயணம் செய்ய ஏறிய அரச அதிகாரி ஒருவர் செய்த செயல் என்னால் மறக்கவே முடியாதது. ஒரு பிஸ்கட் பொட்டலத்தைப் பிரித்துப் பாதியைச் சாப்பிட்டவர் மீதியை மடித்து ஜன்னலுக்கு வெளியே நின்ற தமது இறுதிநிலை ஊழியரிடம் கொடுத்தார். "வேண்டாமையா எனக்கெதுக்கு" என்று வாயால் மறுத்தபடியே ஊழியர் இரு கை நீட்டி மரியாதையாகப் பெற்றுக் கொண்டார். அதிகாரி தொடர்ந்தார்.

இதைக்கொண்டுபோய், "எங்கள் வீட்டில் டப்பாவுல போட்டு இறுக்கமாக மூடிவை. சென்னைக்குச் சென்று வந்து சாப்பிடுவேன்" என்றார். கடைநிலை ஊழியர் முகம் கடுப்பாகி விட்டது. எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அந்த ஏழைக்குக் கொடுத்தால் என்ன? இவருக்கென்ன இலவசமாக வேறு கிடைக்காமலா போய்விடும்! மகா கஞ்சன். பொருள் பசை உடையவர்கள் பொதுவாகப் பிறர் நன்மதிப்பை அடைய முடியாது.

இவரைவிட, பிறர் பொருளுக்கு ஆசைப்படுபவர்கள் இன்னும் மோசமான பேர்வழிகள். மகாபாரதத்தில் ஓர் அருமையான காட்சி. அர்ஜுனனால் அவமதிக்கப்பட்ட பாஞ்சாலன் என்கிற அரசன் பிரமாண்டமான யாகம் செய்ய விரும்பினான். அர்ஜுனனைத் தன்மீது ஏவி தன்னை அடக்கிய அவமதித்த துரோணாச்சாரியாரை அவமதிக்க, கொல்ல,ஒரு மகனைத் தரும் சௌத்ராமணி என்கிற பகை வேள்வி செய்ய நினைத்தான் பாஞ்சாலன். உத்தம அந்தணர்கள் யாரும் யாகம் செய்ய வரவில்லை.

இறுதியில் யாஜன் என்கிற பிராமணரைக் கேட்டபோது அவர் யோசித்து, "என் சகோதரர் உபயாஜன் வருவார். போய் அழைத்துப் பார்" என்றார். அவர் வருவார் என்பதற்கு யாஜன் சொன்ன காரணம் விசித்திரமானது. "ஒரு முறை நாங்கள் யாகம் செய்ய ஒரு வீடு ஒன்றுக்குப் போயிருந்தோம். அங்கிருந்த சுவையான பழத்தைப்பார்த்து ஆசைப் பட்ட உபயாஜர் அதனை எடுத்துச் சாப்பிட நினைத்தார். வாயில் எச்சில் ஊறியது. "உடனே சீ....சீ... இது இன்னொருவர் சொத்து. நான் ஆசைப்படக்கூடாது" என்று கூறியபடி கீழே வைத்தார். எனவே அவர் சிறிது பொருளாசை உடையவர் என நினைக்கிறேன் அழைத் துப்பார் என்றார். தனக்குச் சம்பந்தம் இல்லாத பொருள் மீது ஆசை உள்ளவர்கள் எந்தத் தவறுகளுக்கும் துணிந்து விடுவார்கள்.

அந்தப் பணத்தாசை பிடித்த அந்தணர் செய்த யாகத்தில் இருந்துதான் துரோணரைக் கொன்ற திருஷ்டத்துய்மன் மற்றும் அரசகுலம் அழியக் காரணமான பாஞ்சாலி தோன்றினார்கள். பொருளாசை உள்ளவர்களால் உலகில் பல அழிவுகள் வரும். தருமம் தடுமாறும். இது உண்மை.

பகவான் ராமகிருஷ்ணரின் அண்ணன் ராம்குமார் பொருளாசை மிக்கவர். பொருளாசையால் மட்டுமே அவர் கோயில் பூசாரி ஆனார். பக்தி காரணமல்ல. அவரை உலகம் எப்போதே மறந்து விட்டது. ஆனால் இறுதி நாள் வரை பொருள்பற்று துளியும் அற்றவராக வாழ்ந்த பகவான் இராமகிருஷ்ணரை உலகம் இன்னும் மறக்கவே இல்லை மதிக்கிறது.

குறைந்த பட்சம் துறவிகள், சந்நியாசிகள் பொருளாசை அற்றவராக இருப்பது அவசியம். துறவிகளுக்குப் பொருள் ஆசை இருந்தால் ஞானம்சுடர் விடாது. அவர்கள் ஞானிகளே அல்லர். கவியரசர் தாகூர் சொன்ன ஒரு கதை சொல்கிறேன்.

ஒளி பொருந்திய அருளாளர் ஒருவர் குளக்கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். சித்து, மந்திரசித்தி, பலவிதமான ஆற்றல் உள்ளவர் அவர். அவரை எப்படியாவது மடக்கி அவரிடம் சீடராகிப் பல வித்தைகளை அவரிடம் கற்றுக்கொள்ள விரும்பினான் ஒரு பேராசை பிடித்த இளைஞன்.

துறவியைக் கவர என்ன செய்யலாம் என்று யோசித்து அவர் கண்மூடித்தவம் செய்யும்போது அவர் எதிரே இரண்டு விலை உயர்ந்த இரத்தினக்கற்களை வைத்துவிட்டு எதிரே காத்திருந்தான். தவம் முடிந்து கண்களைத்திறந்த அவர் எதிரே இருந்த கற்களை ஆச்சரியமாகப் பார்த்தார். ஒன்றை எடுத்து உற்றுப் பார்த்துவிட்டுச் சிரித்தபடி கூழாங் கல்லை எறிவதுபோல் பளிச்சென்று எதிரே இருந்த குளத்துக்குள் எறிந்து விட்டார்.


பதறிப்போன இளைஞன், "என்ன காரியம் செய்தீர்கள்" என்று அலறியபடி குளத்துக்குள் பாய்ந்து அதைத் தேட ஆரம்பித்தான். அங்கும் இங்கும் தண்ணீரில் மூழ்கி நீண்டநேரம் பரபரப்பாகத் தேடினான். கிடைக்கவே இல்லை. பரிதாபமாக வெளியில் வந்து "ஐயா அது விலை உயர்ந்த இரத்தினக்கல். அதைத் தண்ணீரில் எறிந்து விட்டீர்களே" என்று வருந்தினான்.

"அப்படியா?" என்ற துறவி கீழிருந்த இரண்டாவது பெரிய வைரக்கல்லை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இளைஞன் பரிதாபமாக, "ஐயா அந்த இரத்தினக் கல்லைக் குளத்தில் எந்த இடத்தில் எறிந்தீர்கள்? காட்ட முடியுமா?" என்று கேட்டான். அடுத்த விநாடி, "அதோ.. அந்த இடத்தில்தான் என்று சொல்லியபடி இரண்டாவது வைரக்கல்லையும் எறிந்தார் துறவி.

அவரல்லவா துறவி.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தி பெற்ற மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை மாணவர்களான இ.கஜலக்ஷி(187), சி.சிவசொரூபன் (169), இ.கோவர்த்தனன் (168), நா.அனுசன் (167), நி.விதுஷனா (157), இ.சாளினி (151) ஆகியோர் பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியையுடன் உள்ளனர்.

(ம–26)

# அழிவுகளைச் சந்தித்த பொதுநூலகத்தில் ‘இலங்கைக்கு மீளத் திரும்புதல்’ கண்காட்சி

## மன ஆறுதல் தந்தது என்கிறார் பிரிட்டன் நூலகத்தின் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்.பொதுநூலகம் கடந்த காலங்களில் பல கசப்பான விடயங்களையும் கவலையான விடயங்களையும் சந்தித்துள்ளது.

இந்த நிலையில் இங்கு ‘இலங்கைக்கு மீளத் திரும்புதல்’ என்னும் கண்காட்சி இடம் பெற்றிருப்பது மன மகிழ்வையும் ஆறுதலையும் தருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான பிரிட்டன் நூலகத்தின் பணிப்பாளர் ஜோன் ரொனி.

பிரிட்டன் நூலகம் மற்றும் பிரிட்டிஸ் கவுன்சில் என்பன இணைந்து அண்மையில் யாழ். பொது நூலகத்தில் இலங்கைக்கு மீளத் திரும்புதல் கண்காட்சியை நடத்தியிருந்தன.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்தாவது:

மிக நீண்ட காலத்தையும் தமிழ் பாரம்பரியத்தையும் கொண்ட இலங்கை வாழ் மக்கள் பல வருடங்களுக்கு முன் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதையும் பிரிட்டன் மக்கள் இதனை எவ்வாறு பாதுகாத்தார்கள் எவ்வாறு பதிவு செய்தார்கள் என்பதையும் இலங்கை மக்களுக்கு மீளவும் நினைவுபடுத்துவதற்காக இலங்கைக்கு மீளத் திரும்புதல் எனும் தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

இலங்கை மக்களின் தனிப்பட்ட செழிப்பான வாழ்க்கையையும் வரலாற்றையும் உள்ளடக்கும் வகையில் கையெழுத்துப் பிரதிகள் வரைபடங்கள், சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் கலைத் தொழிற்பாடுகள் அமைந்த பொருள்கள் என்பவற்றின் பதிவுகள் திரட்டல்களிலிருந்து சுமார் 150 இற்கும் மேற்பட்ட பிரதிகள் சிறப்பானதாக அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு பிரதிகளும் சுமார் 300 வருட கால வரலாற்றை ஆவணப்படுத்திக் காட்டுகின்றன.

இந்தக் கண்காட்சியானது பாடசாலை மாணவர்களின் கல்வியை கருப் பொருளாக அமைந்துள்ளது. இலங்கையர்களின் வரலாற்றையும் வாழ்வியல் பண்புகளையும் இந்தக்கண்காட்சி வலியுறுத்துகிறது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரிட்டன் நூலகத்தின் யாழ்ப்பாணத்துக்கான இணைப்பாளர் மேனிக்கா வன்டிபோட்டர், யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-311)

# முயற்சி, தேடல் நிறைந்தவர்கள் வெளிவாரி கற்கை மாணவர்கள்

## பேராசிரியர் விசாகரூபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.11

உள்வாரி பட்டப்படிப்பு மாணவர்களை விட வெளிவாரி பட்டப்பிடிப்பு மாணவர்களிடம் முயற்சி, தேடல் என்பன நிறைந்துள்ளன. யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். விசாகரூபன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய உயர் கல்லூரியின் இந்து நாகரிகத்துறை விரிவுரையாளரும் நிர்வாகியுமாகிய திருமதி அருள்நங்கை சண்முகநாதனின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு யாழ் புதிய உயர் கல்லூரியில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். விசாகரூபன் தலைமையில் இடம்பெற்றது. இதில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விரிவுரையாளர் அருள் நங்கை சண்முகநாதன் சிறந்த ஆளுமைத்திறன் உடையவர். இன்றைய சந்ததி மத்தியில் மூத்தவர்களை மதிக்கும் பண்பு குறைந்து வருகின்றது. இது வருந்த வேண்டிய விடயம். ஆனால் புதிய உயர் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கும் தன்மை பாராட்டப்படக்கூடியது.

வெளிவாரி மாணவர்கள் தகுதி குறைந்தவர்கள் என்று எண்ணக் கூடாது. அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் வெளிவாரிப் பட்டதாரிகளே முன்னணியில் நிற்கின்றனர். இவர்களிடம் முயற்சி, தேடல் என்பன நிறையவே இருக்கின்றன என்பதை இவர்கள் எழுதும் பரீட்சை வினாத்தாள்கள் காட்டுகின்றன. - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவகற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-319)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

திக்கம் சித்திவிநாயகர் வித்தி.

ம.திலக்சியா-170, ஜெ.ஜாதுசன்-167, த.ஆரணி-163, கு.பிரசாந்தி - 153.

மு/நெத்தலியாறு த.வி.

ப.சேதுராகவன்-194, கு.இசைநிலா-152.

மு/குமுழமுனை ம.வி.

ந.றஞ்சித் -169, ம.சசாங்கன்-151, யோ.சங்கவி -160.

மு/கள்ளப்பாடு அ.த.க.பா.

மு. சானுசன் -171, இ.கவிதா -168.

மு/கலைமகள் வித்தி

வி.சாரங்கி-168, சா.லக்சனா-157, உ.சஞ்வியா-148, ம.பிரியங்கன்-155.

மு/ முள்ளியவளை த.வி.

தி.நிருசன்-176, ப.சரண்யா -164, கு.டன்சிகன்-163, யோ.கவிர்சன்-157, தி.அகல்விழி -154, கெ.நிசோபிகா- 154, யோ.கோபிகன்-153.

மு/முல்லைத்தீவு றோ.க.

யோ.துர்கா-174, அ.அபிசாருஜன்-148.

மு/தண்ணீரூற்று இ.த.க.பா

ச.சங்கீதா-183, வி.தட்சாயினி-180, வி.சங்கவியன் -165, இ.கபிசாளினி-163, கெ.தர்மேஸ்-158, ப.சாரங்கா -152, சி.தனுப்பிரியா-151, ம.நிலோஜிதா-148.

மு/வற்றாப்பளை ம.வி.

ஆ.கஜானா -160, ச.சாருண்ஜா -150, கு.தெய்சிகா-151.

மு/தண்ணீரூற்று சீ.சீ.

இ.யுகதர்சன்-160.

மு/முல்லைத்தீவு இ.த.க.

இ.பிரதீபன்-155.

மு/விஸ்வமடு ம.வி.

ஏ.டிரூசன்-171, கி.விதுர்சிகா -167, வி.டிதுர்சா-153, அ.நெல்சன் -153, ந.அருண்-153, கை. சாணுஜா -152, சு.தமிழ்ப்பிரியன்-148.

மு/புதுக்குடியிருப்பு றோ.க.

த. சனோஜன் -150.

மு/விக்கினேஸ்வரா வித்தி.

தி.சுகன்யா-148.

மு/ உடையார்கட்டு ம.வி.

ந.மகிழினி-170, செ.போல்டிசான்-151.

மு/பாரதி வித்தி.

வி.திசாளினி-174, த.லனுசா -165, ச.சான்றன்-152.

மு/தேராவில் த.வி.

ந.டென்சிகா -158.

மு/சிறீசுப்பிரமணிய வித்தி

பி.பிரணவி-180, யே.பிந்துஜன்-172, த.சாகித்தியன்-171, ம.கீர்த்தி-165, நி. குயின்யூடிற் எலிலோவியா- 162, தி.மகிழினி -157, யோ- நிதர்சா-156.

# வடமாகாண ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(நேற்றையத் தொடர்ச்சி)

**பேச்சு (ஆயத்தப் படுத்தல்)**

தரம்12 - பி.ஜனந்தன் (வ/தமிழ் மகா வித்தி), அத்மிகா ஆறுமுகம் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சிறிஸ்குமார் சாகித்தியா (யா/நெல்லியடி மகா வித்தி).

தரம்13 - பி.லவன்சன் (வ/தமிழ் மகா வித்தி), சோமா பூலோகசிங்கம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆரபி சாந்தகுமார் (யா/திருக்குடும்ப கன்னியார் மடம்).

**பேச்சு (ஆயத்தமின்றி)**

தரம் 12 - பி.ஆனந்தசயன் (வ/தமிழ் மகா வித்தி), ரி.தனுஜா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி), அஸ்மிகா கலீல் ரகுமான் (ம/எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தி)

தரம்-13 சம்பவி சிவாஜி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), மதங்கி நவகுமாரன் (யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), ஸ்ரீஸ்கந்தராசா கஜந்தன் (யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி ).

**உரையாடல் நாடகம்**

ஆரம்பப் பிரிவு (3-5)- 2151 (சென்.ஜோன் போஸ்கோ வித்தி), 2155 (யா/உடுவில் மகளிர் கல்லூரி), 2153 (வ/இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தி).

இடை நிலை (6-9) - 2147 (யா/உடுவில் மகளிர் கல்லூரி), 2144 (வ/தமிழ் மகா வித்தி), 2142 யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை).

உயர்தரப் பிரிவு (10-13)- 2112 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2118 (ம/சித்திவிநாயகர் கல்லூரி), 2114 (வ/ இறம்பைக் குளம் மகளிர் மத்திய மகா வித்தி).

**கவிதை நாடகம்**

உயர்தரப் பிரிவு (10-13)- 2123(யா/உடுவில் மகளிர் கல்லூரி), 2120 ( யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), 2124 (ம/சென்.சேவியர் மகளிர் கல்லூரி).

**பாத்திர நடிப்பு**

தரம்6- 2205 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2203 (யாழ்ப்பாணக் கல்லூரி), 2204 (வட இந்து மகளிர் கல்லூரி), 2207 (ம/சென். சேவியர் மகளிர் கல்லூரி).

தரம் 7- 2220 (யா/ இந்து மகளிர் கல்லூரி), 2218 (யாழ்ப்பாணக் கல்லூரி), 2219 (யா/மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம்8 - 2235 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2237 (ம/சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி), 2233 (யாழ்ப்பாணக் கல்லூரி).

தரம் 9 - 2245 (யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), 2248 (வ/ இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தி), 2244 (யா/மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை)

தரம்10- 2255 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2253 (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), 2251 (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

தரம்11 - 2262 (யாழ்ப்பாணக் கல்லூரி), 2264 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2267 (வ/ இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தி).

**தனிநடிப்பு**

தரம் 10 - சத்தியா புவிராஜசிங்கம் (வ/ இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தி), நிகலின் ஸ்ரனிசாக் அன்ரன் (யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), உதயகுமார் மிதுசன் (யா/சென்.பத்திரிசியார் கல்லூரி).

தரம் 11 - சுகன்யா சகயநாதன் (யா/திருக்குடும்ப கன்னியார் மடம்), தனுசன் பேரானந்தராஜா (யா/இந்துக் கல்லூரி), அபர்னா தங்கராஜா (யாழ்ப்பாணக் கல்லூரி).

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவை மீண்டும் கட்டியெழுப்புவோம்

வடமாகாணத்தில் மிக நலிந்து பின்தங்கிக் காணப்படும் கூட்டுறவு அமைப்புக்களை வடக்கில் தூக்கி நிறுத்தும் பொருட்டு கூட்டுறவு சார்ந்த திணைக்களங்கள் பெரு முயற்சியில் இறங்கியுள்ளன.


இதன் முதற்கட்டமாக கைதடியில் மாபெரும் கூட்டுறவுக் கண்காட்சி கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி 3 நாள்கள் தொடர்ந்து நடைபெறுகிறது.

கூட்டுறவுத் துறையை மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தக் கண்காட்சியின் நோக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கண்காட்சியில் கூட்டுறவு அமைப்புக்களும் சமூக நிறுவனங் களும் பங்கு பற்றி தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தியுள்ளன.

வடமாகாணத்தில் தயாரிக்கப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு கண்காட்சியில் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்ததோடு சந்தை வாய்ப்புக்களும் தாராளமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கண்காட்சி தொடர்பாக அதிகாரிகள் சிலர் இங்கே பேசுகிறார்கள்.





**வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார்:**



வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப் படும் உள்ளூர் உற் பத்திப் பொருள்களை மக்கள் மத்தியில் காட்சிப்படுத்துவதன் மூலம் அவற்றின் சந்தை வாய்ப்பை அதிகரிக்கமுடியும். இந்த உற்பத்திப் பொருள்களை மக்கள் ஒரு கூரையின் கீழ் இலவசமாகப் பார்வையிட்டு நன்மையடைய வேண்டும் என்பதே எமது நோக்கம்.

இப்படிப்பட்ட கண்காட்சியின் மூலம் எமது கூட்டுறவு சார்ந்த அமைப்புக்களை வலுவடையச் செய்யலாம். இதற்கு நுகர்வோரின் ஒத்துழைப்பும் மிக முக்கியமானது.

**கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.தவராஜா**



கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை தற்போது மிகவும் அபிவிருத்தியடைந்து வருகிறது.

போரினால் அழிந்த கூட்டுறவுத் துறையை ஒருவாறு நிமிர்த்தி அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டு வந்துள்ளோம்.

இந்தக் கண்காட்சியிலும் கிளிநொச்சி பிரதேச உற்பத்தி பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

எமது மக்கள் கூட்டுறவுத் துறையில் அதிக அக்கறை காட்ட வேண்டும். அப்போதே எமது துறையை மேலும் அபிவிருத்தி செய்யமுடியும்.

இதற்கு மக்களின் ஆதரவு மிக முக்கியம்.

**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன்**



எமது உள்ளூர் மூல வளங்களின் சந்தை வாய்ப்பை சாதகமான முறையில் பயன்படுத்தும் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி போட்டி வியாபாரத்தில் கூட்டுறவுத்துறையை ஈடுபடுத்துவதுமே இந்துறையை மேலும் அபிவிருத்திக்குக் கொண்டு செல்லும்.

அத்துடன் எமது கடின அயராத சேவை மூலமே எமது உற்பத்தித் திறமையை வெளிக்காட்டமுடியும். இதன் மூலம் கூட்டுறவு அமைப்புக்களை மேன்மேலும் அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும். இதற்கு மக்களின் பங்கு, சேவை மிக முக்கியமானது. சகல மக்களும் கூட்டுறவில் இன்றே ஓர் அங்கத்தவராக இணைந்து இதனை உயர்த்த முன்வரவேண்டும்.

**முல்லை. மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.பத்மானந்தன்**



இறுதிக் கட்டப் போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத் தீவில் உள்ள கூட்டுறவு அமைப்புக்கள் தற்போது படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இப்பகுதியில் தற்போது ஆறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் மக்களுக் குச் சேவையாற்றி வருகின்றன. மக்களின் பங்களிப்பும் கூட்டுறவுக்கு அதிகளவில் காணப்படுகின்றது.

பனை தென்னை வளம் மற்றும் கடற்றொழில் சிறு கைத்தொழில் சார்ந்த கூட்டுறவு அமைப்புக்களும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன.

கூட்டுறவு அமைப்புக்களினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான போதிய வசதிகள் இப்பிரதேசத்தில் இல்லை. இக்கண்காட்சி அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது. கூட்டுறவின் தனித்தன்மையும் அதன் மகிமையும் மக்களைச் சென்றடைய வசதியாக ஏற்பாடு செய்த இந்தக் கண்காட்சி முக்கியத்துவம் வாய்ந்தது.

இதில் எமது பிரதேச பனை வள கடல்வள உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ✱

## பணி நிலை வேண்டுகை

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட துணுக்காய், மாங்குளம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் நேரக் கணிப்பாளராகப் பணிசெய்வதற்கு தகுதியுடைய ஆண்கள் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 15.10.2011 ஆம் நாள் காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள சங்கப் பணிமனைக்கு நேரில் வருகை தருமாறு வேண்டுகின்றோம். குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயதெல்லை :-25-40**
**கல்வித்தகைமை:-க.பொ.த(சா.த) நிறைவு செய்திருத்தல் வேண்டும்.**

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்,
முல்லைத்தீவு.

## தொழில் வாய்ப்பு

**றோயல் மார்க் (PVT) LTD. இற்கு**

விற்பனைப் பிரதிநிதிகளுக்கும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வாகன திருத்துநர்களுக்குமான வேலைவாய்ப்பு!

வடபகுதியில் மிகவும் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் 'மஹிந்திரா' மற்றும் 'மைக்ரோ' சொனாலிக்கா இன்டர்நஷனல் விற்பனை முகவர் நிலையத்தினை நாம் மேலும் விரிவுபடுத்தும் நோக்கோடு இந்தத் தொழில் வாய்ப்பானது வடபகுதியில் திறமை உள்ள இளைஞர்களுக்கு வழங்க முன் வந்துள்ளோம். மேற்படி பதவிகளுக்கு சந்தைப்படுத்தல், விற்பனைத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் வாகன திருத்துநர்களிடமும் முன் அனுபவம் உள்ளவர் களிடம் இருந்தும் சுயவிவரக் கோவை (CV) உடன் கூடிய விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பதாக நேரடியாகவோ தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி: Royal Mark (Pvt) Ltd.
123, Kandy Road, Jaffna.
Tel: 021 222 3320, 077 3931 393

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/உடுவில் மகளிர் கல்லூரி
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011 இல் 159 புள்ளிகள் பெற்று சித்தியெய்தியமைக்கும், வட மாகாண ஆங்கில தினப்போட்டியில் (மனனஞ் செய்தல்) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமைக்கும்

செல்வி திவாகரன் ஆதர்சனி

அவர்களை மனமகிழ்ந்து பாராட்டுகின்றோம். இந்த நிலையை இவர் பெற்றுக்கொள்ள ஊக்கமளித்துக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வாழ்த்துபவர்கள்**

அப்பம்மா, அப்பப்பா,
துன்னாலை.

மாமன்மார்,
மாமிமார்.

அம்மா, அப்பா
அம்மம்மா, தாத்தா.
ஓடக்கரை வீதி, சங்கானை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாநிதிப்பட்டம் பெற்ற உயர்திரு.
செஞ்சொற் செல்வர்
**ஆறு .திருமுருகன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
"தோன்றி-புகழோடு தோன்றி-" என்னும் திருவள்ளுவரின் வாக்கின் படி சமூக தொண்டனும் எங்கள் தமிழ் மக்களின் ஆன்மீகப் பாதைக்கு அரும் பணியாற்றிக் கொண்டிருப்பவரும் ஆன உயர் திரு. செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆலய திருப்பணிக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைப்பதற்கரிய ஒரு பேறாகும். எல்லோருக்கும் அப்பேறு கிடைப்பதில்லை நாட்டின் வளர்ச்சிக்கு சமுதாய வளர்ச்சிக்கு மற்றும் திருப்பணி வளர்ச்சிக்கும் காரியமாற்றி வெற்றி காண்பது ஒரு பெரிய காரியமாகும்.

"எங்கும் பொங்கட்டும் இறையருள்"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" "வாழ்க வளர்க சமயப் பணிக்கொழுந்து"

வாழ்த்துவோர்,
இராஜேஸ்வரன் குடும்பம், பரம்பரை அறங்காவலர்
[illegible]
ஸ்ரீ [illegible] வைரவர் கோயில் [illegible] இராஜேஸ்வரன்.

## ஸ்ரீ பகவதி பகவான் கடாக்ஷ பூஜை



"மனிதர்களின் முயற்சிகள் கண்களுக்குப் புலப்படுபவை ஆண்டவனுடையவை கண்களுக்குப் புலப்படுவதில்லை"

மேற்படி கடாக்ஷ பூஜையும் பஜனையும் நாளை (12.10.2011) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் இலக்கம் 35 இல் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் தவறாது பங்குபற்றி ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகத்தைப் பெற்று சிறப்புடன் வாழ அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பி.ப. 4 மணிக்கு பூஜையும் பஜனையும் நடைபெறுகின்றன என்பதனையும் அறியத்தர விரும்புகிறோம். அம்மா சரணம்

ஸ்ரீ கல்கி இல்ல சிறுவர்கள். தொ.பே: 07705581[illegible]

## சேவை

Singapore, UK போன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலைவாய்ப்பு.
தொடர்பு: 0779692434

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி நீர்வேலியில் (பெற்றோல் சைட் ஒழுங்கை) சகல வசதிகளுடனும் வாகன தரிப்பிட வசதியுடனும் வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கு மட்டும்)
தொடர்பு: 0756715762, 0779149221

## வேலை ஆள் தேவை

குமாரன் சுற்றுலா விடுதிக்கு இரவு நேர முகாமையாளர் தேவை. ஆங்கிலம், சிங்களம் பேசக் கூடியவராகவும் அரச கூட்டுத்தாபனத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது. நேரில் சமுகம் தரவும்.
முகாமையாளர், 67, குமாரன் சுற்றுலா விடுதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து பூராடம் 4ஆம் பாதம், 5'5'' உயரம்,32வயது,12இல் செவ்வாய், பிரபல வங்கியில் பணியாற்றும் மணமகனுக்கு 12 இல் செவ்வாய், 4இல் செவ்வாயுள்ள மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 0775557437
0774677924

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0776487264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

## சித்திபெற்ற மாணவ மணிகளைப் பாராட்டுகின்றோம்

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 43 மாணவர்கள் சிறப்புச் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர். இந்தப் பரீட்சையில் 129 மாணவர்கள் தோற்றி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட சித்திப் பெறுபேறுகளை 100 % பெற்றுள்ளனர். மேலும் 140 புள்ளிகளுக்கு மேல் 68 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் ( 88 %)113 மாணவர்களும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களின் வெற்றிக்குத் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உதவி புரிந்த கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



து.வைஷ்ணவி 186 | ஜெ.மாதவன் 182 | ந.ஹரிகிருஸ்ணா 179 | இ.மிதுசுகி 176 | லோ.கஜீபன் 176 | த.சுந்தரேஸ்வரி 175 | பு.சோபியா 175 | இ.கஜானி 174 | செ.சுஜான்ஸன் 172



சி.நிதீபா 171 | ரு.சாரங்கன் 171 | ப.கேசாஜினி 171 | சு.மாதங்கி 169 | ஜெ.கிஷோரன் 167 | ஜெ.கஜவதனா 167 | ரு.லக்சாயினி 167 | இ.தர்மினி 167 | சி.சாருயன் 166



அ.பானுஷா 165 | சி.சிவகோபன் 165 | க.ஜஸ்மினி 165 | கா.சினேகா 164 | வி.விபுலன் 164 | ம.ஆரபி 163 | ப.வூர்மிலன் 163 | கே.ரகுராம் 162 | சி.கீர்த்திகன் 161



க.ஜனுசன் 161 | மோ.மதுர்ஷனா 160 | வ.கீர்த்தனா 159 | வி.தாரகா 158 | பா.கஜீபன் 158 | கு.சங்கவி 158 | சி.கீர்த்திகா 157 | ல.நிதுர்சன் 156 | ச.கிருசாம் 156



இ.இந்துஜன் 154 | இ.கதுஷிகா 154 | சு.டெனீசன் 154 | சி.பிரியதர்சினி 154 | ப.லிவியப்பிரசாத் 153 | த.தேனுஷா 152 | பா.கோகுலகிருஸ்ணன் 151

### அண்மைய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பு.சாளினி | - 150 | க.லவின்சன் | - 146 | மு.யனுசியா | - 142 |
| அ.அருண் | .- 148 | ச.நிஜந்தன் | - 146 | வெ.மதுராந்தகி | - 142 |
| ம.கௌரிதாஸ் | - 148 | த.சஞ்சீவன் | - 146 | சி.டிலக்ஷன் | - 142 |
| சு.ஹம்ஷாயினி | - 148 | க.துசந்திகா | - 145 | இ.விஸ்வச்சந்துரு ஐயர் | - 142 |
| சி.தேமதுரன் | - 148 | வ.ஜஸ்மிதா | - 144 | ம.கிருஷன் | - 141 |
| இ.டிசாந்தி | - 147 | நா.அபிநயா | - 143 | த.பிரத்திகா | - 141 |
| சு.லிலோஜன் | - 147 | ப.பரிபாலினி | - 143 | பி.ருஸ்யந்தி | - 141 |
| வி.பிரியதர்ஷினி | - 147 | பா.ராதாஞ்சலி | - 142 | அ.திவ்வியா | - 140 |
| இ.சங்கீர்த்தனன்- 147 | | | | | |



செல்வன்
பி.நிலாப்பிரியன்
தரம் - 2
துரித கணிதச் செய்கைப் போட்டி
மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம்



செல்வி
ந.சபீனா
தரம் - 3
வாய்ப்பாடு மனனப் போட்டி
மாகாண மட்டத்தில் முதலாம் இடம்



செல்வன்
ஜெ.திருமாறன்
தரம் - 4
வாய்ப்பாடு மனனப் போட்டி
மாகாண மட்டத்தில் முதலாம் இடம்

**இந்த மாணவர்களைக் கௌரவிக்கும் பாராட்டு விழா இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை பாடசாலை சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது**

பிரதம விருந்தினர் :
**திரு. யோகேந்திரா ரவீந்திரன்**
(கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்)

விசேட விருந்தினர் :
**திரு. இராஜரெட்ணம் இராஜேஸ்வரன்**
(ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண சபை)

கௌரவ விருந்தினர் :
**செல்வி ஞானலோஜினி சிவஞானம்**
(பழைய மாணவி, சட்டத்தரணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைச் சமூகம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

# தென்புலோலி காந்தியூர் கிராம மக்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் சனசமூக நிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையத்துக்கு முன்னால் உள்ள வத்துப்பளை கண்ணகை அம்மன் கோயிலும் வழிவந் தமையால் வத்தாப்பளை கண்ணகை அம்மன் கோயில் என மாற்றம் பெற்றது.

இந்தக்காலத்தில் சனசமூக நிலையத்தின் நிர்வாக சபை மாதம் ஒரு முறை கூடி சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்தி வந்தது. வருட முடிவில் வருடாந்தப் பொதுக் கூட்டம் சனசமூக நிலையத்துக்கு முன்னால் உள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் அலங்கார மேடை அமைத்து மாலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டு அந்தமேடையில் நடைபெற்று வந்தது.

அந்தக் கூட்டத்தில் அந்த ஆண்டு கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டவுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இந்தக் கிராம மக்களில் அறிவு, ஆற்றல்கள் நிறைந்தவர்கள் பல அரிய கருத்துக்களை மக்களுக்குக் கூறுவார்கள். இந்தக் கிராம மக்களின் அறிவு ஆற்றல்களை மேன்மேலும் வளர்க்கும் பொருட்டு வெளியிடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட அறிஞர்களின் சொற்பொழிவுகளும் இடம் பெறும். இந்த வகையில் இந்தக் கிராம மக்களின் அறிவு, ஆற்றல், சிந் தனை, கல்வி அறிவு வளர்ச்சிக்கான பல முன்னேற்றகரமான செயற்திட்டங்களை காந்தியூர் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அக்காலத்தில் திட்டமிட்டு நிறைவேற்றி



வந்துள்ளனர்.

அந்தக்காலத்தில் காந்தியூர் சன சமூக நிலையத்துக்கு, கிராம மக்களின் வாசிப்பு, அறிவுமேம்பாடு கருதி தினகரன், வீரகேசரி, அம்புலிமாமா, சோவியத்நாடு, டைம்ஸ் ஒப் சிலோன் ஆகிய பத்திரிகைகள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. 1960 ஆம் ஆண்டுக்கு முந்திய காலங்களில் ஈழகேசரி தவிர வேறு பிராந்திய பத்திரிகைகள் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தக்காலத்தில் பத்திரி கைகள் மாத்திரமன்றி மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இதிகாச நூல்களும் தாயுமானவர் சுவாமிகள் நூல்கள், சமய குரவர்கள் வரலாறுகள், அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகள் போன்ற சைவ சமய நூல்களும், ஔவையாரின் கொன்றைவேந்தன், ஆத்திசூடி போன்ற நீதிக்கதை நூல்களும் திருக்குறள் நாலடியார், பாரதியார் பாடல் கொண்ட நூல்களும் சன சமூக நிலையத்தில் வைக்கப்பட்டு அவற்றை மக்கள் வாசிப்பதற்காக சுழற்சி முறையில் அன்றைய காலங்களில் வழங்கப்பட்டுவந்தன. இவற்றை அந்தக் கிராம மக்கள் வாசித்ததன் மூலம் தமிழ், சைவசமய அறிவுரைகளைப் பெற்றார்கள் என்பதை நினைவு கூறவேண்டும்.

இது மாத்திரமன்றி சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டகாலம் முதல் 1960 ஆம் ஆண்டுவரை காந்தியூர் சனசமூக நிலையத்தினால் நவராத்திரி விழா, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நான்கு சமய குரவர்கள் மற்றும் திரு வள்ளுவர் குருபூசைகள் நடத்தப்பட்டு வந்தமையால் மக்களிடையே சமய அறிவு, ஒழுக்கம் மேன்மேலும் வளர்ந்து கூர்மை பெற்றன.

இந்தக் கிராம மக்கள் பத்திரிகைகள், சைவசமய, தமிழ் அறிவு நூல்களை மட்டும் வாசித்தால் மட்டும் போதாது. வானொலி மூலம் செய்திகளை அறிய வேண்டும் என்ற எண்ணம் நிலையத்தின் மாஸ்டரிடம் இருந்து வந்தது. அந்தக் காலத்தில் வீடுகளில் வானொலி கேட்பது மிக அபூர்வமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் யாராவது ஒரு பொருளைப் பெட்டியைக் கொள்வனவு செய்து, அதனை சனசமூக நிலையத்தில் வைத்து செய்திகள் ஒலிபரப்பப்படும் வேளைகளில் கிராம மக்கள் செய்திகள் கேட்க வசதிவாய்ப்புச் செய்யப்பட்டது. அந்தக் காலங்களில் வானொலி கேட்பதற்கு கிராம மக்கள் சனசமூக நிலை யத்தில் பெருந்திரளில் ஒன்று கூடி வானொலிச் செய்திகளைக் கேட்பார்கள்.

**கர்ணன்**

இந்தக் கிராம மக்களுக்கு தமிழ் மொழி, சைவ சமய அறிவு, நாட்டு நடப்புக்கள் பற்றிய அறிவு, ஆற்றல்கள் என்பனவற்றை வளர்ப்பதுடன் மட்டும் இந்தச் சனசமூக நிலையத்தின் அப்போதைய நிர்வாகம் நின்று விடாமல் இந்தக் கிராமத்துக்குத் தேவையான பொதுவான அபிவிருத்திகளை மேற்கொள்வதிலும் முனைப்புக்காட்ட ஆரம்பித்தது.

(தொடரும்)

மிருதங்க அரங்கேற்றம்



நுண்கலைமாணி நல்லூர் திரு. க.கண்ணதாசன் அவர்களின் மிருதங்க மாணவனும்
திரு. திருமதி சத்தியதாஸ் - சுதாயினி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும்
யா/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவனும்
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவனுமாகிய
செல்வன் சத்தியதாஸ் ரவிவர்மன் அவர்களின்
மிருதங்க அரங்கேற்றம்

இடம்: ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம்
காலம்: 11.10.2011 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 2.00 மணி

அணிசெய் கலைஞர்கள்
பாட்டு: சங்கீத வித்துவான் A.K. கருணாகரன்
வயலின் : முதுதத்துவமாணி K. குகபரன்
மிருதங்கம் : செல்வன் சத்தியதாஸ் ரவிவர்மன்
கெஞ்சிரா : கலாவித்தகர் R.சிவராமன்
கடம் : இசைக்கலைமணி S. சிவசிவா
முகர்சிங் : கலாவித்தகர் N.சதீஸ்குமார்

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைத்து அன்பர்கள், நண்பர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி க.சத்தியதாஸ்
(வில்லிசைக் கலைஞர்) குடும்பத்தினர்.

வீடு வாடகைக்குண்டு
4 வாகனங்களுக்குமேல் பார்க் பண்ணக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு கொக்குவில் கேணியடியில் உண்டு. அரச / அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0773058872, 0779799706. (9528)

USA - Green Card
அமெரிக்க விசா லொத்தர் விண்ணப்ப விவரங்களுக்கு,
Penguin Book Shop,
B2-F23, Bloemendhal Flats.
Colombo-13.
T.P: 0725110911, 021 2438367.
(ச/5535)

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
V Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic
தலைமுடி உதிர்தல், ஆண்,பெண் வழுக்கை, பொடுகு, இளநரை, புளுவெட்டு, Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை, இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது வவுனியா-19,20 ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு-021-2220288
தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

அகவை பதினைந்தில் பாராட்டி வாழ்த்துகின்றேன்



ஓதுவார் என ஊராரால் அழைக்கப்படும்
கணேசசுந்தரம் மைந்தன்
கண்ணதாசனை ஆசான் ஆகக்கொண்டு,
கதிரவேலு - இராசமணி தம்பதியரின் மகனாம்.
வில்லினிலே கவிபாடும் சத்தியதாஸ்
புதல்வனாம் ரவிவர்மன் எனும் விண்மீன்
எனது அருமைப் பெறாமகனின்
பதினைந்தாவது பிறந்த தினம் நாளையாகும்.
இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை
காணுகின்றார் மிருதங்க அரங்கேற்றந்தனை ஆவரங்கால்
சிவசக்தி மணிமண்டபத்தில். வாழ்க பல்லாண்டு ஆயிரம்
அரங்கேற்றம் கண்டு. வாழ்த்துபவர்:
ச.ரவிவர்மன்
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
சித்தப்பா
க. சதீஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுத் தபால்களின் பாதுகாப்பை அதிகரிக்க நவீன தொழில்நுட்பம் விரைவில் அறிமுகம்

கொழும்பு,ஒக்.11

தபாலகங்கள் பதிவுத்தபால்களை பொறுப்பேற்ற நாள் தொடக்கம் அது உரிமையாளரை சென்றடையும் நாள் வரை மேலதிகப் பாதுகாப்பை வழங்குவதற்கான நவீன தொழில்நுட்பம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் அறிமுகப் படுத்தப்படுமென தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன்குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாடெங்குமுள்ள தபாலகங்களை வலைப் பின்னல் ஒன்றின் கீழ் கொண்டு வருவதன் மூலம் பதிவுத்தபால்களின் பாதுகாப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும்.

இப்போது தபாலகங்களில் வழங்கப்படும் சாதாரண பதிவுச் சீட்டுக்குப் பதிலாக பார்கோட் இலக்கம் கொண்ட சீட்டு வழங்கப்படும். இதன்மூலமாக பதிவுத் தபாலின் நிலை குறித்து கணினி மூலம் அவ்வப்போது தெரிந்து கொள்ள முடியுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை ஓய்வூதியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் ஒன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாமில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்தியர்களான செல்வி பு.அங்கனி, கே.சபாநடேசன் மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்களான என்.திவாசுதன்,கே.அஜந்தன் பொதுச் சுகாதார மருத்துவ மாதுகளான எஸ்.நிரோஜா, பி.சுகிர்தா ஆகியோர் முதியவர்களுக்கான மருத்துவ முகாமை நடத்தினார்கள். (86)

# வடமாகாண பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.11

வடக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கான கலந்துரையாடல் கடந்த 4 ஆம் திகதி யாழ். நகரிலுள்ள ரில்ஹோ ஹோட்டலில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் வட பகுதிக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மக்களுடன் இணைந்து மக்களது பிரச்சினையைத் தீர்க்கும் வழி வகைகள் குறித்து காமினிசில்வாவினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக்கு குழுக்களை வலுப்படுத்தும் செயற்றிட்டம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலுமுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தரத்திலுள்ளவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்தையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

சமூக மட்டத்திலுள்ள தலைவர்களை இணைத்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மக்களுடன் இணைந்து தீர்வு காண்பதுக்கான வழிவகைகள் ஆராயப் பட்டன.

மாவட்டம் தோறும் பொது மக்களைச் சந்தித்து பொதுமக்கள் - பொலிஸார் இணைந்து எவ்வாறு செயற்படலாம் என்று ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பொலிஸ் சேவையை மேற்கொள்வதற்கான கலந்துரையாடலே இதுவாகும் - என்றார். (ச-14)

# சிறுவர் இயல், இசை அரங்க விழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

பி.டபிள்யூ. அரியரட்ணம் ஞாபகார்த்தமாக அகில உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் சிறுவர் இயல்,இசை அரங்க விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தரம் -1 முதல் தரம் -5 வரையான மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குகொள்ளலாம். ஆர்வமுடைய பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-313)

# விளையாட்டுத் துறைக்கான பல்கலைக்கழக அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.11

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் 2010 -2011 ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கான பல்கலைக் கழக அனுமதியில் உள்ளூர் பல்கலைக் கழகங்களுக்கு விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த திறமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான விசேட உள்ளெடுப்புக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானம், முகாமைத்துவம் மற்றும் உடற்றொழில் கல்வி ஆசிரிய பட்ட பாட நெறிகளை கற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களாகவும் கலந்து கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆசிய விளையாட்டுப்போட்டிகள் அல்லதுசார்க் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களாக இருக்க வேண்டும்.

கிரிக்கெட், கால்பந்தாட்டம் நகர் மற்றும் கரப்பந்தாட்டங்களில் தேசிய அணியில் அங்கத்தவராக இருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்டதேசிய விளையாட்டு அணியில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் மேலதிகச் செயலாளர், கல்வி சார் அலுவல்கள் மற்றும் பல்கலைக் கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, இல. 30 , கொழும்பு - 07 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-86)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி பொன்மணி இராசதுரை



நிஜமாக 24.04.1937

நிழலாக 11.09.2011

எமது தாயாரின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மாலைகள், மலர்வளையங்கள் வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்பென்ற சொல்லுக்கு
பொருள்தந்த அன்னையே!
ஊர் போற்ற நாம் வாழ
வகைசெய்த தெய்வமே!
உனக்காக ஒரு நொடியும்
ஒதுக்கிக் கொள்ளாது
விழிகாக்கும் இமையாக
எமைக்காத்த தாயே!
இறை எனும் பேரருள்
பெறுவாயம்மா
முடிவில்லா இன்பத்தை
அடைவாயம்மா

**இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

வட்டுவினி
இணுவில் மேற்கு,
இணுவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா-19,20 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078, 011-2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021-4923416, 021-2220288.
Head Office Colombo - 011 4874854

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



இராசன் தருமரத்தினம்

*உதிர்வு: 26.08.1947*
*மறைவு: 11.09.2011*

அப்பா என்று உறவாட யாரும் - இல்லையே
அன்புமொழி பேசிவிட நீயும்-இல்லையே
ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும்
அன்பான எம் அப்பாவுக்கு நிகராகுமோ

கடந்த 11.09.2011 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*'[illegible]', கரணவாய் வடக்கு,*
*நாச்சிமார் கோயிலடி, கரவெட்டி.*

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி, தயாநிதிமாறன் வீடுகளில் சி.பி.ஐ. நேற்று அதிரடிச் சோதனை

## இருவர் மீதும் வழக்குப் பதிவு

டில்லி, ஒக்.11

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் முன்னாள் தொலைத் தொடர்புத்துறை மத்திய அமைச்சர் தயாநிதிமாறன், சன் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் கலாநிதிமாறன் (கருணாநிதி பேரன்மார்) மீது சி.பி.ஐ., முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தது. இதனையடுத்து சென்னை, டில்லி மற்றும் ஐதராபாத்தில் உள்ள இவர்களது வீடுகள், சன் தொலைக்காட்சி அலுவலகங்களில் நேற்றுக்காலை சி.பி.ஐ. அதிகாரிகள் அதிர டிச் சோதனையில் ஈடுபட் டனர்.

அப்பலோ நிறுவனம் மற்றும் வீடுகளில் சி.பி.ஐ., விசாரணை நடத்தி வருகிறது. சி.பி.ஐ., விசாரணையை அடுத்து சன் தொலைக்காட்சி நிறுவனப் பங்குகள் கடுமையாகச் சரிந்தன. தொலைத் தொடர்புத் துறையில் ராஜாவுக்கு முன்பாக அமைச்சராக இருந்து அவரைச் சிறைக்குத் தள்ளி விட்டு அவரைத் தொடர்ந்து செல்லவிருக்கிறார் என்பதுதான் உண்மையான விடயம். வழக்குப் பதிவை அடுத்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும் தொடர்ந்து அவரைக் கைது செய்து விசாரிக்கவும் சி.பி.ஐ., முடிவு செய்திருப்பதாக டில்லி வட்டாரம் தெரிவிக்கிறது. கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் மேல் நீதிமன்றத்தில் சி.பி.ஐ., தயாநிதி விவகாரம் தொடர்பாக எடுத்து வரும் நடவடிக்கையை விவர அறிக்கையாகத் தாக்கல் செய்தது. சீல் இட்ட கவரை நீதிபதிகள் ஜி.எஸ்.,சிங்வி மற்றும் ஏ.கே,கங்குலி ஆகியோர் கொண்ட குழு முன்பு தெரி வித்தபோது தயாநிதி மீதான ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே இன்னும் ஒரிரு நாளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றனர். இதனையடுத்து சி.பி. ஐ., நேற்று வழக்குப் பதிவு செய்துள்ளது.



விசாரணை நடத்துவதற்காக அதிகாரிகள் ராஜா அண்ணாமலைபுரம் பகுதியில் உள்ள தயாநிதி வீட்டிற்கு நேற் றுக் காலை 7 மணிக்கு சி.பி.ஐ. அதிகாரிகள் வந்தனர். கதவை திறக்குமாறு கேட்டபோது வாச லில் நின்ற காவல்காரனிடம் கேட்டனர். ஆனால் அவர் மறுத்து விட்டார். வீட்டில் உள்ளே இருக்கும் நபர்களிடம் காவல்காரன் இந்த தகவலை சொல்லியிருக்கிறார்.

ஆனால் எவ்வித பதிலும் இல்லை. அரை மணி நேரமாக காத்திருந்த அதிகாரிகள் விரைவாக கதவை திறக்குமாறும் இல்லை என்றால் உன்னை கைது செய்ய வேண்டி இருக்கும் என்று மிரட்டிய பின்னர் கதவு திறந்து விடப்பட்டது. 7. 35 மணிக்கு சி.பி.ஐ., அதிகாரிகள் உள்ளே நுழைந்தனர். தொடர்ந்து விசாரணை நடத்தினர். காலை 10.30 மணியளவில் தயாநிதி வீட்டுக்கு வந்தார். அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் காரணமாக மத்திய அமைச்சர் பதவியை இழந்த 2 ஆவது நபர் என்ற இடத்தைப் பிடித்தார் தயாநிதி. அமைச்சர் பதவியை இழந்ததுடன் முடிந்து விடக் கூடாது, தொடர் குற்ற நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் மற்றும் ஊழல் எதிர்ப்பாளர்கள் வலியுறுத்தி வந்தனர். சிலர் சி.பி. ஐ.,விசாரணை மீது சந்தேகப் பார்வை வைத்தனர். ஆனால் காலம் கடந்தாலும் தயாநிதியைத் தப்பிக்க விடாமல் பெரும் ஆதாரத் திரட்டுடன் வழக்குப் பதிவு செய்திருக்கிறது சி.பி.ஐ.,

தயாநிதி மற்றும் அவரது சகோதரர் கலாநிதி, அனந்த கிருஷ்ணன் மற்றும் ரால்ப் மார்ஷல் ஆகியோர் மீது இந்திய குற்றவியல் சட்டம் 120 பி பிரிவு 13(2) மற்றும்13 (1) (டி) மற்றும் ஊழல் தடுப்புச் சட்டப்பிரிவு 7 மற்றும் 12ன் கீழ் வழக்கு பதிவுசெய்யப் பட்டுள்ளதாக, சி.பி.ஐ., செய்தித் தொடர்பாளர் தரணி மிஸ்ரா தெரிவித்தார். (வ)

## இந்திய கடல் எல்லையை வரையறை செய்ய வேண்டும்

### சரத்குமார்

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க, இந்திய கடல் எல்லையை மத்திய அரசு உடனடியாக வரையறை செய்ய வேண்டும் என்று சரத்குமார் தெரிவித்தார்.

சமத்துவ மக்கள் கட்சித் தலைவரும்,சட்டப்பேரவை உறுப்பினருமான சரத்குமார் ஈரோட்டில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் இரவு கூறுகையில்:

உள்ளூராட்சித் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து இன்று முதல் பிரசாரம் செய்கிறேன். ஈரோட்டில் அ.தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்து நாளை மறுதினம் பிரசாரம் செய்ய உள்ளேன்.

இலங்கை ராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப் படுவதைத் தடுக்க, இந்திய கடல் எல்லையை மத்திய அரசு உடனடியாக வரையறை செய்ய வேண்டும். கடல் எல்லையில் இந்திய ராணுவத்தை கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரை, பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். இதுகுறித்த தொடர் நடவடிக்கைகளை பிரதமர் உடனடியாக அறிவிக்க வேண்டும்- என்றார் அவர். (வ)

# தமிழர் விடயத்தில் பாகுபாடு காட்டுகிறது மத்திய அரசு

## சாடுகிறது கூடங்குளம் போராட்டக்குழு

தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும் அனைத்துப் பிரச்சினைகளிலும் மத்திய அரசு தமிழர்களை வேறுபடுத்தி பிரித்துக் காட்டுகிறது.

தமிழர்கள் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளிலும் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு பாகுபாட்டு மனப் பான்மையுடன் தொடர்ந்து நடந்து வருகிறது என்று கூடங்குளம் போராட்டக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

கூடங்குளம் அணு மின் நிலையத்தை மூடக் கோரி பெரிய அளவில் உண்ணாவிரதப் போராட்டத்தை இடிந் தகரை கிராமத் தில் கூடங்குளம் அணு மின் நிலைய எதிர்ப்புப் போராட்டக் குழு நடத்தியதை யடுத்து அந்தக் குழுவினர் முதல்வர் ஜெயல லிதாவைச் சந்தித்தனர். பின்னர் போராட்டம் கைவிடப் பட்டது.

அதைத் தொடர்ந்து தமிழக அரசுக் குழுவுடன் டில்லிக்குச் சென்று பிரதமரை போராட்டக் குழுவினர் சந்தித்தனர். அப்போது அணு மின் நிலையத்தை மூடுவது குறித்து பிரதமர் உறுதியளிக்கவில்லை என்பதால் போராட்டக் குழுவினர் அதிருப்தி அடைந்த நிலையில் அணு மின் நிலையத்தை மூடக் கோரி இடிந்தகரையில் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். போராட்டம் குறித்து போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயக்குமார் கூறுகையில்:

தமிழர்கள் விவகாரத்தில் எப்போதுமே மத்திய அரசு அலட்சியத்துடன் நடந்து கொள்கிறது. ஈழப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, நதி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அனைத்துப் பிரச்சினைகளிலும் மத்திய அரசு பாகுபாட்டு மனப்பான்மையு டன்தான் நடந்து வருகிறது. தமிழர்களின் நலன்களைப் பின்னுக்குத் தள்ளுவதை அது வாடிக்கையாகக் கொண்டுள்ளது. இது தமிழ் மக்களைப் புறம் தள்ளி, அவமதிக்கும் செயலாகும் - என்றார் உதயக்குமார். (வ)



திருச்சி மேற்குத் தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளர் பரஞ்சோதி மற்றும் மேயர் வேட்பாளர் ஜெயா ஆகியோரை ஆதரித்து முதல்வர் ஜெயலலிதா பேசினார். (வ)

# தமிழகம் அமைதிப் பூங்காவாக விரைவில் மாறும்-ஜெயலலிதா

தமிழகம் அமைதிப் பூங்காவனமாக மாறும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார். இந்திய சட்டசபை தேர்தல் பிரசாரத்தில் ஈடுப்பட்டுள்ள முதல்வர் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் தமிழகம் விரைவில் அமைதிப் பூங்காவாக மாறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே ஊழல்புரிந்தவர்கள் தற்போது சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தமிழக முதல்வர் குறிப்பிட்டார். (வ)

# முருகன்-நளினி சந்திப்பு

வேலூர், ஒக். 11

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியும், முருகனும் கடந்த சனிக்கிழமை காலை சந்தித்துப் பேசினர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் உள்ளனர்.

இதே வழக்கில் கைதுசெய்யப்பட்ட நளினி ஆயுள் தண்டனைக் கைதியாக வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

வேலூர் பெண்கள் சிறையில் நளினியை முருகன் 15 நாள்களுக்கு ஒருமுறை சந்தித்துப் பேச அனுமதிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை காலை பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வேலூர் மத்திய சிறையில் இருந்த முருகனை பெண்கள் தனிச்சிறைக்கு காலை 8.30 மணிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு காலை 8.30 மணி முதல் 9 மணி வரை நளினியும், முருகனும் சந் தித்துப் பேசினார்கள். பின்னர் முருகன் மீண்டும் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். (வ)

# தெலுங்கானா விவகாரம்: சந்திரசேகர ராவை கொல்லச் சதி

## உளவுத்துறை எச்சரிக்கை

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்க கோரி தெலுங்கானாவில் தொடர் போராட்டம் நடந்து வருகிறது. தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதிக் கட்சித் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான சந்திரசேகர ராவ் தனி மாநில போராட்டத்தை தீவிரப்படுத்தி வருகிறார். இந்தநிலையில் சந்திரசேகர ராவை கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டிருப்பதாகவும் அவருக்குக்குண்டு துளைக்காத கார் வழங்கவேண்டும் என்றும் மாநில உளவுத்துறை கூறியுள்ளது. இதையடுத்து சந்திரசேகரராவுக்கு மாநில அரசு சார்பில் குண்டு துளைக்காத கார் வழங்கப்பட்டுள்ளது. (வ)

# அத்வானியின் ரத யாத்திரை இன்று ஆரம்பம்

ஊழல், கறுப்புப் பணத்துக்கு எதிரான பா.ஜ.க. தலைவர் அத்வானியின் ரத யாத்திரை இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த யாத்திரை மூலம் தன்னை 2014 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக முன் நிறுத் திக் கொள்ள அத்வானி முயல்வதாகக் கருதப்படுகிறது. ஆனால், இதை ஆர்.எஸ்.எஸ். எதிர்த்து வருகிறது. இதையடுத்து அண்மையில் நாக்பூர் சென்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தை சந்தித்த அத்வானி, நான் பிரதமர் பதவிக்கான போட்டியில் இல்லை என்று அறிவித்தார். பிகாரில் ஜெய் பிரகாஷ் நாராயண் பிறந்த இடமான சாப்ராவில் இன்று நிதிஷ் குமார் கொடி அசைத்து வைத்து இந்த ரத யாத்திரையை ஆரம்பித்து வைக்கிறார். அடுத்த மாதம் 20ஆம் திகதி டில்லியில் இந்த ரத யாத்திரை நிறைவு பெறும். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Hatton National Bank

### அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.08.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15.10.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி


## அந்தணர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 11

சிவஸ்ரீ பிரபாகரேஸ்வரக் குருக்கள் அறக்கொடை நிதியம் வழங்கும் அந்தணர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ''தற்கால சூழ் நிலை யில் சிவச்சாரியார்கள்'' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மாவும், ''அயல் நாடுகளில் சிவச் சாரியார்கள்'' எனும் தலைப்பில் ''சிவஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியாரும் கருத்துரைகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து இரண்டு வருடங்களாக குருகுலக் கல்வியைத் தொடர்ச்சியாகக் கற்ற மாணவரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

(வ- 313 )

## கேதார கௌரி விரத பூசைகள்

வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரத வழிபாடுகள் தினமும் காலை 8 மணி முதல் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் பஜனை சபையினால் வெளியிடப்பட்ட கௌரி காப்பு மகிமை நூலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(ம-28)


### சுலொட்டட் ஆங்கில்ஸ் (SLOTTED ANGLES)



| நபிஸ் இண்டஸ்றிஸ் | MHE இன்டர்நேஷனல் | ஜெயகிருஷ்ணா |
|---|---|---|
| 38/7, பழைய கஸ்பாவ வீதி, ரட்ணபிட்டிய, பொரளஸ்கமுவ. Tel : 0112517552/0777 721 552 | 291, Old Moor St. Col - 12. Tel : 0777 777 770 | 20, K.K.S Rd, சுன்னாகம். 0212240221/0777722589 |


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

ஸயன். கதிர்காமத்தம்பி நாகராசா (J.P.)

(இளைப்பாறிய அதிபர் தெ/ மகாஜனக் கல்லூரி, மாவட்ட இணைப்பாளர்–இந்து கலாசார சமூக சேவைகள் அமைச்சு)

மனம் மகிழ 28.11.1938

மனம் நெகிழ 07.10.2006

திதி: பூரணை 11.10.2011

நிலவுலகில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த பெருமரம் நீங்கள் இன்று இல்லையே
நீரின்றிய தாவரம் போல உம்பிரிவால் தவிக்கின்றோம்.
நீங்காது உங்கள் நினைவு எம் உயிர் உள்ளவரை

8 ஆம் கட்டை,
மல்லாகம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


### வீடு வாடகைக்கு

கொக்குவில் அச்சக ஒழுங்கை இல.56 இல் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0779592051
0774346417

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் தோச மற்ற கிரகபாவம் 73 உடைய M.B.B.S (Doctor) மகளுக்கு பெற்றோர் Doctor அல்லது Engineer மணமகனை எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்பு: 0775759409

### வீடு விற்பனைக்கு

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டில் 6¾ பரப்புக்காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779228814


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
புவனேஸ்வரி
பொன்னுத்துரை

அன்னை மடியில்
09.09.1947

ஆண்டவன் திருவடியில்
22.09.2010

திதி: பூரணை (11.10.2011)

எம் ஈரவிழிகள் காயுமுன்பே
ஓராண்டு ஆனதுவோ
உயிர்தான் பிரிந்தது ஆனால்
நினைவுகள் எம் கண்முன்னே
உங்கள் பிள்ளைகள் சிறப்போடும் வளமோடும்
வாழ எமக்கு ஒளியேற்றிய தெய்வமே
பார்க்கும் திசையெங்கும் உங்களின் உருவம் தான்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

35/8, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

Engineering Qualifications



Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



### City & Guilds Progression Path

Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
↑
Professional Engineer (Equivalent to BEng-UK)
↑
Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
↑
NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
↑
A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
↑
O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும்,
கணிதப் பிரிவு,
விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

0214 66 66 99 / 0771 067 394

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவோடு தாய்வானுக்கு நெருங்கிய உறவு அவசியம்



பீஜிங்,ஒக்.11

சீனாவிடம் இருந்து பிரிந்து, தற்போது தனிநாடாக இயங்கி வரும் தாய்வான், மீண்டும் தாய் நாட்டோடு சேர வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் சீன அதிபர் ஹூ ஜிண்டாவோ.

சீனாவில் 1911 இல் கின் என்ற அரச பரம்பரையை, கோமின்டாங் கட்சித் தலைவரான சன் யாட் சென் தலைமையிலான புரட்சிப் படையினர் தூக்கி எறிந்தனர்.

அதே ஆண்டு, ஒக்ரோபர் 10ஆம் திகதி முதன் முதலாக, சீனக் குடியரசு சன் யாட் சென் தலைமையில் அமைக்கப்பட்டது. சீனக் குடியரசு அமைந்ததன் 100ஆவது ஆண்டு விழா, தற்போது சீனாவில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி, நேற்று முன்தினம் உரையாற்றிய சீன அதிபர் ஹூ ஜிண்டாவோ கூறியதாவது:

தாய்வானும் சீனாவும் தங்கள் பகைமை உணர்வைக் கைவிட வேண்டும். சீனாவில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவர, இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண் டும். இந்த ஒன்றிணைவு அமைதியான முறையில் நடக்க வேண்டும். அதுதான் சீனா மற்றும் தாய்வான் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடியது.

இவ்வாறு ஜிண்டாவோ தெரிவித்தார்.

கடந்த 1911இல் அமைந்த சீனக் குடியரசுக்கும், மாவோ தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில், கோமின்டாங் கட்சி சீனாவை இழந்தது. தாய்வான் மற்றும் சில தீவுகளை மட்டும் தக்க வைத்துக் கொண்டது. கட்சித் தலைவர் சியாங் கை ஷேக், தாய்வானில் அதிபராக ஆட்சியைத் தொடர்ந்தார். அன்று முதல் சீனாவுக்கும், தாய்வானுக் குமான பகைமை தொடர்கிறது. அதை, அமெரிக்கா மேலும் வளர்த்து வருகிறது.

இந்த நிலையில் சீன அதிபர், மீண்டும் தாய்வான் தாய் நாடான சீனாவுடன் சேர வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் போலந்து பிரதமர் டொனால்ட்

வோர்ஸோ, ஒக்.11

போலந்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்த நாட்டுப் பிரதமர் டொனால்ட் டஸ்க் மீண்டும் வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு முடிவுகளின் பிரகாரம் டஸ்கின் மத்திய வலது சாரிக் கட்சி முன்னிலை பெற்றுள்ள நிலையில் அவரின் வெற்றி பெற்றதற்கான இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

டஸ்கின் கட்சியும், அவரின் தற்போதைய கூட்டணிக் கட்சியும், அடுத்த பதவிக் காலத்துக்கான போதியளவு ஆசனங்களைப் பெற்றுள்ளதாகத் தேர்தல் முடிவுகள் தெரிவித்துள்ளன. எதிர்க்கட்சியான சட்டம் மற்றும் நீதிக் கட்சித் தலைவர் ஜரோஸ்லோ கசன்ஸ்கி தனது தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



1989 ஆம் ஆண்டு கம்யூனிச ஆட்சி வீழ்ச்சி அடைந்த பின்னர் தொடர்ச்சியாக இரண்டு முறை ஆட்சியைக் கைப்பற்றிய முதலாவது போலந்துக் கட்சி என்ற பெருமையைப் பிரதமர் டொனால்ட் டஸ்கின் கட்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு ஆண்டுகளில் பிரதமர் டஸ்கின் தலைமைத்துவத்தில் போலந்து மிகப் பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# சவூதியில் 8 பேருக்கு கொடூர தண்டனை

ரியாத்,ஒக்.11

எகிப்த்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கொன்றதாக, 8 வங்கதேச நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு சவூதி அரேபியாவில் தலை துண்டிக்கப்பட்டு கொடூரதண்டனைவிதிக்கப்பட்டது.

ரியாத் நகரில் உள்ள அரசுக்குச் சொந்தமான தானிய சேமிப்புக் கிடங்கின் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றிய எகிப்து நாட்டைச்சேர்ந்தஹூஸைன் சையீத் முகமது அப்துல்காலித் என்பவர் கடந்த 2007ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக கைது செய்யப்பட்ட 8 பேருக்குமே மேற்படிதண்டணைவழங்கப்பட்டது.



*சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள கிரேட் மாளிகையில் நடந்த 100 ஆவது சின்ஹாய் புரட்சி ஆண்டு விழாவில் அந்தநாட்டு அதிபர் ஹீ ஜின்டோ (இடது) முன்னாள் அதிபர் ஜியாங் ஜிமின் கலந்து கொண்டனர்.*

# தலாய்லாமாவுக்கு விசா அளிக்காதது ஏன்? தென்னாபிரிக்காவின் வேடம் அம்பலம்

திபெத்திய புத்தமதத் தலைவர் தலாய்லாமாவுக்கு தென்னாபிரிக்க அரசு விசா அளிக்க மறுத்ததற்கு சீனாவுடனான உறவு பாதிக்கப்படும் என்பதுதான் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

தென்னாபிரிக்க ஆர்ச் பிஷப்பும், நோபல் பரிசு பெற்றவருமான டெஸ்மாண்ட்டுட்டுவின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக தலாய்லாமாவுக்கு டுட்டு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் தென்னாபிரிக்க அரசு இறுதிவரை லாமாவுக்கு விசா அளிக்கவில்லை.

இதனால் தலாய்லாமா தனது தென்னாபிரிக்கப் பயணத்தை ரத்து செய்தார்.

இதையடுத்து அவர் - சீன அதிகாரிகள் என்னை பேயாகக் கருதுகின்றனர். சிலர் பேசும் உண்மை சீனாவுக்கு அசௌகரியமாக இருக்கிறது. இது போன்ற ஏமாற்று வேலைகள் எல்லாம் சீன கம்யூனி சத்தின் ஒரு பகுதி என்று சீனா மீது கடுமையாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

# திடீரெனப் பாட்டியான இளம் பெண்!





வியட்நாம் நாட்டை சேர்ந்தவர் 26 வயதான இளம் பெண் ஒருவர் 70 வயதுக் கிழவியாக மாறிய சம்பவமொன்று வியட்நாம் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

அவர் கடந்த 2008 ஆம் ஆண்டு கடலுணவு வகைகளை அதிகம் சாப்பிட்டுள்ளார். இதனையடுத்து முகம் வீங்கி, ஒவ்வாமை நிலைக்கு ஆளாகியுள்ளார்.இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட இவர் வைத்தியரை நாடியுள்ளார்.

வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைய ஒவ்வாமை மருந்துகளைத் தொடர்ச்சியாக உட்கொண்டு வந்துள்ளார்.மருந்துகள் உட்கொண்டும் பலனளிக்காததால் 2009 ஆம் ஆண்டு தான் பயன்படுத்திய அனைத்து மருந்துகளையும் நிறுத்திக்கொண்டார். ஆனால் அதன் விளைவு தற்போது பெண்ணின் உருவம் 70 வயதுக் கிழவி போன்று மாறிவிட்டது.

# அமெ. படைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை

## ஆப்கன் அதிபர் கர்சாய் குற்றச்சாட்டு

காபூல்,ஒக்.11

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஆப்கனில் அமைதியை நிலைநாட்டுவதில் தோல்வி அடைந்துவிட்டன. பாகிஸ்தான் இல்லாமல் ஆப்கனில் தலிபான்கள் ஒரு சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது என ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாய் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆப்கனில் அமெரிக்கப் படைகள் நுழைந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. அதிபர் ஹமீத் கர்சாய் இது குறித்து பி.பி.சி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஆப்கன் அரசும், அமெ ரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் ஆப்கனில் அமைதி யைக் கொண்டுவருவதில் தோல்வி அடைந்துவிட்டன. ஆப்கன் மீதான பாகிஸ்தானின் கொள்கையும், தலிபான்கள் மீதான கொள்கையும் ஒன்று போலத்தான் இருக்கிறது. தலிபான்கள் பல்வேறு தாக்குதல்களை ஆப்கனில் நடத்தி வருகின்றனர்.

ஆனால் அவர்களுக் கான மேலிட உத்தரவுகள் எல்லாம் வெளியில் இருந்து வருகின்றன. பாகிஸ்தான் ஆதரவு இல்லாமல் தலிபான் களால் சுண்டு விரலைக் கூட அசைக்க முடியாது என்றார்.

# பாகிஸ்தானில் செய்தியாளர் கழுத்து அறுக்கப்பட்டு கொலை

பாகிஸ்தானின் லாகூரில் இருந்து வெளியாகும் 'தி லண்டன்போஸ்ட்' என்றபத்திரிகையின் தலைமைச் செய்தியாளராக இருந்த பைசல் குரேஷி(வயது-28) கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

முத்தாகிதாகுவாமி இயக்கத்தின் தலைவர் அல்டாப் உசேன் குறித்து தி லண்டன் ரைம்ஸ் பத்திரிகையில் போஸ்ட் குரேஷி கட்டுரை எழுதி இருந்தார். எனவே அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் பைசலை கொலை செய்திருக்க வேண்டும் என பொலிஸார் கருதுகின்றனர்.

# கெய்ரோவில் கலவரம்; 24 பேர் சாவு

எகிப்து தலைநகர் கெய்ரோவில் திடீரென ஏற்பட்ட கலவரத்தில் சுமார் 24 பேர் வரை கொல்லப்பட்டனர்; 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

கெய்ரோவில் குறிப்பிட்ட இனமக்கள் வழிபாடு நடத்தி கொண்டிருந்த வேளை வாகனம் ஒன்றில் வந்த நபர் கள் வழிபாடு நடத்தி கொண்டிருந்த அந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில்19 பேர் கொல்லப்பட்டனர்.இதனையடுத்து நகர் முழுவதும் கலவரம் பரவியது. இந்தச் சம்பவத்தில் சுமார் 150க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

# கிறீஸ், எண்ணெயை உணவாக உட்கொள்ளும் அதிசய மனிதர்

ரியாத், ஒக்.11

சவூதிஆரேபிய நாட்டைச் சேர்ந்த வாகனத் திருத்த வேலைகள் மேற்கொள்ளும் மெஹமட் ஓமர் என்பவர் தினமும் இரண்டு முதல் நான்கு கலன்கள் வாகன, மோட்டார் எண்ணெய் குடித்து உயிர் வாழ்கின்றார்.

சவூதிஆரேபியாவில் உள்ள பிரபல பத்திரிகை ஒன்று இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த நபர் தினமும் 2-4 கலன்கள் ஓயில் குடிப்பதோடு மட்டும் அல்லாமல் கார்களுக்குப் பயன் படுத்தப்படும் கிரீஸையும் தினமும் இவரின் இந்தச் செயற்பாடு மத்திய கிழக்கு நாடுகள் மட்டும் இன்றி உலகம் எங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இதையெல்லாம் சர்வசாதாரணமாக மேற்கொள்ளும் இவர் இது பற்றி அவரிடம் கேட்டதற்கு வாழ்க அல்லாஹ்; அவர் என்னை ஆரோக்கியமாக வைத்திருக்கிறார் என்று பதிலளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி வடக்கு அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.11

இலங்கை வங்கியின் மாகாணங்களுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வடமாகாண அணி சம்பியனானது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் இலங்கை வங்கி வட மாகாண உதைபந்தாட்ட அணியை எதிர்த்து இலங்கை வங்கி மத்தியதலைமை அலுவலக உதைபந்தாட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் இலங்கை வங்கி வட மாகாண உதைபந்தாட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.



இலங்கை வங்கி வட மாகாண உதைபந்தாட்ட அணி கடந்த வருடம் இடம் பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியிலும் சம்பியன் ஆனமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# தீவக மாணவன் தமிழ்நாட்டு உதைபந்தாட்ட அணியில்

யாழ்ப்பாணம்,ஒக்.11

வேலணை துறையூரை பிறப்பிடமாகக் கொண்ட செல்வநாயகம் அகீபன் (வயது 23) என்பவரே தமிழ் நாட்டு உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்துள்ளார்.

இவர் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், ஐயனார் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணியின் சகலதுறை வீரருமாவார்.

இவர் சென்னையிலுள்ள தேனாம் பேட்டையிலுள்ள வை.எம்.சி.ஏ பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி பிரிவில் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர் ஆவார்.



தமிழ் நாட்டில் அனைத்து பல்கலைக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட விளையாட்டில் தனது வை.எம்.சி.ஏ பல்கலைக் கழக அணியில் பங்கு கொண்டு தனது முழுமையான ஆட்டத்தை வெளிக்காட்டியதால் இவர் தமிழ்நாட்டு அணியில் இடம் பிடித்துள்ளார்.

தற்போது கேரள அணியுடன் காலிறுதி ஆட்டத்தில் தனது ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி உதைபந்தாட்டம் அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து முன்ன்ணி கழகங்கள் பங்குகொள்ளவுள்ளன எனவும் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-23)



இலங்கை வங்கியின் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் சிறந்த இளம்வீரர்கள், மூத்த வீரர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்டவர்களை படத்தில் காணலாம். (த-23)

# இரு நாள் கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ். ஸ்ரான்லிக் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான இருநாள் கிரிக்கெட் ஆட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஒ-23)

# தாச்சிப் போட்டி

கைதடி, ஒக்.11

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்குக் கைதடி உதயசூரிய விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதுகின்றது. (த-288)

# 3 மாணவிகள் மூன்றாமிடம்



மேரிபெளரினா டிலக்ஷனா குவைசிகா

யாழ்ப்பாணம், ஒக்.11

தியகமவில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான தேசிய மட்ட தடகளப்போட்டியில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதய க்கல்லூரி மாணவிகளான மேரிபெளரினா, டிலக்ஷனா, குவைசிகா ஆகிய மூவரும் 2.15 மீற்றர் உயரத்தை கடந்து மூன்றாமிடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளனர். (த-23)

# கராத்தே சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.11

வடமாகாண கராத்தே சங்கம் நடத்தும் கராத்தே சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் வீராங்கனைகள் இதில் பங்குகொள்ளவுள்ளனர். மேற்படி போட்டிக்கான அனைத்து ஆயத்தங்களையும் வட மாகாணக் கராத்தே சங்கம் மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் சென் சேய் கபிரியேல் றேமன் தெரிவித்தார். (த-23

# வட்டக்கச்சி ம.வியில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.11

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

சர்வதேச ஆசிரியர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த 3 ஆம் திகதி காலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இரு அணிகளுக்கிடையேயான ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இந்த நிலையில் முதலாம் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரண்டு அணியினரும் உற்சாகத்தோடு களம் இறங்கினர்.

இரண்டு அணியினரும் தமக்குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். இரு அணியினரும் கோல்களைப் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-426)

# யாழ். பல்கலை அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

நேற்று மாலை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி விளையாடியது இதில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து விளையாடிய கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஒ.23)

# பனங்கட்டிக்கொட்டு அணியை தோற்கடித்து சம்பியனானது பள்ளிமுனை சென்.லூசியா

யாழ்ப்பாணம், ஒக்.11

மன்னார் உதைபந்தாட்ட லீக் அமரர் சின்னச்சாமி கணேசன் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணியை பனங்கட்டிக்கொட்டுசென். ஜோசப் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

முதலாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் கோல்களைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் மோதிக் கொண்டனர்.

ஆட்டம் ஆரம்பமாகி 10ஆவது நிமிடத்தில் பள்ளி முனை சென்.லூசியா அணி வீரன் டிங்கோ தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

பனங்கட்டிக்கொட்டு சென்.ஜோசப் அணியின்கோல்கள் பெறக்கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டனர்.

இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணியை 1:0 என்றகோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் ஆட்டம் ஆரம்பமான போது பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழகம் தனது அணிக்காக மேலும் கோல்களைப்பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் விளையாடியது.

அதேபோன்று பனங்கட்டிக் கொட்டு அணியும் ஆவேசத்துடன் விளையாடியது.

இரண்டு அணியினரும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் கைகூடவில்லை இதனால் ஆட்ட முடிவில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி 1:0 என்றகோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் ஆனது.

முதலாம் இடத்தைப்பெற்ற பள்ளிமுனை சென்லூசியா அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 20 ஆயிரம் ரூபா பணப் பரிசும் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தைப் பெற்ற பனங்கட்டிக் கொட்டு சென். ஜோசெப் விளையாட்டுக் கழக அணிக்குவெற்றிக் கிண்ணம் 10ஆயிரம் ரூபா பணம் வெள்ளிப் பதக்கம் என்பன வழங்கப்பட்டன. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்திலிருந்து தேசிய மட்டத்துக்கு அழைத்துச் செல்வோம் - மஹேல



வட மாகாணத்தில் பாடசாலை ரீதியில் கிரிக்கெட் விளையாட்டினை விருத்தி செய்து அதிலிருந்து தெரிவு செய்யப்படும் வீரர்களை தேசிய மட்டத்தில் அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளுக்கான 300 இலட்சம் ரூபா பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு மேலும் கருத்து தெரிவித்த அவர், கடந்த 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதானம் மலர்ந்துள்ளது. இந்த தருணத்தில் வட மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொள்ள வாய்ப்பு கிடைத்தமையை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேவேளை, வட மாகாணத்திலுள்ள இளைஞர்கள் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டினை

ஊக்கப்படுத்தி அவர்களிடையேயான திறமையினை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

வருகின்றன. அந்தவகையில், பாடசாலைக் காலங்களிலிருந்து இந்த நடவடிக்கை

முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார்.

(15)

# சென்னையின் வீழ்ச்சியே எங்களின் வெற்றி- ஹர்பஜன்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி, சம்பியன்ஸ் லீக் தொடரை வெற்றியுடன் தொடக்கியது, அடுத்து நடந்த ஆட்டங்களில் சாதிக்க ஊக்கமாக இருந்தது, என்று மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடந்தது. இதில் இடம் பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணியில், 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின், முனாப் பட்டேல் உள்ளிட்ட எட்டு முன்னணி வீரர்கள் காயம் காரணமாக விளையாடவில்லை. இருப்பினும் மும்பை அணி, தனது முதல் ஆட்டத்தில் 'நடப்புச் சம்பியன்' அந்தஸ்துடன் களமிறங்கிய சென்னை சுப்ப கிங்ஸ் அணியை வீழ்த்தியது. அதன்பின் ரினிடாட் ரொபாகோ அணியை தோற்கடித்தது. ஹேப் கோப்ராஸ் அணிக்கு எதிராக நல்ல ஓட்ட எண்ணிக்கையை பெற்றிருந்த போதிலும், மழை காரணமாக ஆட்டம் ரத்து செய்யப்பட்டது. கடைசி லீக் ஆட்டத்தில் நியு சவுத் வேல்ஸ் அணியிடம் வீழ்ந்த மும்பை அணி, அரையிறுதியில் ஷொமசெட் அணியை வெளியேற்றி, முதன் முறையாக இறு திக்கு முன்னேறி அதிரடி அணியான பெங்களூரை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.

இது குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்பஜன் சிங் கூறியதாவது:

சம்பியன்ஸ் லீக் தொடர் தொடங்குவதற்கு முன், சச்சின் உள்ளிட்ட எட்டு முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில் மும்பை அணி எப்படி விளையாடப் போகிறது என்று பல்வேறு தரப்பில் கேள்விகள் எழுந்தன. முதல் ஆட்டத்தில் சென்னை சுப்ப கிங்ஸ் அணியை வீழ்த்தியது, அடுத்த நடந்த ஆட்டங்களில் சாதிக்க நம்பிக்கை அளித்தது. சென்னை அணியை, அதன் சொந்த ஊரில் வீழ்த்துவது கடினம். இருப்பினும் எங்கள் அணி வீரர்கள் ஒருங்கிணைந்து முழுத்திறமையை வெளிப்படுத்தியதால், தொடரை வெற்றியுடன் தொடக்க முடிந்தது.

மும்பை அணி கிண்ணத்தை வென்றதற்கு அதிர்ஷ்டம் மட்டும் காரணமல்ல. வீரர்களின் விடாமுயற்சி மற்றும் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் தந்த ஊக்கம் முக்கிய காரணம். இந்தத் தொடரில் இவர், மும்பை அணியினரோடு இணைந்து தேவைப்படும் நேரத்தில் சரியான ஆலோசனைகள் வழங்கியது வெற்றிக்கு பலமாக இருந்தது - என்றார்.

(15)

## அதிர்ஷ்டக் காற்று இங்கிலாந்துக்கு

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 5 ஆவது ஐ.பி.எல் போட்டிக்கு இங்கிலாந்தின் முன்னணி வீரர்கள் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்படலாம் என்று தெரிகிறது.

அண்மையில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட், ஒரு நாள் தொடர், இருபது ஓவர் ஆட்டம் என்று அனைத்து ஆட்டங்களிலும் இங்கிலாந்து வெற்றி கண்டது. டெஸ்ட் தரவரிசையிலும் முதலிடத்தைப் பிடித்தது. இதனால் இந்த ஆண்டு டிசம்பரில் நடைபெறும் ஐ.பி.எல் ஏலத்தில் இங்கிலாந்தின் முன்னணி வீரர்கள் மிகப்பெரிய தொகைக்கு ஏலம் எடுக்கப்படுவார்கள்.

கெவின் பீற்றர்சன், சுவான், மோர்கன், அண்டர்சன், ஸ்டூவர்ட் புரோட் ஆகியோர் முக்கிய வீரர்களாக இருப்பர். இவர்களில் சுவான் ஐ.சி.சி ஒரு நாள் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். கடந்த 18 மாதங்களில் டெஸ்ட் ஆட்டத்தில் அதிக இலக்குகள் வீழ்த்தியவர்கள் வரிசையில் அண்டர்சன் முதலிடத்தில் உள்ளார். இவர்கள் இருவருக்கும் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் ஏலத்தின்போது தொடக்க விலை இந்திய மதிப்பில் ரூபா 4 லட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் எந்த அணியும் இவர்களை ஏலத்தில் எடுக்கவில்லை.

இந்தப் போட்டி தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள ஐ.பி.எல் தலைவர் ராஜீவ் சுக்லா, 5 ஆவது ஐ.பி.எல் தொடரில் இங்கிலாந்து வீரர்களை விளையாட வைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஐ.பி.எல் போட்டிகள் ஏப்ரல் 4 முதல் மே 27 வரை நடைபெறவுள்ளது. (15)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையில் ஜோன் ராமுக்கே பிரதிமேயர் பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அது நடக்கவில்லை. கட்சியின் இந்தத் தீர்மானம் தவறானது. இந்த நியமனத்தை நான் முற்று முழுதாக நிராகரிக்கிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நாளை (இன்று) நான் சந்திக்கிறேன். அப்போது எனது எதிர்ப்பைத் தெரிவிப்பேன். பிரதி மேயர் பதவி கிடைக்காத பட்சத்தில் அதற்கு நிகரான வகையில் மாநகரசபை நிர்வாக அதிகாரங்களுடன் கூடிய ஒரு முக்கிய பதவியாவது வழங்கப்பட வேண்டும்-என்றார் ராம்.

இதேவேளை, இது தொடர்பாக எம்மிடம் நேற்று கருத்துத் தெரிவித்த ஐ.தே.கவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, பிரதி மேயர் பதவி சிங்களவர் ஒருவருக்கு வழங்கப்படாவிட்டால் கட்சி இனச் சமநிலையை இழந்துவிடும் என்று கூறினார்.

தமிழ், முஸ்லிம் மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் முஸம்மில் மேயராக நியமிக்கப்படுகின்றபோது சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த சிங்களவர் ஒருவர் பிரதி மேயராக நியமிக்கப்படுவதே நியாயம் என்று கட்சிக்குள் சிலர் கருத்துத் தெரிவித்தனர் என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (ஒ-சி)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னெடுத்துச் செல்வதற்கான ஆணையை இந்நாட்டு மக்கள் நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வழங்கியுள்ளனர். மாநகரசபைகளின் அதிகாரங்களை மீண்டும் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இருந்தபோதிலும், கொழும்பு மாநகர சபை அதிகாரத்தை மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியால் கைப்பற்ற முடிந்தது.

எனினும், கொழும்பு மாநகரசபையை இழந்துவிட்டது அரசு. அந்த மாநகரசபை காலம்காலமாக ஐக்கிய தேசியக் கட்சி வசமே இருந்துவந்தது. குறிப்பாக 56 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சி வசமிருந்துவந்த கண்டி மாநகரசபை மற்றும் 40 வருடமாக ஐக்கிய தேசியக் கட்சி வசமிருந்த நுவரெலியா மாநகரசபை என்பவற்றின் அதிகாரம் இன்று அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சி வசமிருந்த தெஹிவளை - கல்கிஸை மாநகரசபையின் அதிகாரமும் அரசு வசமாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கோபுரங்கள் இன்று உடைந்து சின்னாபின்னமாகியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களான டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தன, பிரேமதாஸ ஆகியோர் கட்டிக்காத்த ஐ.தே.கவின் சொத்துகள் அனைத்தும் இன்று கரைந்து போயுள்ளன.

கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றிவிட்ட ஐக்கிய தேசியக் கட்சி அடுத்தகட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது எனக் கூறியுள்ளது. இது கேலிக்குரிய விடயமாகும் - என்றார். (ஒ-சி)

## தீர்வுப் பேச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது. கனடாவுக்கும் செல்வர்

அமெரிக்காவுக்குச் செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கிருந்து கனடா சென்று கனேடிய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களையும் சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்தியாவுக்கும் விளக்கம்

இதற்கிடையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ரஞ்சன் மாத்தாயை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுப் பேச்சுகள் குறித்து நீண்ட விளக்கம் ஒன்றை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டிய முக்கியமான விடயங்கள் குறித்து இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் இதன் போது கவனமாகக் கேட்டு அறிந்து கொண்டதாகத் தெரிகின்றது. (ஒ-சி)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களில் போரினால் அழிந்துபோன 79 பாடசாலைகளை இந்தியா மீளமைத்துக் கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்காக 160 மில்லியன் ரூபாய் செலவிடப்பட உள்ளது. அது தவிர திருக்கேதீஸ்வரம் மற்றும் சம்பூர் அருகே உள்ள புராதன கோயில் என்பவற்றைப் புனரமைப்பதற்கும் இந்தியா உதவ உள்ளதாக மாத்தாய் கூறினார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான எண்ணத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டுள்ளார் என்றும் மாத்தாய் இந்திய ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு முன்னதாக மாத்தாய் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களான வீ.ஆனந்தசங்கரி, டி.சித்தார்த்தன், ரி.சிறிதரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் மூன்று முக்கிய விடயங்கள் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் முன்வைக்கப்பட்டன என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

இனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அரசு திட்டமிட்டுக் கடைப்பிடித்துவரும் சொந்த - தனிப்பட்ட - நிகழ்ச்சி நிரல் காரணமாக போரின் பின்னரும் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் என்று தாம் சுட்டிக்காட்டினர் என்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அரசு தனது நோக்கத்தை அடைய பல்வேறு வழிவகைகளைக் கையாண்டு வருகின்றது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

சம்பூரில் 1,400 தமிழ்க் குடும்பங்களின் காணிகளை அரசு அபகரித்திருப்பது குறித்தும் அதனை விடுவித்து அந்த மக்களைச் சொந்த இடங்களில்குடியமர அனுமதிக்குமாறு அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் தமிழ கட்சிகளின் தலைவர்கள் மாத்தாயிடம் வலியுறுத்தி உள்ளார்.

முல்லைத்தீவில் சிங்கள மக்களுக்கென புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டமை, வடக்கில் காணிகளை மீளப்பதியும் நடவடிக்கையில் அரசு தீவிரமாக இறங்கி இருக்கின்றமை ஆகிய விடயங்கள் குறித்தும் இந்தியச் செயலருக்குத் தாம் எடுத்துக் கூறினர் என்று அறிக்கையில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர். எனினும் தமிழ்க் கட்சிகளின் இத்தகைய குற்றச்சாட்டுக்களை அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. அண்மையில் தான் வழங்கிய செவ்வி ஒன்றில் வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் கூறுகிறது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சின்னராசா பராசக்தி

பளை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, மருதனார்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா பராசக்தி 09.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் மகளும் , பண்டாரம்- நாகமுத்து தம்பதியரின் மருமகளும், கலாபூஷணம் சின்னராசாவின்(மிருதங்க வித்துவான்) அன்பு மனைவியும், ஜெயலக்சுமியின்(பொதுநூலகம், யாழ்ப்பாணம்) அன்புத் தாயும், சுதர்சனின்(மாசிலாமணி ஆபரண மாளிகை) அன்பு மாமியும் பரமேஸ்வரி, கனகராசா, பாலசிங்கம், பரஞ்சோதி, செல்லத்துரை, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.10.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்: சின்னராசா- கணவர்,*
*ஜெயலக்சுமி- மகள்,*
*சுதர்சன்- மருமகன்*

3ஆம்ஒழுங்கை,
மானிப்பாய்வீதி, மருதனார்மடம்.

## சுப்பிரமணியம் தேவராசா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், அச்சுக் கூட ஒழுங்கை, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தேவராசா நேற்று (10.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கே.கே.எஸ் வீதி, சிவன் கோயிலடி பவுண் மெசின் பட்டறை உரிமையாளரும் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், றஞ்சினிதேவியின் அன்புக் கணவரும், வெண்ணிலவனின் அன்புத் தந்தையும், சிவராசா, ஆனந்தநடராசா(லண்டன்), சண்முகராசா, செல்வராசா, புஸ்பவதி, லீலாவதி, குணவதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் விமலாதேவியின் அன்பு மருமகனும், மாலா தேவி, உதயகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

# இலவச பாடப் புத்தகம்

வடமராட்சி, ஒக்.11

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இந்தக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் நேரில் வந்து கரவெட்டி கோட்ட அலுவலகத்தில் தத்தமது பாடசாலைகளுக்குரிய இலவசப் பாடப் புத்தகங்களை நாளை புதன் கிழமைக்கு முன்னதாகப் பெற்றுக் கெள்ளுமாறு கோட்டக்கல்வி அதிகாரி சி.நற்குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஒ-236)

## தவறிவிட்டது

சேர் பொன் இராமநாதன் வீதி கிருஷாந்தி பாலசிங்கம் என்னும் பெயர் முகவரியுடைய 826924080 V இல.தே.அ.அட்டை மற்றும் சில முக்கிய ஆவணங்களும் கடந்த 03.10.2011 அன்று யாழ் K.K.S வீதியில் தவறிவிட்டது இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்புகளுக்கு:0212220889

Internet & E-mail classes with Practical

முற்றிலும் இலவசமான
Internet & Email
வகுப்புக்கள்...
வார இறுதி நாட்களில்
October 15th முதல் ...

முற்றிலும் இலவசம்!

Cambridge Management College
23, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2221818/077 7740999

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதி 10 ஆவது கி.மீ குடத்தனையில் 100 பரப்பு காணியும், பருத்தித்துறை-கொடிகாமம் வீதியில் புலோலி மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் 8 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

K.சிவா
தொடர்பு:-0771298201

## வேலையாள்கள் தேவை

கணினி அறிவு, போட்டோ கொப்பி எடுக்கும் அனுபவமுள்ள / அனுபவமற்ற பெண் பணியாளர்கள் தேவை.

தொடர்பு:-0774940391

# கேள்வி கோரல்

மாவட்டச் செயலக புள்ளிவிவரக் கிளையின் பயன்பாட்டுக்குத் தேவையான வாகனங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைவாக கேள்வி விலை கோரப்படுகின்றது.

**நிபந்தனைகள்:**

★ வாகனங்களில் பயணிக்கக் கூடிய ஆசனங்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 06 ஆகவும், ஆங்கில வாகன இலக்கத் தகட்டுடன் குளிரூட்டி வசதியுடையதாக இருத்தல் வேண்டும்.

★ கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பதாரரது விண்ணப்பங்களே முன்னுரிமைப் படுத்தப்படும்.

★ வாகனம் நல்ல நிலையில் இருப்பதோடு மாவட்டச் செயலக பாவனைக்காக எந்த நேரத்திலும் இயக்கக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.

★ இந்த வாகனங்களுக்கான எரி பொருள், சாரதி போன்றன வாகன உரிமையாளர்களாலேயே ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

★ மாதமொன்றுக்கு 3000 கி.மீ என்ற உச்ச எல்லைக்கு அமைவாக சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

★ அத்துடன் குறித்த மாதத்தில் 3000 கி.மீ மேற்பட்ட தூரத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தால் அதற்கு முன்னைய மாதத்தில் சேவையில் ஈடுபட்ட தூரம் உச்ச எல்லைக்கு குறைவாக அமையும் இடத்து அதிலிருந்து மேலதிக கி.மீ சீர்செய்யப்படும். இவ்வாறு சீர்செய்யப்படும் மேலதிகமாக சேவையில் ஈடுபடும் ஒவ்வொரு கி.மீ க்கும் தனியான கி.மீ கட்டணம் செலுத்தப்படும். இதற்கான தனியான கி.மீ கட்டணத்தைக் குறிப்பிடுக.

★ வாகனம் முழுக்காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். வாகனம் விபத்துக்குள்ளாகி சேதம் ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பும் தங்களையே சாரும்.

★ வாகனம் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் மாவட்டச் செயலக வளாகத்தினுள்ளே நிறுத்தப்படல் வேண்டும்.

★ தெரிவு செய்யப்படும் வாகனம் ஒப்பந்த காலத்தில் மாவட்ட செயலக பூரண கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.

★ விண்ணப்பப் பத்திரத்தை 12.10.2011 அன்று மாவட்ட செயலக தாபனக் கிளையில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட படிவத்தை 17.10.2011 மு.ப 10 மணிக்கு முன்னதாக செயலக கேள்விப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.

★ கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் யாவும் 17.10.2011 பி.ப 2.30 மணியளவில் செயலக கேள்வி சபையால் விண்ணப்பதாரரது பிரசன்னத்துடன் உடைக்கப்படும்.

★ ஒக்ரோபர் 16முதல் வருட இறுதி வரை சேவையில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தம் செய்யப்படும்.

★ இறுதித் தீர்மானம் மாவட்டச் செயலக பெறுகைக் குழுவினராலேயே மேற்கொள்ளப்படும்.

திருமதி றூ.கேதீஸ்வரன்,
*மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.*

# மரண அறிவித்தல்

## செல்வி பொன்னம்பலம் சிவபாக்கியம் (B.Sc.)

*(இளைப்பாறிய உப அதிபர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, ஸ்தாபகர், உடுவில் கடவுள் சந்நிதி, ஸ்தாபகர், தலைவர்- சமாதி குருபீடம், மறுவன்புலம்)*



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவபாக்கியம் (மலர் அக்கா, மலர் ரீச்சர்) நேற்று (10.10.2011) திங்கட்கிழமை மகாசமாதி அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திருமதி சிவமூர்த்தி மகிழ்மணியின் (ஆஸ்திரேலியா) அன்புச் சகோதரியும், சொரூபாவின் (ஆஸ்திரேலியா) பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் சமாதிநிலை திருவுடல் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு காரைக்கால் சமாதி பூமியில் பூகற்பம் செய்யப்படும்.

தகவல்:
பொ. [illegible]

கடவுள் சந்நிதி,
அம்பலவாணர் வீதி, உடுவில்.

# மரண அறிவித்தல்

## கந்தப்பு குமாரசாமி

(ஓய்வுபெற்ற இரத்த பரிசோதகர்)



கந்தப்பு- இலட்சுமி தம்பதியரின் இளைய புத்திரன் கந்தப்பு குமாரசாமி நேற்று (10.10.2011) திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயதரன்(சிங்கப்பூர்), நந்தினி(யா/ விக்னேஸ்வராக் கல்லூரி- கரவெட்டி), சிறீதரன் (லண்டன்), ஜெயந்தி(கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனா, மோகனாதமயந்தி(சிங்கப்பூர்), சண்முகநாதன் (யா/ சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை), சுபோதினி(லண்டன்), இளம்பூரணன்(வைற் அன் கொம்பனி- கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், லக்ஷன், மானுஷன், கைலாஷ், தேவேஷ், மதுஷன், சஞ்ஜித், அபிலாஷ், தாமிரன்,நிலாள் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பொன்னையாவின் தம்பியும், வள்ளியம்மை, சிவக்கொழுந்து, ஞானாம்பிகை ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், கந்தசாமி, கிருஷ்ணப்பிள்ளை, சிவசுப்பிரமணியம், பாக்கியம், சிவபாதம், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், இலட்சுமி, நல்லதம்பி ஆகியோரின் மைத்துனரும், சரஸ்வதி, இராமநாதன், குணரத்தினம், கனகரத்தினம், றயனி, தர்மரத்தினம், வீரபாகு, சாரதாதேவி, வசந்தகுமார், உதயகுமார், விமலாதேவி, நிர்மலதேவி, கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட மனோகரன் சிறீபதி, ரவீந்திரன், ராகவன், ராதை, மிருணா, வீரமதி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

[illegible]
[illegible]டக்கு, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யற்ற ஆதரவை இனிமேலும் தொடர முடியாது. தலைநகரத் தமிழ் மக்கள் தங்களது நலனை முன்னிறுத்தும் - பேரம் பேசும் சக்தியை எங்களுக்குத் தந்துள்ளார்கள் என்றும், இதுவே கொழும்பு மாநகரத்திலும், தெஹிவளை-கல்கிஸையிலும், கொலன்னாவையிலும் தமிழ் மக்கள் எங்களுக்குத் தந்துள்ள ஆணையாகும். என்பதை புரிந்துகொள்ளவேண்டும் என்றும் மனோகணேசன், ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியுள்ளார்.

கொழும்பு மாநகரசபையில் ஐக்கிய தேசியக் கட்சி 24 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆளுங்கட்சி 16 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஜே.வி.பியின் 1 ஆசனத்தைத் தவிர்த்து, முஸ்லிம் காங்கிரஸின் 2 ஆசனங்கள் உட்பட அரசு ஆதரவு குழுக்கள் 6 ஆசனங்களைப் பெற்றுள்ளன. அதனால் அரசு 22 ஆசனங்களை தன்வசம் கொண்டுள்ளது.

மாநகரசபையில் 53 உறுப்பினர்களில் அறுதிப் பெரும்பான்மைப்பலமான 27 ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் 6 ஆசனங்கள் எந்தக் கட்சிக்கும் தேவைப்படுகின்றன. அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற முறையில் ஐ.தே.க நிர்வாகத்தை ஏற்படுத்தினாலும், மாநகரசபையை சீராகக் கொண்டு செல்வதற்கு பெரும்பான்மைப் பலம் தேவை.

இவ்வாறனதொரு நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களுக்கும், மனோகணேசனுக்கும் இடையில் நேற்று மாலை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, ஜயலத் ஜெயவர்தன ஆகியோருடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் பின்னர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:

நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எம்மிடம் தெரிவித்த கருத்துகளை கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்தில் நாம் விரிவாக ஆராய்வோம்.

அவசியமேற்படின் எமது கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர்கள், மேலதிக பேச்சுக்களை சம்பந்தப்பட்டவர்களுடன் நடத்துவார்கள்.

மக்கள் எமக்குத் தந்துள்ள ஆணைக்கு இசைவாக உரிய முடிவுகளை எமது கட்சி எடுக்கும். ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களித்து எங்கள் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்திய மக்களுக்கு எங்களது நடவடிக்கைகள் மூலமாகவே நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றார் மனோ கணேசன்.

(சி)


## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்
### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருள்களின் ஏலவிற்பனை

*பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருள்கள் 2011.10.21ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம், உமையாள்புரம் [பரந்தன்] என்ற முகவரியில் அமைந்துள்ள வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**நிபந்தனைகளும் விதிகளும்**

*1. ஏலம் ஆரம்பிப்பதற்கு 1/2 மணித்தியாலத்துக்கு முன்னர் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருள்களை பொதுமக்கள் பரீட்சித்துப் பார்க்க முடியும்.*

*2. ஏலத்தில் கொள்வனவு செய்யும் பொருள்களுக்காக அந்நேரத்திலேயே பணம் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், அதற்கான பற்றுச் சீட்டை பாதுகாப்பு பிரிவிடம் சமர்ப்பித்து அத்தினத்திலேயே பி.ப. 4.00 மணிக்கு முன்னர் அப்பொருள்கள் அலுவலக வளவிலிருந்து அகற்றிக்கொள்ளப்பட வேண்டும்.*

*3. அமைச்சினால் விதிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த விலைகூறல் எற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பமொன்றில் அமைச்சின் தற்றுணிபின் படி அப்பொருள்களை ஏலத்திலிருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை அமைச்சுக்குரியதாகும்.*

*4. ஏலத்தில் பொருள்களை கோருவதற்கு வருகை தருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.*

*5. ஏலம் தொடர்பில் முறைப்பாடுகள் எவையேனும் இருப்பின், ஏலம் நடைபெறும் போதே சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் பின்னர் கிடைக்கும் முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*6. ஏலத்தில் தீர்ப்புச் செய்யப்பட்ட பொருள்கள் எக்காரணத்தைக் கொண்டும் மீள ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*7. இந்த ஏலத்தின் எல்லா உரிமைகளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குரியதாகும்.*

*8. இதுதொடர்பாக மேலும் விவரங்கள் அவசியமாயின் தொலைபேசி இல -0263200256. கணக்காளர்-இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

ஏலத்திற்குரிய பொருள்களின் விபரம் அடங்கி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| S.No | Description of Item | Quantity |
|---|---|---|
| 01. | Lumala Cycle | 01 No |
| 02. | LG Air Conditioner 24000 BTU | 01 No |
| 03. | LG Air Conditioner 18000 BTU | 01 No |
| 04. | Tool Kit Set | 01 No |
| 05. | UPS | 07 Nos |
| 06. | Digital camera VRC | 01 No |
| 07. | External CD Writer | 01 No |
| 08. | Arm Chair Wooden | 02 Nos |
| 09. | Fax Machnine Cannon | 03 Nos |
| 10. | Multi Media Projector | 01 No |
| 11. | Basin | 01 No |
| 12. | Wall Clock | 02 Nos |
| 13. | T.D.K Audio Cassete | 01 No |
| 14. | DVD Dong | 01 No |
| 15. | Computer Table | 02 No |
| 16. | Plastic Cushion Chair | 03 Nos |
| 17. | Office Chair (Visitors) | 01 No |
| 18. | Scanner Machine | 03 No |
| 19. | Choke for Tube Light | 02 Nos |
| 20. | Tray | 04 Nos |
| 21. | Clerical Table 30x50 | 01No |
| 22. | Hp Computer Unit | 02 Nos |
| 23. | Printer HP-1020 | 02 Nos |
| 24. | Motor Cycle- LML Freedom | 02 Nos |
| 25. | Inkjet Printer Cannon | 06 Nos |
| 26. | Laptop IBM | 02 Nos |
| 27. | Photo Copier Machine | 04 Nos |
| 28. | HP Camera | 04 Nos |
| 29. | Printer HP-3744 | 02 Nos |
| 30. | Motor Cycle Kinetic Boss V2 | 33 Nos |
| 31. | Nokia Phone 3200 | 01 No |
| 32. | Nokia phone 6610 | 02 Nos |
| 33. | Computer IBM Unit | 04 Nos |
| 34. | Laser Printer HP1022 | 06 Nos |
| 35. | Inkjet Printer- HP | 26 Nos |
| 36. | Nokia Phone 3120 | 01 No |

**க. தெய்வேந்திரம்**
*பதில் திட்டப் பணிப்பாளர்.*
*வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்* 2011.10.07.



## வேக் போமிற்

மலேசியா வேக் போமிற் மிக விரைவாக நம்பகரமாக செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:-0775413754


# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை மரியதிரேஸ்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியதிரேஸ் (09.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை செல்லையா-ஞானப்பு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சவிரிமுத்து-அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், லூர்துமேரி (பூமணி), காலஞ்சென்ற S.C.M.யோசவ் ஆகியோரின் சகோதரியும், இம்மனுவேல், ஆரோக்கியநாதர் ஆகியோரின் மைத்துனியும், வின்சென்ற், றாஜி (U.K.), அமிர்தா (France), மதுரநாயகம் (Canada), றாஜலிங்கம் (France), பூராசா ஆகியோரின் அன்புத் தாயும், பற்றிமா (பேபி), பிரான்சிஸ் (அத்தார்-U.K), மதுரன் (France), மலர் (Canada), குயினி (France), சுதாமதி ஆகியோரின் பாசமிகு மாமியும், றோஸன், டெமெற்றியஸ், தர்ஷன், போஜியா, போஜியன், போஜினி, ஜோயல், அந்துவான், அலன், ஜொனத்தன், ஜெனிபர், ஜோதினி, சுபாஜினி, விஜய், டெனிஷியன், எழில், டினேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*40/1, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
A.E.வின்சென்ற் - மகன்.

## இராமு யோகரட்ணம்



தெல்லிப்பழை, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராமு யோகரட்ணம் நேற்று (10.10.2011) திங்கட்கிழமை இறைபதம் சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லலிதா, நந்தினி, மகிந்தா மற்றும் கருணாநிதி (கண்ணன், ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபாயினியின் (ஜேர்மனி) மாமனும், அபிஷனின் (ஜேர்மனி) பேரனும், கனகமணியின் மைத்துனரும், மங்களகௌரி, கபில்ராஜ்(லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

*தகவல்:*
*கருணாநிதி(கண்ணன்- மகன்).*

## திருமதி சுப்பிரமணியம் பூரணம்



இருபாலை, டச்சு றோட்டை பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, 135, G.P.S. வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பூரணம் நேற்று 10.10.2011 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுவீப் மணியம் என அழைக்க ப்படும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சித்திராதேவி(தேவி), புஸ்பராசா(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தவராசா (வட்டக்கச்சி), லோகேந்திர ராஜா மற்றும் பாக்கியராசா (ஜேர்மனி), பாலசரஸ்வதி(இந்து), சிவ குமார்(ஜேர்மனி), யசோக் குமார்(யசோ), ஜெயக்குமார் (ஜெயா) வதனி(கீதா) ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராசா, செல்வநாயகி(ஜேர்மனி), ராணி, சிறிகாந்தன், மதிவதனி (ஜேர்மனி), கேதீஸ்வரி, ரதீஷா, இளங்கோ(பிரான்ஸ்) ஆகி யோரின் பாசமிகு மாமியும், காலஞ் சென்ற செல்வக்குமார் மற்றும் செல்வரூபன்(பிரான்ஸ்) மாருதி (பிரான்ஸ்), வனிதா (லண்டன்) செல்வக்கண்ணன், டினேஸ் (ஜேர்மனி), தனுசன் (ஜேர்மனி), ஜெயந்தி, கோகுலன், காலஞ் சென்ற குகன் மற்றும் சுகி, நித்தியா, சிறிகாந்தரூபன், பிரதீபா, தனேஸ், சயிதா, டினுஜா (ஜேர்மனி), அனுஜன் (ஜேர்மனி),சுஜிந்(ஜேர்மனி), தனுஷியா, பாகீசன், கிசானா, கிந்துஜன், அனுஜன், யோகவிதுர்ஷா ஆகியோரின் பேர்த்தியும் மீனுஷா (பிரான்ஸ்), காயத்திரி(பிரான்ஸ்), அக்ஷயா(பிரான்ஸ.) நிரோசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் தம்பிராசா, விசுவரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*135.G.P.S. வீதி,*
*கல்வியங்காடு.*

தகவல்:
ஜெயக்குமார்(ஜெயா-மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத லக்ஸ்மன் கொலை; நான்காவது நபரும் சாவு

கொழும்பு, ஒக்.11

கடந்த சனிக்கிழமை முல்லேரியாப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த மற்றொரு நபரும் நேற்றுக் காலை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார். இத்துடன் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

இராகம, மத்துமகல பகுதியைச் சேர்ந்த மணிமேல் குமாரசுவாமி என்பவரே நேற்று உயிர்ழந்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட கொலன்னாவையைச் சேர்ந்தவர்களான தம்பிக்க ஜயசேகர(வயது-45), முகமட் அஸீம்(வயது-32) ஆகியமூவரும் சம்பவ தினத்தன்றே உயிரிழந்திருந்தனர்.

இதில் தலையில் படுகாயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பாளருமான துமிந்த சில்வா தொடர்ந்து சில காலங்களுக்கு சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வேண்டும் என ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனை, பணிப்பாளர் எஸ். ஏ. கே. கமகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் 16 கைத்துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மச்சி புரொக்டர் தெரிவித்துள்ளளார். (உ-323)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளும்
இலவச ஆங்கில வகுப்பு
MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
11.10.2011 செவ்வாய் (போயா விடுமுறை தினம்- இன்று)
கீழுள்ள தாவதொரு பிரிவில் கலந்து பின்னர் வார அல்லது சனி, ஞாயிறு வகுப்பில் சேரலாம்
காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 3-4, 4-5, 5-6
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

தொழிற் பயிற்சிகள்
* Electronics சகல இலத்திரனியல் பொருள்கள் இயங்கும் முறை பழுதுகள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதங்கள்.
* Mobile Phone Repairing
சகல Phone களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 3 மாதம்.
* Air conditioning
சகல குளிர் சாதனங்கள் இயங்கும் முறைகள், பழுதுகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 6 மாதம்.
சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 15.10.2011 சனி, 9.30am
விவரங்களுக்கு
Jaffna Technical Institute
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். TP:0718561654
கிளை: New asian center 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். TP:0779254078
குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

வீடு வாடகைக்கு உண்டு
யாழ்.திருநெல்வேலியில் மூன்று படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. மூன்று வருடங்கள் (புதுப்பிக்கும் ஒப்பந்தம்) எழுதிக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0776059585, 0714841069

## மரண அறிவித்தல்கள்



### மார்க்கண்டு சொக்கநாதன்

புதுக்கோயிலடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சொக்கநாதன் நேற்று (10.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு மார்க்கண்டு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சரஸ்வதி மற்றும் உலகநாதன், இராமநாதன் காலஞ்சென்ற இலங்கைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரவதனியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோபனா மற்றும் மதுரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### இராஜகிளி பரஞ்சோதி



அரியாலையைச் சேர்ந்த இராஜகிளி பரஞ்சோதி கடந்த (09.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான இராசகிளியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூரணச்சந்திரன், கோவிந்தராசா ஆகியோரின் சகோதரியும், சுரேஸ் (இத்தாலி), கீதா, லதா, சுதா, ராதா (சுவிஸ்) ஜதா ஆகியோரின் பாசமிகு தாயும், லதா (இத்தாலி), இராஜமோகன், சந்திரசேகர், சிறீகரன் (சுவிஸ்), றெஜி குணசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், றொமினா (இத்தாலி), சுகன் (இத்தாலி), பானுஷன், நிரோகிஷன், தனிஸ்ரிகா, சிந்துஷன், சிந்துஷா, ஜெனோஷன், றுக்ஷன், வாதுஷா, பிறிட்டிஷா, லக்கிஷா, விதுசன், வினோசிகா, அபினதாப் (சுவிஸ்), அபிகாயில் (சுவிஸ்), வர்ணிகா, வருணிஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

656, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...
City & Guilds
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Engineering Qualifications
Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical
City & Guilds Progression Path
Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
Professional Engineer (Equivalent to BEng-UK)
Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
O/L → Certificate Level (IVQ Level 2) 5 months
Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.
அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.
இலகு தவணைக் கட்டண முறை.
City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.
City and Guilds UK பொறியியல் பாடநெறிகளை A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள் Certificate மட்டத்திலிருந்தும், கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்
மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது
0214 66 66 99 / 0771 067 394
SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk
Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.